147

# புதுமுறை
# நாமகள் வாசகம்



முதற் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1949
MADRAS

147/4-49

TB
031(?)
N49
87160

...டல் பப்ளிஷிங் ஹவுஸ்

...லபிளனேட் ...... சென்னை.1

புது முறை

# நாமகள் வாசகம்

முதற் புத்தகம்

ஆசிரியர்கள் :

வித்துவான் K. C. வன்மீகநாதன், B.O.L., L.T.;
துணைத்தமிழ்ப் பேராசிரியர், தமிழ்ப் பண்டிதப்
பயிற்சிப் பிரிவு, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி,
சைதாப்பேட்டை, சென்னை.

வித்துவான் E. M. ஆறுமுக செட்டியார்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸர் பி. தியாகராய செட்டியார்
உயர்நிலைப்பள்ளி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 OCT 1949
MADRAS

ஓரியண்டல் பப்ளிஷிங் ஹவுஸ்
286, எஸ்பிளனேட் (அப்பா பில்டிங்ஸ்)
சென்னை 1.

1949

காபிரைட்] [விலை அணா 14

முதற் பதிப்பு 1949

87160

TB
031(6)
N49

Printed at the Rajan Electric Press, Madras—1.

# முகவுரை

நம் தமிழ் நாட்டு மாணவர்கள் தமிழ்ச் சுவையை நன்கு நுகர்ந்து, இன்புறுமாறு செய்வது நம்மனோர் தலையாய கடமையாகும். இக்கருத்தினைக் கொண்ட அரசியலார் சென்ற மாதத்தில் உயர்நிலைப்பள்ளி மாணவர்கட்குரிய தமிழ்ப் பாடவியலைச் (Syllabus) சீரிய முறையில் திருத்தி, முடிவு கட்டி வெளியிட்டனர். அப்பாடவியலை ஒட்டியே 'புதுமுறை நாமகள் வாசகம்' என்னும் பெயர் பெற்ற இந்நூல் வரிசை எழுதப்பட்டுள்ளது. இவ்வரிசையின் சில தனிப்பட்ட இயல்புகளும், நோக்கங்களும் பின்வருவனவாம் :—

1. உரைநடைப் பகுதியின் நடை, எளியதிலிருந்து படிப்படியாகக் கடின நிலைக்குச் செல்கின்றது.

2. பொருள்களின் சுவைக்கேற்பப் பாடங்கள் நிரல்பட அமைக்கப்பட்டுள்ளன.

3. 'இலக்கணத்திற்கும் உரைநடைப் பாடத்திற்கும் நெருங்கிய தொடர்பு வேண்டும்; நடை முறையில் பயன்படக் கூடிய இலக்கணமே (Functional Grammar) மாணவர்கட்குக் கற்பிக்கப்படவேண்டும்' என்று புதுக் கல்வி முறை கூறுகின்றது. அக்கருத்தினை உட்கொண்டு, இலக்கண வகுப்பிற்கு உதவுமாறு, ஈண்டு மொழிப்பயிற்சிகள் தரப்பட்டுள்ளன.

4. தற்காலக் கல்வி முறையில் புது முறை வினுக்கள் (New Type Tests) பெரிதும் வற்புறுத்தப்படுகின்றன. அத்தகைய வினுக்களே 'சிறுவிடை வினுக்கள்' என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

5. ஈண்டு அமைந்துள்ள கட்டுரையாக்கப் பயிற்சிகள், மாணவர்களுடைய கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்ப்பதற்கு ஏற்ற முறையில் இயைந்துள்ளன.

6. அகராதி பார்க்கப் பயிற்சி பெறுவதற்கேற்ற வாய்ப்புகள் நம் மாணவர்கட்கு இல்லை. அக்குறையை

நீக்கக் கருதியே ஒவ்வோர் பாடத்தின் இறுதியிலும் 'பொருள்காண்க' என்ற பகுதியை அமைத்துள்ளோம். அச் சொற்களுக்குப் பொருள்கள் அகராதி வரிசையில், புத்தகத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் துணைகொண்டு, மாணவர்கள் அகராதி பார்க்கப் பயிற்சி பெறலாம்.

7. ஆங்கிலக் கல்வி முறை, இளைஞர்களின் சொற்பொழிவுகளுக்கு (Little men's Lectures) ஏற்ற வாய்ப்பு இருக்கவேண்டும் என்கிறது. அக்கருத்தினை உட்கொண்டு, ஐந்து நிமிஷப் பேச்சிற்கு உரிய பயிற்சிகள் 'கட்டுரையாக்கம்' என்ற தலைப்பில் தரப்பட்டுள்ளன.

8. உரைநடைப் பாடங்களிற் சில, சங்க நூல்களோடும், இடைக்கால நூல்களோடும் தொடர்புள்ளன. அப் பாடங்கள், அவற்றோடு தொடர்புள்ள நூல்களைப் படிக்க வேண்டும் என்னும் அவாவினை மாணவர்கட்கு எழுப்பும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன.

9. செய்யுட் பகுதியில் அமைந்துள்ள செய்யுட்கள் எளியவை; இனியவை; சுவை மிக்கவை; மாணவர்களுக்கு ஏற்றவை.

10. முடிவாகக் கூறுமிடத்து, மாணவர்களின் இயல் பூக்கத்திற்கும் (Instinct), உள்ளப் பண்பிற்கும் ஏற்ற பாடங்களே இயன்ற வரையில் இவ்வரிசையில் சேர்க்கப் பட்டுள்ளன.

மேற்கண்ட எம் நோக்கங்களுள் சிலவேனும் நிறைவேற அருள்செய்யுமாறு இறைவனை இறைஞ்சுகின்றோம். புது முறை நாமகள் வாசகத்தைப் படிக்கவும், நாமகளின் அருளைப்பெறவும் மாணவர்கட்கு வாய்ப்பு அளிக்குமாறு தமிழாசிரியர்களையும், தலைமையாசிரியர்களையும் வேண்டுகின்றோம்.

சென்னை
25—5—49

K. வேன்மீகநாதன்
E. M. ஆறுமுக செட்டியார்

# உள்ளுறை

## உரைநடைப் பகுதி


| பாடம் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பண்டித மோதிலால் நெஹ்ரு | .... | 1 |
| 2. | பழிக்கு அஞ்சிய பரமர் | .... | 10 |
| 3. | குடிமையும் கடமையும் | .... | 18 |
| 4. | கவின் மிக்க காஷ்மீர் | .... | 25 |
| 5. | இளமையில் துறந்த ஏந்தல் | .... | 32 |
| 6. | நெல் | .... | 39 |
| 7. | வீண் செலவு செய்த மகன் | .... | 47 |
| 8. | மன்னரின் மன மாற்றம் | .... | 54 |
| 9. | பசிப்பிணி மருந்து (உரையாடல்) | .... | 61 |
| 10. | கலையும் கலைச் செல்வரும் | .... | 67 |
| 11. | கிருஷ்ணதேவராயரும் அப்பாஜியும் | .... | 73 |
| 12. | துருவம் கண்ட தூயோன் | .... | 78 |
| 13. | வைட்டமின் | .... | 85 |
| 14. | மாடுகள் | .... | 90 |
| 15. | எங்கள் இன்பப் பிரயாணம் | .... | 95 |
| 16. | கன்னனின் கொடைத்திறம் (நாடகம்) | .... | 102 |

# செய்யுட் பகுதி


| | | | பக்கம் |
|---|---|---|---|
| I. | கடவுள் வாழ்த்து | .... | 108 |
| II. | நீதிப் பகுதி: | .... | |
| | 1. நல்வழி | .... | 110 |
| | 2. நன்னெறி | .... | 111 |
| | 3. நீதிவெண்பா | .... | 113 |
| | 4. நான்மணிக்கடிகை | .... | 114 |
| | 5. திருக்குறள் | .... | 116 |
| | 6. திருவேங்கட சதகம் | .... | 119 |
| III. | வரலாற்றுப் பகுதி | | |
| | 1. தேசிங்கு ராஜன் கதை | .... | 120 |
| | 2. பஞ்ச தந்திரம் | .... | 122 |
| | 3. அல்லியரசி மாலை | .... | 124 |
| IV. | வருணனைப்பகுதி | ... | 126 |
| V. | நாட்டுப்பற்று | ... | 128 |
| VI. | தனிப்பாடல்கள் | ... | 129 |
| | அகராதி | | |

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டெம்மைச்
சரியா சனம்வைத்த தாய்."



பண்டித மோதிலால் நெஹ்ரு

புது முறை

# நாமகள் வாசகம்

## முதற் புத்தகம்

---

### 1. பண்டித மோதிலால் நேஹ்ரு

"பாருக்குள்ளே நல்ல நாடு, எங்கள் பாரத நாடு" என்று பாரதியார் பாடியுள்ளார். பாரத நாட்டில் நல்லவர் பலர் வாழ்ந்திருந்தனர்; இன்றும் வாழ்கின்றனர். நமது பாரத நாடு பல ஆண்டுகள் அந்நியரின் ஆதிக்கத்தில் இருந்தது. இப்பொழுது அஃது உரிமை பெற்ற நாடு. பாரத நாட்டு மக்களாகிய நமக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டது. நம் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைப்பதற்காகத் தம் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் ஒருங்கே தியாகம் செய்த பெரியார்கள் பலர். காந்திஜி, சித்த ரஞ்சன தாஸ், பாலகங்காதர திலகர், மோதிலால் நெஹ்ரு போன்ற தியாகிகளை நாம் என்றும் மறக்கக் கூடாது. அவர்களுடைய உழைப்பின் பயனை இன்று நாம் அனுபவிக்கின்றோம்.

சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் **சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்** அவர்கள். ஆங்கில அரசாங்கத்தின் இறுதிக் கவர்னர் ஜெனரலாக இருந்த மவுண்ட் பேட்டன் பிரபு நமது ராஜாஜியினிடம் தம் பதவியை அளித்துவிட்டு, விடை பெற்றுச் சென்றார். அக் காட்சியை அடுத்த பக்கத்திலுள்ள படத்தில் பாருங்கள். நமது பாரத நாட்டின் முதலமைச்சர் யாரென்பது உங்களுக்குத் தெரியும். அவரே தியாகத்தின் உருவ மான பண்டித **ஜவாஹர்லால் நெஹ்ரு**. அந்தத் தியாக

மூர்த்தியை இந்தியாவுக்கு நன்கொடையாக அளித்த பெரியார், பண்டித மோதிலால் நெஹ்ரூ ஆவார். அவரது வரலாறு நம்மை நன்னெறியிற் செலுத்தும்; நாட்டுப் பற்றை நமக்கு ஊட்டும்.

1861-ஆம் ஆண்டு மே மாதம் ஆருவது நாளில் பண்டித மோதிலால் நெஹ்ரூ இப்புவியில் தோன்றினர். மோதிலால் பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்ன



ராஜாஜியும், மவுண்ட் பேட்டன் பிரபுவும்

தாகவே அவரது தந்தையார் இவ்வுலகைவிட்டு மறைந்தார். அதனல் மோதிலால் தமது தமையனராகிய நந்தலால் நெஹ்ரூவின் ஆதரவிலேயே வளர்ந்து வந்தார். நந்தலால் தமது தம்பியைக் கல்வி கேள்விகளில் சிறந்தவராகச் செய்தார். மோதிலாலுக்கு இளமை முதலே ஷேக்ஸ்பியர், மில்டன் முதலான ஆங்கிலப் புலவர்களின்

நூல்களைப் படிப்பதில் விருப்பம் அதிகம். மோதிலாலுக்கு ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி இருந்தது. அவர் 'பிளீடர்' பரீட்சையில் தேர்ந்து, அலஹாபாத்தில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். அத்தொழிலில் அவருக்கு வருவாய் மிகுதியாகக் கிடைத்தது. மோதிலால் பெருஞ் செல்வர் ஆனார்.

மோதிலால் நெஹ்ருவின் மனைவியார் சொரூபராணி என்பவர். அவர்களுக்கு ஜவாஹர் என்னும் புதல்வரும், விஜயலக்ஷ்மி, கிருஷ்ணபாய் என்னும் இரு புதல்வியரும் பிறந்தனர். பொருட் செல்வமும், மக்கட் செல்வமும் நன்கு அமைந்த மோதிலால் ஒரு குறையும் இன்றி வாழ்ந்து வந்தார். தமது ஒரே புதல்வராகிய ஜவாஹரைக் கல்வியிற் சிறந்தவராகச் செய்யவேண்டுமென்பது மோதிலாலின் அவா. ஆகவே அவர் ஜவாஹரை இளமையிலேயே கல்வி கற்கும் பொருட்டு இங்கிலாந்திற்கு அனுப்பினர். ஜவாஹரும் இங்கிலாந்தில் உயர்தரக் கல்வி கற்று, பாரிஸ்டர் பட்டம் பெற்று இந்தியாவிற்குத் திரும்பினர்.

மோதிலாலின் இல்லத்திற்கு அடிக்கடி விருந்தினர்கள் வந்துகொண்டிருப்பர். விருந்தினர்கள் தங்குவதற்கும், தமது குடும்பத்தினர் வாழ்வதற்கும் ஒரு பெரிய இடம் வேண்டுமென்று மோதிலால் எண்ணினர். அதனல் அவர் 'ஆனந்த பவனம்' என்னும் அழகிய மாளிகையைப் பெரும் பொருள் கொடுத்து விலைக்கு வாங்கினர். பிரயாகை என்ற இடத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 'கும்ப மேளா' என்னும் திருவிழா நடைபெறும். அக்காலத்தில் அத் திருவிழாவிற்குப் போகின்றவர்களுள் பலர் இடைவழியில் அமைந்த ஆனந்த பவனத்தில் தங்கியே மேற்செல்வர். ஆனந்த பவனம் எல்லாவிதமான வசதிகளும் அமைந்த ஒரு பெரிய மாளிகையாகும். மோதிலால் பிற்காலத்தில் வேறொரு புதிய மாளிகையைக் கட்டி அதற்கும் 'ஆனந்த பவனம்' என்ற பெயரையே அளித்தார். பிறகு அவர் தமது பழைய ஆனந்த பவனத்தை இந்தியாவிற்கே நன்கொடையாக அளித்துவிட்டார்.

அது முதல் ஆனந்த பவனம் காங்கிரசின் விடுதியாக ஆகி விட்டது. இக்காரணத்தால் அதன் பெயரும் 'சுயராஜ்ய பவனம்' என்று மாறியது.

1920-ஆம் ஆண்டு நெஹ்ருவின் குடும்பத்தில் ஒரு பெரு மாறுதல் ஏற்பட்டது. அதற்கு ஆதி காரணராக இருந்தவர் காந்திஜியே. காந்திஜி அந்த ஆண்டில்தான் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடங்கினர். அப்பொழுது நாடு முழுவதிலும் பெருங் கிளர்ச்சி உண்டாயிற்று. பல இடங்களில் குழப்பங்களும், கலகங்களும் தோன்றின. ஆங்கில அரசாட்சியில் இந்தியர்க்கு உள்ள வெறுப்பைக் காட்டும் பொருட்டே இந்த இயக்கம் தோன்றியது. தொடக்கத்திலேயே ஜவாஹர் இந்த இயக்கத்தில் சேர்ந்து மகாத்மாவுடன் ஒத்துழைக்கத் தொடங்கினர்; அவர் காட்டிய வழியையே பின்பற்றினர். சில ஆண்டுகள் கழித்து மோதிலாலும் அவ்வியக்கத்தில் சேர்ந்து விட்டார். காந்திஜியுடன் ஒத்துழைக்கத் தொடங்கினர்; நாட்டிற்குத் தொண்டு செய்வதில் முனைந்து நின்றார்.

மோதிலால் நாட்டுத்தொண்டில் ஈடுபட்டவுடன் முதலில் தம் வழக்கறிஞர் தொழிலை விடுத்தார். அதனல் பொருள் வருவாய் நின்றுவிட்டது. எனினும் மோதிலால் அதனைப் பொருட்படுத்தவில்லை. அவர் தமது குடும்பச் செலவுகளில் பலவற்றைக் குறைத்துவிட்டார்; ஆடம்பர வாழ்க்கையை அகற்றினர்; எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். தந்தையும் தனயரும் ஒருமுகமாக நின்று தமது காரியங்களைச் செய்யத் தொடங்கினர். பெருஞ் செல்வத்தில் திளைத்த தமது தந்தையார் நாட்டின் விடுதலைக்காகத் தம் சுகத்தையெல்லாம் வெறுத்தது கண்ட ஜவாஹர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. நம் நாடு சுதந்திரம் பெறுவதற்காகத் தந்தையும் மைந்தரும் பல முறைகள் சிறைக்குச் சென்றனர்.

மோதிலால் முதன்முறை சிறைக்குச் செல்லும் பொழுது தமது நண்பர்களுக்கு ஒரு செய்தி அனுப்பினர். அச்செய்தியிலிருந்து அவருடைய மனப்பான்மை நன்கு

விளங்கும். அதன் சுருக்கம் பின் வருவாறு:- "நண்பர்களே! நானும் எனது மைந்தரும் சிறைக்குச் செல்கின்றோம். எதன் பொருட்டு? நாட்டிற்கு விடுதலை கிடைக்கும் பொருட்டு; ஆங்கில அரசாங்கத்திற்கு நம் கட்டுப்பாட்டை எடுத்துக்காட்டும் பொருட்டு. நான் உங்களிடையே இருந்து என்னால் இயன்ற அளவு உழைத்தேன். இனியும் உழைப்பேன். உங்களை நான் ஒன்று வேண்டிக் கொள்கின்றேன். அரசாங்கத்திற்கு எதிராக நடைபெற்று வரும் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துங்கள். நம் நாடு சுதந்திரம் பெறும் பொருட்டு உழைப்பதற்காகப் பல்லாயிரக் கணக்கான தொண்டர்களைத் திரட்டுங்கள். சிறை செல்லச் சிறிதும் தயங்காதீர்கள். அதுவே சுதந்திரம் பெறுவதற்கு வழியாகும். கலகம் செய்யாதீர்கள். பிணக்குகளை அகற்றுங்கள். ஒன்றுபட்டு எழுவீர்! உழைப்பீர்! சிறை புகுவீர்!" மோதிலாலின் இச்செய்தி கேட்ட மக்கள் புத்துணர்ச்சி பெற்று எழுந்தனர்.

பின்பு மோதிலாலும், சித்தரஞ்சன தாஸரும் சேர்ந்து 'சுவராஜ் கட்சி' என்ற ஒரு புதிய கட்சியைத் தொடங்கினர். அதன் தலைவராக இருந்தவர் சித்தரஞ்சன தாஸரே. அவர் இறந்த பிறகு மோதிலால் அக்கட்சியின் தலைவரானார்; டெல்ஹி சட்ட சபையில் அங்கத்தினர் ஆனார். அரசாங்கத்தின் எதிர்க் கட்சிக்குத் தலைவராக இருந்தார். அப்பொழுது அவர் அரசாங்கத்திற்கு அளித்த தொல்லைகளுக்கு எல்லையில்லை. அவர் செய்த சொற்பொழிவுகளுக்கு அளவில்லை. அவரது சொற்பொழிவுகள் உணர்ச்சி வாய்ந்தவை. அவற்றைக் கேட்டவர்கள் அவர் சொற்படி நடக்கத் தயங்க மாட்டார்கள்.

1930-ஆம் ஆண்டில் காந்திஜி உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினர். அதன் பயனாக காந்திஜியும், ஜவாஹரும் சிறைப்பட்டனர். உப்பு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு மோதிலால் ஆதரவளித்து, நல்வழிகாட்டி ஊக்கினர். அதனால் ஆங்கில அரசாங்கம் அவரையும் சிறைப்படுத்தியது. அப்பொழுது அவர் உடல்

நலம் குன்றியிருந்தார். சிறை சென்ற பத்து வாரங்களில் அவரது உடல்நிலை கவலையைத் தரத்தக்கதாகப் போய் விட்டது. அதனால் அரசாங்கம் அவரை விடுதலை செய்து விட்டது. 1931-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆரும் நாளில் மோதிலாலின் உயிர் அவர் உடலைவிட்டுப் பிரிந்தது. அப்பொழுது ஜவாஹரும் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருந்தார். அதனால் தந்தையின் உயிர் பிரியும் காலத்தில் தனயர் அருகிலேயே இருக்க முடிந்தது.

மோதிலாலின் பிரிவினைக் கேள்வியுற்ற இந்தியா முழுவதும் துயரக்கடலில் ஆழ்ந்தது. தேசத் தலைவர்கள் யாவரும் அலஹாபாத்தில் கூடினர். மோதிலாலின் பூத உடம்புக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகள் யாவும் அமைதியாக நடைபெற்றன. அப்பொழுது மதன் மோஹன மாளவியாஜி, காந்திஜி முதலியவர்கள் உருக்கமாகப் பேசினர். காந்திஜி பேசியதன் சுருக்கம் வருமாறு: "மோதிலால் நெஹ்ரூவின் விருப்பம் ஒன்றுதான். சுதந்திரம் அடைய வேண்டும் என்பதே அது. அதன்பொருட்டே அவர் வாழ்ந்தார்; உழைத்தார்; துன்பமுற்ருர்; இன்று இறந்தார். 'இந்தியா விடுதலை பெறும் வரையில் நான் நிம்மதியாக இருக்க மாட்டேன்' என்று ஒவ்வொருவரும் இந்த இடத்தில் சத்தியம் செய்துகொள்ளுங்கள். அப்பொழுதுதான் மோதிலாலின் ஆன்மா சாந்தி அடையும்." மோதிலாலின் பிரிவைப்பற்றி வெளியிட்ட செய்தியில் காந்திஜி, "கணவனை இழந்த ஒரு மனைவியின் நிலையைக் காட்டிலும் எனது நிலை மிகவும் இரங்கத்தக்கது. விதவை ஒருத்தி தனது கணவனின் நற்குணங்களைப் பின்பற்றலாம். ஆனால் மோதிலாலின் நற்குணங்கள் எனக்கு வருமோ? மோதிலால்பிரிந்ததனால் உண்டான நஷ்டத்தை என்னால் ஈடுபடுத்தவே முடியாது" என்று எழுதியுள்ளார்.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக மோதிலால் நெஹ்ரூ தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்தார் என்று முன்பு கூறப்பட்டது. அஃது எவ்வளவு உண்மையானது என்று இப்பொழுது தெரிகின்றதல்லவா?

தமது உடல் நலம் குன்றியிருந்த காலத்திலும் தேசத்தின் விடுதலைக்காக அவர் சிறை சென்றார்; ஆனந்தபவனத்தை காங்கிரசுக்கு அளித்தார்; பெரும் பொருள் வருவாய்க்குக் காரணமாக இருந்த தம் வழக்கறிஞர் தொழிலை விடுத்தார். நாட்டுத் தொண்டு செய்யும் பொழுதே இறந்தார். இவற்றிற்கெல்லாம் மேலாக அவர் தமது ஒரே மைந்தராகிய ஜவாஹர்லால் நெஹ்ரூவை நமக்கு நன்கொடையாக அளித்திருக்கிறார். அத்தகைய பெரியாரை நாம் மறக்க முடியுமோ? அவரது வரலாற்றை விரிவாக அறிந்து, அவருடைய நற்பண்புகளை நீங்கள் கைக்கொள்ள வேண்டும். அதனால் உங்களுக்குப் பெரும் பயன் கிடைக்கும் என்பது திண்ணம்.



பண்டித ஜவாஹர்

பொருள் காண்க

பார், ஆவி, தியாகி, இறுதி, அளித்து, அமைச்சர், நன்னெறி, புல்மை, புவி, கேள்வி, வருவாய், இன்றி, அவா, இல்லம், விடுதி, ஆதி, தனயர், திளைத்த, பிணக்கு, குன்றி, பண்பு, திண்ணம்.

சிறுவிடை வினாக்கள்

1. இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக உழைத்த பெரியார்களுள் மூவர் பெயர்களைக் குறிப்பிடுக.

2. சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் யார்?

3. தற்பொழுது நம் நாட்டின் முதலமைச்சர் யார்?

4. மோதிலால் நெஹ்ரூ இளமையில் யாருடைய ஆதரவில் வளர்ந்து வந்தார்?

5. மோதிலாலின் மக்கள் யாவர்?

6. மோதிலால் ஆனந்த பவனத்தை விலைக்கு வாங்கியது ஏன்?

7. மோதிலால் ஆனந்த பவனத்திற்கு வைத்த வேறு பெயர் என்ன? அப்பெயரை எப்பொழுது வைத்தார்?

8. சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடங்கியவர் யார்?

9. மோதிலால் தமது வழக்கறிஞர் தொழிலை எப்பொழுது விடுத்தார்? ஏன்?

10. "கணவனை இழந்த ஒரு மனைவியின் நிலையைக் காட்டிலும் எனது நிலை இரங்கத்தக்கது": சந்தர்ப்பம் வரைக.

11. தேசத்திற்குச் சுதந்திரம் கிடைப்பதற்காக மோதிலால் செய்த தியாகங்களுள் ஒன்றினைக் குறிப்பிடுக.

12. கீழே உள்ள வாக்கியங்களில் முடிக்குஞ் சொற்கள் விடப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாக்கியத்திற்கு எதிரிலும் பல விடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து பொருத்தமான ஒன்றைப் பொறுக்கி அமைத்து வாக்கியத்தை முடித்துக் காட்டுக:—

(அ) ஆங்கில ஆட்சியின் இறுதிக் கவர்னர் ஜெனரல்— (வேவல் பிரபு, வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு, மவுண்ட் பேட்டன் பிரபு, லின்லித்கோ பிரபு, இர்வின் பிரபு)

(ஆ) உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியவர்——— (பாலகங்காதர திலகர், காந்திஜி, சித்தரஞ்சன தாஸ், ஜவாஹர்லால்)

(இ) கும்பமேளா நடைபெறும் இடம்———(கும்பகோணம், டெல்ஹி, பிரயாகை, காஷ்மீர், காசி)

(ஈ) ஷேக்ஸ்பியர் என்பவர் ஒரு———(பத்திரிகையாசிரியர், நாடகாசிரியர், சிறுகதை ஆசிரியர், போர்வீரர்.)

## கட்டுரையாக்கம்

1. 'நமது தேசத்தலைவர்கள்' என்பதுபற்றி உங்கள் வகுப்பு மாணவர் சங்கத்தில் ஐந்து நிமிடப் பேச்சொன்று நிகழ்த்தக் குறிப்புகள் தயார் செய்க.

2. 'மோதிலால் நெஹ்ரூவின் தேசப்பற்று' என்பது பற்றி எட்டு வரிகள் எழுதுக.

3. முதன்முறை மோதிலால் சிறைக்குச் சென்ற பொழுது தமது நண்பர்களுக்கு விடுத்த செய்தியைச் சுருக்கி வரைக.

4. மோதிலாலினிடம் காந்திஜி வைத்திருந்த அன்பும் மதிப்பும் எவ்வாறு வெளிப்படுகின்றன? பத்து வரிகளில் எழுதுக.

## மொழிப் பயிற்சி

1. **பிரித்துக் காட்டுக:**—இப்பொழுது, நாட்டுப்பற்று, பெற்றிருந்தார், மக்கட்செல்வம், பன்னிரண்டு, பிற்காலம், முற்காலம், ஒத்துழைக்க, மனப்பான்மை, பெருஞ்செல்வம், நற்குணம்.

2. **புணர்த்திக் காட்டுக:**—இ+புவி; அ+தொழில்; பொருள் +செல்வம்; கேள்வி+உற்ற; துயரம்+கடல்; பூத+உடம்பு; நல்+பண்பு; துன்பம்+உற்றார்.

3. பின்வருவனவற்றை உங்கள் வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக. அவ்வாக்கியங்களில் **பொருட்பொருத்தம்** இருக்க வேண்டும்:—

கல்வி கேள்வி, உடல் பொருள் ஆவி, கட்டுப்பாடு, ஒத்துழைப்பு, ஈடுபட்டிருந்தார், கைக்கொள்ள.

4. 'ஜவாஹர்லால் நெஹ்ரு நம் நாட்டின் முதலமைச்சர்': இவ்வாக்கியம் ஒரு செய்தியைக் குறிப்பிடுகின்றது. அதனால் இதற்குச் **செய்தி வாக்கியம்** என்று பெயர். இப்பாடத்திலிருந்து நான்கு செய்தி வாக்கியங்களைத் தொகுத்து எழுதுக.

## 2 பழிக்கு அஞ்சிய பரமர்

பாண்டியர்களின் தலைநகரம் மதுரை. கூடல், ஆல
வாய் என்பன மதுரையின் வேறு பெயர்கள். மதுரையில்
தான் முற்காலத்தில் தமிழ்ச் சங்கம் இருந்தது. மதுரையில்
மீனாட்சியம்மன் கோயில் உள்ளது. அங்குள்ள சிவபெரு
மானுக்குச் சோமசுந்தரர், சொக்கலிங்கர் முதலிய பெயர்
கள் உள்ளன. சோமசுந்தரக் கடவுள் அறுபத்துநான்கு
திருவிளையாடல்கள் செய்திருக்கிறார். அவற்றுள் பழிக்
கஞ்சிய திருவிளையாடலும் ஒன்று. அறுபத்துநான்கு திரு
விளையாடல்களையும் விரிவாகக் கூறும் தமிழ் நூலுக்குத்
திருவிளையாடற் புராணம் என்று பெயர். இதனை அழகாகப்
பாடியருளியவர் பரஞ்சோதி முனிவர் என்பவர். திருவிளை
யாடற் புராணத்தை வேறு சிலரும் தமிழில் பாடியிருக்கின்
றனர். அடியவர்க்கு எளியவராகிய சிவபெருமான் பழிக்கு
அஞ்சி, பாண்டியனுக்கு உண்மையை விளக்கிய
வரலாற்றை இப்பாடத்தில் படிப்போம்.

இராமநாதபுரம் ஜில்லாவில் திருப்புத்தூர் என்று
ஒரூர் உள்ளது. அவ்வூரைச் சேர்ந்த அந்தணன் ஒரு
வன் தனது மனைவியுடனும், மகவுடனும் மதுரை செல்லக்
கிளம்பினான். அவன் காட்டு வழியே செல்ல நேரிட்டது.
வெயிலும் மிகுதியாக இருந்தது. அப்பொழுது அவனது
மனைவிக்கு நீர்வேட்கை உண்டாயிற்று. அவள் தனது நீர்
வேட்கையைத் தன் கணவனிடம் கூறினாள். உடனே
அந்தணன் தன் மனைவியையும், குழந்தையையும் ஒரு
பெரிய ஆலமரத்தின் அடியில் இருத்தி, நீர்நிலையைத்
தேடிச் சென்றான். பார்ப்பனி தன் குழந்தையுடன் ஆல
மரத்தின் நிழலில் படுத்திருந்தாள்.

அங்கிருந்த ஆலமரம் மிகப் பெரியது. அம்மரத்தில்
பறவைகள் பல வந்து தங்குவதுண்டு. ஒருமுறை வேட
னொருவன் அம்மரத்தில் இருந்த பறவையொன்றைக்
கொல்வதற்காக அம்பினை விடுத்தான். அவ்வளவில்
பறவை பறந்து போய்விட்டது. வேடன் விடுத்த அம்போ

அம்மரத்திலேயே சிக்கிக்கொண்டது. வேடனும் வேறிடம் சென்றுவிட்டான். அந்த அம்பு சிக்கிக் கொண்டிருந்த இடத்திற்கு நேர் கீழேதான் பார்ப்பனி தன் மகவுடன் படுத்திருந்தாள்.

பார்ப்பனி அன்று அவ்விடத்தில் இறக்கவேண்டும் என்பது கடவுளின் விதி. அவளுக்கென்று விதிக்கப்பட்டிருந்த வாழ்நாட்கள் கழிந்துவிட்டன. பார்ப்பனி மர நீழலில் படுத்திருந்தபொழுது ஒரு பெருங்காற்று வீசியது. அதனுல் மரத்தில் சிக்குண்டிருந்த அம்பு மரத்திலிருந்து நழுவியது. அந்தோ பரிதாபம்! அவ்வம்பு நேராகக் கீழே விழத் தொடங்கி, அங்குப் படுத்திருந்த பார்ப்பனியின் மார்பில் தைத்து உருவியது. அம்பு தைக்கப்பெற்ற பார்ப்பனி உடனே உயிர் துறந்தாள். அவளுடல் இரத்த வெள்ளத்தில் கிடந்தது. அவளது அருகில் இருந்த குழந்தையோ ஒன்றையும் அறியமாட்டாமல் அழுதுகொண்டிருந்தது.

இந்நிலையில் வேடனெருவன் அம்மரத்தின் வேறு புறத்திற்கு வந்து சேர்ந்தான். அவன் மரத்தின் முன்புறத்தில் அம்பு தைக்கப்பெற்று இறந்து கிடந்த பார்ப்பனியைக் கவனிக்கவில்லை. அவனது மனம் உணவு தேடுவதிலேயே பதிந்திருந்தது. அன்று அதுவரையில் அவன் வேட்டையாடுவதற்காகக் காட்டில் அலைந்து திரிந்து கொண்டிருந்தான். விலங்கு எதுவும் அவனுக்கு அகப்படவில்லை. ஆலமரத்தில் வந்து அமரும் பறவைகளையாவது கொன்று சிறிது களைப்பாறிச் செல்லலாம் என்ற கருத்துடனேயே அவன் அங்கு வந்தான். எனவே அவன் வளைத்த வில்லுடனும், தொடுத்த அம்புடனும் அம்மரத்தின் கிளைகளைப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தான்.

அவ்வேளையில் நீர் கொண்டுவரச் சென்ற மறையவன் தன் மனைவியிருக்கும் இடத்திற்கு வந்துசேர்ந்தான்; அம்பு தைக்கப்பெற்று, இரத்த வெள்ளத்தில் மூழ்கி இறந்து கிடந்த தன் மனைவியைக் கண்டான். அவன் மனம் என்ன பாடு படும்! கதறினுன்; புலம்பினுன்; ஏங்கி

னான்; 'இப்பெண் பழியை ஏற்றார் யாரோ' என்று அழு தான். தன் மனைவியைக் கொன்ற பாதகனைப் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்று அவன் கருதினான். எனவே அவன் அங்குமிங்கும் தன் பார்வையைச் செலுத்தினான். யாரையும் காணவில்லை. மரத்தின் வேறு புறத்திற்குச் சென்று பார்க்கலாம் என்று அவ்விடத்திற்குச் சென் றான். வளைத்த வில்லுடன் நின்ற வேடனை அந்தணன்



கண்ணுற்றான். அவ்வளவில் அந்தணனுக்குக் கோபம் பொங்கியது. 'இவ்வேடனே எனது மனைவியைக் கொன்று பழி பூண்டவன்' என்று முடிவு செய்த அந்த ணன் அவ்வேடனது கையைப்பற்றி இழுத்து வந்து, பார்ப்பனி கிடந்த இடத்தை அடைந்தான். அம்பு பாய்ந்து இறந்து கிடந்த பார்ப்பனியைக் கண்ட வேடன் துணுக் குற்றான். அந்தணன் அவ்வேடனைப் பலவாறு ஏசி, அவனை மதுரையில் அரசு புரிந்த பாண்டிய மன்னனிடம்

அழைத்துச் செல்லத் தொடங்கினன். இறந்த மனைவியைத் தூக்கித் தன் தோளின்மேல் போட்டுக் கொண்டான்; குழந்தையை ஒரு கையால் அணைத்துக் கொண்டான்; மதுரையில் பாண்டியனது அரண்மனையை நோக்கிச் சென்றான். தன்மேல் தவறில்லையாதலால் வேடனும் அஞ்சாது உடன் சென்றான்.

அந்தணன் பாண்டிய அரசனிடம் தன் மனைவி இறந்ததைக் கூறி, அம்பினை எய்தவன் வேடனே என்று இயம்பினன். அரசன் வேடனை நோக்கி, 'வேடா, நீ ஏன் பார்ப்பனியைக் கொன்றாய்?' என்று கேட்டான். அதற்கு வேடன், 'ஐயா, யான் கொல்லவில்லை. கொன்றவரையும் நான் அறியேன்' என்றான். அரசன் மீட்டும் மீட்டும் அவனை அச்சுறுத்திக் கேட்டான். முதலில் சொன்ன விடையையே வேடன் கூறி வந்தான். அரசனும், 'இவ் வேடன் பார்ப்பனியைக் கொன்றிருக்க முடியாது. மிருகம், பறவை முதலியவற்றைத்தானே வேடர்கள் கொல்வர். இப்பார்ப்பனியைக் கொல்வதனால் இவனுக்கு என்ன பயன் கிடைக்கும்?' என்று சிந்தித்தான். அவனால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. தெய்வத்தின் அருளினலேயே உண்மை வெளிப்பட வேண்டும் என்று பாண்டியன் ஒரு முடிவுக்கு வந்தான்.

அரசன் வேடனைச் சிறையில் அடைத்தான்; இறந்து போன தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து திரும்புமாறு அந்தணனை அனுப்பினன்; விரைந்து கோயிலை அடைந்தான்; உண்மையை விளக்கியருளுமாறு ஈசனை வேண்டி நின்றான். அப்பாண்டிய அரசன் சிறந்த பக்தன். கடவுள் தமது அடியவனுக்கு உண்மையைக் கூற உள்ளங் கொண்டார். உடனே வானில் ஓரொலி எழுந்தது. 'அன்ப! இம் மதுரை நகரின் புறம்பேயுள்ள வணிகத் தெருவில் இன்றிரவு திருமணம் ஒன்று நடக்க இருக்கின்றது. நீ அங்கு வா. உனக்கு உண்மையை விளக்குகின்றோம்' என்பதே அவ்வொலியாகும். அவ்வுரை கேட்ட பாண்டியன் பெரு வியப்படைந்தான். அதன்படியே அர

சன் அன்றிரவு மாறுவேடம் பூண்டு, அந்தணனுடன் வணிகத் தெருவில் திருமணம் நடைபெறும் வீட்டை அடைந்து, ஒருபுறத்தே தங்கியிருந்தான்.

திருமணத்திற்குரிய நிகழ்ச்சிகள் அவ்வீட்டில் ஒவ்வொன்முக நடைபெற்றன. அரசனும் அந்தணனும் உண்மையை அறிவதற்கு ஆவலுடன் இருந்தனர். அப்பொழுது அவர்களுக்கு இருவர் உரையாடும் குரல்மட்டும் இறைவனின் அருளால் கேட்டது. உரையாடல் நிகழ்த்திய இருவரும் கூற்றுவனின் தூதுவர்களே ஆவர். அவர்களுடைய உரையாடல் பின்வருமாறு :—

முதல் தூதன் :—நண்பா! இன்று இவ்வீட்டில் திருமணம் நடைபெறப்போகின்றது. ஆனல் இம்மணமகனது உயிர் நீங்கும் காலம் இதுவே என்று கடவுள் விதித்துள்ளார். அவனது உயிரைக் கவரவே நாம் இங்கு வந்திருக்கிறேம். மணமகனே நோயற்ற உடம்புடன் இருக்கிறன். இவனது உயிரைக் கவர்வது எப்படி?

இரண்டாவது தூதன் :—நண்பா! இதற்கோ கலங்குகின்றய்? நன்று நன்று! நாம் நினைத்தால் ஒருவரது உயிரைப் பிரிக்க முடியாதா? அன்று ஆலமரத்தின் நீழலில் படுத்திருந்த பார்ப்பனிக்கு நோய் ஏதேனும் இருந்ததா? காற்று வீசியபொழுது, ஆலமரத்தில் சிக்கிக்கிடந்த அம்பைக் கீழே தள்ளி, அவள் மார்பில் தைத்துருவச் செய்து, அவளது உயிரைக் கவரவில்லையா?

முதல் தூதன் :—ஆம் ஆம். உண்மைதான். அன்று அவளது உயிரைக் கவர்வதற்கு வசதியாக அம்பு அகப்பட்டது. இன்று இம்மணமகனது உயிரைக் கவர்வதற்கு என்ன வழி இருக்கிறது?

இரண்டாவது தூதன் :—இதுதானு தெரியாது? நான் ஒரு தந்திரம் கூறுகின்றேன் கேள். தாலி கட்டும் நேரத்தில் இவ்வீட்டில் பேரொலி எழும்பும். அப்பொழுது நாம் இவ்வீட்டின் கொல்லைப்புறத்தில் கட்டியுள்ள பசுவை அவிழ்த்து, மணமகனை நோக்கி வெருட்டுவோம்; மணமகனைப் பசு முட்டுமாறும் செய்வோம். அப்பொழுது மணமகன் இறந்து போய்விடுவான் அல்லவா?

முதல் தூதன் :—சரி சரி. இதுவே நல்ல யோசனை.

மேற்கண்ட உரையாடல் முழுவதும் இறைவனின் திருவருளால் பாண்டியனுக்கும், அந்தணனுக்கும் கேட்டது. அவ்விருவரும் அடைந்த வியப்பிற்கு அளவில்லை. அப்பொழுது திருமண வீட்டில் பலவகை வாத்தியங்களின் ஒலி எழுந்தது. சில பெண்டிர் பாடினர்; சிலர் வாழ்த்தினர். அப்பொழுது அவ்வீட்டின் புறத்தே கட்டப்பட்டிருந்த பசு தாம்பினை அறுத்துக்கொண்டு கூட்டத்தை நோக்கி ஓடிவந்தது. அதனைக் கண்டவர்கள் அஞ்சி அலறி ஓடினர். அவ்விடத்திற்கு ஓடிவந்த பசு மணவணியுடன் இருந்த மணமகனை முட்டியது. அதன் கொம்பு மணமகனின் மார்பில் அழுந்தப் பதிந்தது. அவனும் உயிர் துறந்தான். மணமகன் பிணமகன் ஆனான். மணப்பறை பிணப்பறை ஆயிற்று. பெண்டிர் வாழ்த்தொலி அழுகையொலியாக மாறியது. என்னே பரிதாபம்! கூற்றுவனின் தூதுவர்கள் பேசிக்கொண்டவாறே யாவும் நடைபெற்றன.

நடந்த நிகழ்ச்சியைக் கண்ட வேந்தனும் வேதியனும் வியப்புக்கடலுள் மூழ்கினர். அரசன் அந்தணனுடன் விரைந்து அரண்மனையைச் சேர்ந்தான்; பார்ப்பனி இறந்த விதத்தை யாவர்க்கும் விளக்கினான்; இறையருளை எடுத்தியம்பினான். வேடனும் விடுதலை செய்யப்பட்டான். அரசன் அவனுக்குப் பெரும் பொருள் கொடுத்து அவனிருப்பிடத்திற்கு அனுப்பினான். அந்தணனுக்கும் பொருள் கொடுத்து, வேறு மணம் செய்துகொள்ளுமாறு செப்பி விடுத்தான். பிறகு அரசன் அவ்வூர்க் கோயிலில் நுழைந்து இறைவனைப் பணிந்து துதித்துச் சிறப்புக்கள் பல செய்தான்.

இவ்வாறு சொக்கலிங்கர் பழிக்கு அஞ்சி, பாண்டியனுக்கு உண்மையை விளக்கிய காரணத்தால், அவரை உலகோர் 'பழியஞ்சிய சொக்கர்' என்று புகழ்கின்றனர். இவ்வரலாற்றைப் பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடற் புராணத்தில் இனிய பாடல்களாகப் பாடியுள்ளார். அப்பாடல்கள் எளிமையும், தெளிவும் வாய்ந்தவை.

### பொருள் காண்க

மகவு, வேட்கை, நீர்நிலை, மறையவன், துணுக்குற்றுன், இயம்பினுன், அச்சுறுத்தி, வான், புறம்பு, கூற்றுவன், மணவணி, இறை, செப்பு.

### சிறுவிடை வினுக்கள்

1. மதுரையின் வேறு பெயர்கள் யாவை?

2. திருவிளையாடற் புராணத்தைத் தமிழிற் பாடிய இருவர் யாவர்?

3. பார்ப்பனி எவ்வாறு இறந்தாள்?

4. ஆலமரத்தடிக்கு வேடன் வந்தது ஏன்?

5. அந்தணன் வேடன்மேல் சுமத்திய பழி யாது?

6. வேடனை அந்தணன் யாரிடம் அழைத்துச் சென்றுன்?

7. கோயிலுக்குச் சென்று அரசன் ஈசனை யாது வேண்டினுன்?

8. பாண்டியனை எங்கு வருமாறு கடவுள் கட்டளையிட்டார்? ஏன்?

9. கூற்றுவன் என்னும் பெயர் யாரைக் குறிக்கும்? ஏன்?

10. மணமகன் எவ்வாறு இறந்தான்?

11. கீழே சில ஊர்களின் பெயரும், ஊர்களில் உள்ள கோவில்களின் பெயரும் முறை மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாக மாற்றி எழுதுக:—

மதுரை—கபாலீசுவரர் கோவில்

தஞ்சை—உச்சிப் பிள்ளையார் கோவில்

திருச்சி—பார்த்தசாரதி கோவில்

மயிலாப்பூர்—மீனுட்சியம்மன் கோவில்

திருவல்லிக்கேணி—பிருகதீசுவரர் கோவில்

### கட்டுரையாக்கம்

1. எக்காரணங்களால் அந்தணன் வேடன்மீது பழி சுமத்திஞன்? (ஆறு வாக்கியங்கள் வரைக.)

2. இறைவர் அடியார்க்கு எளியவர் என்னும் உண்மையை விளக்கும் நிகழ்ச்சியை எட்டு வாக்கியங்களில் எழுதுக.

3. கூற்றுவனின் தூதர்கள் உரையாடுவது போல் உங்கள் சொந்த வாக்கியங்களில் ஓர் உரையாடல் தயார் செய்க.

4. ஈசனுக்கு 'பழி'பஞ்சிய சொக்கர்' என்று பெயர் வந்த காரணத்தைப் பத்து வரிகளில் வரைக.

## மொழிப் பயிற்சி

1. **பிரித்துக் காட்டுக:**—அவ்வூர், பெருங்காற்று, அங்குமிங்கும், தவறில்லை, ஓரொலி, தைத்துருவ, அப்பொழுது, மணவணி, பாடியுள்ளார், வாழ்த்தொலி.

2. **புணர்த்திக் காட்டுக:**—தங்குவது + உண்டு; அ + இடம்; அ + அளவு; அன்று + இரவு; நோய் + அற்ற; திரு + அருள்; இறை + அருள்.

3. "மணமகனது உயிரைக் கவர்வது எப்படி?" இவ்வாக்கியம் **வினாப் பொருளில்** அமைந்துள்ளது. ஆகவே இது **வினா வாக்கியம்.** கூற்றுவனது தூதுவர்களின் உரையாடலிலிருந்து மூன்று வினா வாக்கியங்களைப் பொறுக்கி எழுதுக.

4. பாண்டியர்களின் தலைநகரம் மதுரை; நீ அங்கு வா: இவ்விரண்டு வாக்கியங்களுக்கும் உள்ள இலக்கண வேறுபாடு யாது?

# 3. குடிமையும் கடமையும்

நம்முடைய பாரத நாட்டின் சரித்திரத்தில், 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் நாள் மிகவும் முக்கியமான நாளாகும். அந்நாளில்தான் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது. அன்று வரையில் நம்மை ஆங்கிலர் ஆண்டு வந்தனர். அந்த நன்னாள் முதல் நமது பிரதிநிதிகளே நம்மை ஆளத் தொடங்கிவிட்டனர். இனி நமக்குக் குறையில்லை. நாம் நல்ல குடிகளாக இருந்தால் அரசாங்கம் நமக்கு எல்லாவித நன்மைகளையும் செய்வது எளிது. ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைத் தவறாது செய்ய வேண்டும். நம் கடமைகளை நாம் செய்யத் தவறினால் அரசாங்கத்தால் தன் காரியங்களை நன்றாகச் செய்ய முடியாது. நல்ல குடிகளின் பண்புகளையும், கடமைகளையும் சுருக்கமாக இப்பாடத்தில் படிப்போம்.

ஆதிகாலம் முதல் மக்கள் ஒருவரை ஒருவர் அண்டியே பிழைத்து வருகின்றனர். நாம் நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் தயாரித்துக்கொள்ள முடியாது. நாம் பல பொருள்களுக்குப் பிறரை எதிர்பார்த்தே தீர வேண்டியிருக்கிறது. மக்கள் கூட்டம் கூட்டமாகவும், இனம் இனமாகவும் வசிக்கத் தொடங்கியதன் காரணத்தை ஆராய்ந்து பாருங்கள். கூடி வாழ்தலினால் எவ்வளவோ நன்மைகள் உண்டாகும். அதனால்தான் குடும்பம், கிராமம், பட்டணம் முதலியவை ஏற்பட்டன. ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளவேண்டும் என்று திருவள்ளுவர் போன்ற பெரியார்கள் வற்புறுத்தியுள்ளனர். ஆகவே ஒற்றுமையுணர்ச்சி, உதவி செய்யும் மனப்பான்மை முதலியன நம்மிடம் நன்கு அமைந்திருக்கவேண்டும்.

நாம் நமது தினசரி வாழ்வில் பிறருக்கு எவ்வளவோ நன்மைகளையும் உதவிகளையும் செய்யலாம். புகைவண்டி, மின்சாரவண்டி, பஸ் முதலியவற்றில் பிரயாணம் செய்யும் பொழுது பிறர்க்கு உதவி செய்ய எவ்வளவோ வாய்ப்புகள் இருக்கின்றன. புகைவண்டியில் செல்கின்ற சிலர், தம்

மூட்டை முடிச்சுகளை உட்செல்லும் பாதையிலேயே வைத்துவிடுகின்றனர். அதனல் புகைவண்டியில் ஏறுகின்றவர்களுக்கு எவ்வளவு கஷ்டம் உண்டாகிறது! வயது முதிர்ந்த சிலர் கால் தடுக்கி விழுகிருர்கள்; வண்டிக்குள் ஏற முடியாது தவிக்கிருர்கள்; நிற்க இடமில்லாமல் துன்புறுகிருர்கள். உட்காரும் பலகைகளில் சிலர் படுத்துக் கொண்டுவிடுகிருர்கள். யாரேனும் அவர்களை எழுந்து அமருமாறு கூறினல் அவர்களுக்குக் கோபம் வருகிறது. இவ்வாறு ஒருவர் தம்முடைய சுகத்திலேயே கண்ணுக இருப்பது கூடாது. பிரயாணம் செய்யும்பொழுது வயது முதிர்ந்தவர்களுக்கும், குழந்தையைத் தூக்கிவைத்துக் கொண்டிருக்கும் தாய்மார்களுக்கும் நாம் அமர்ந்திருக்கும் இடத்தைக் கொடுத்து உதவி செய்யவேண்டும். இஃது இளைஞர்களின் சிறந்த கடமையாகும்.

நீங்கள் அனைவரும் சாலை விதிகளை நன்கு அறிந்து, அவற்றின்படி நடக்கவேண்டும். 'இடது பக்கமாகவே செல்' என்ற விதியை யாவரும் பின்பற்றவேண்டும். பெரிய நகரங்களில், வீதிகளின் இருபுறங்களிலும் நடைபாதைகள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றில்தான் நாம் நடந்து செல்லவேண்டும். நடைபாதையை விடுத்துக் கீழே இறங்கி நடப்பதால் மோட்டார், வண்டி முதலியவற்ருல் நமக்கு ஆபத்துக்கள் நேரிடலாம். உங்களுடைய பொது விஞ்ஞான புத்தகத்தில் சாலை விதிகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சைக்கிள் போன்ற வாகனங்களில் செல்கின்றவர்கள் அவ்விதிகளின்படி தவருது நடக்கவேண்டும்.

வீதிகளில் வாழைப்பழத் தோல்களை எறிவதால் எவ்வளவு தீங்கு ஏற்படும் என்று சிந்தித்துப் பாருங்கள். நடந்து போகின்றவர்கள் அவற்றின்மேல் கால் வைத்தால் வழுக்கிக் கீழே விழுந்துவிடுவார்கள். கண்ட இடங்களில் எச்சில் துப்புவது கெட்ட வழக்கமாகும். நடக்கும் இடங்களை இவ்வாறு அசுத்தம் செய்தால் நோய் எளிதில் விரைவாகப் பரவும். சிலர் தம் வீட்டுக் குப்பை கூளங்களைப் பக்கத்து வீட்டின் புறத்தே எறிகின்றனர். குப்பை

கூளங்களைக் குப்பைத் தொட்டிகளிலேயே போடுவதை நீங்கள் வழக்கமாகக் கொள்ளவேண்டும். சமூக சுகாதார வழிகளை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும். தெருக்களில் உள்ள பொதுக் குழாய்களையும், பொதுக் கிணறுகளையும் அசுத்தப்படுத்தக் கூடாது. எல்லோரும் சுகாதாரப் பழக்கங்களைக் கைக்கொள்ளவேண்டும்.

நாம் அனைவரும் ஒழுங்கின்படியே நடக்கவேண்டும். சென்ற சில ஆண்டுகளாக நம் நாட்டில் சில இடங்களில் மக்கள் 'க்யூ'வில் நிற்கும் முறை வழக்கத்தில் இருந்து வருகிறது. இஃது ஒரு நல்ல ஒழுங்குப் பயிற்சி ஆகும். பின்னால் வந்தவர்கள், எல்லோருக்கும் முன்னதாகச் சென்று நிற்க முயல்வது கெட்ட வழக்கமாகும். டிக்கெட்டு வாங்கும் இடங்களிலும், சில சாமான்கள் வாங்கும் இடங்களிலும், பஸ்ஸில் ஏறும் இடங்களிலும் நீண்ட 'க்யூ' நிற்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். இவ்வாறு ஒழுங்காக நிற்பதால் பல நன்மைகள் உண்டாகின்றன. அதிலும் முக்கியமாக, பஸ்ஸில் ஏற நின்றுகொண்டிருப்பவர்கள் 'க்யூ' அமைப்பில் நிற்பது மிக நல்லது. இல்லையேல் உடல் வலியும், தந்திரமும் மிக்கவர்கள் பஸ்ஸில் ஏறிவிடுவர். நெடுநேரமாகக் காத்திருப்போருக்கு இதனால் எவ்வளவு துன்பம் வரும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எல்லோரும் உண்மை பேசுவதை விரதமாகக் கொள்ளவேண்டும். "அகத்தூய்மை வாய்மையால் காணப் படும்" என்று திருவள்ளுவர் கூறுகின்றார். நமது மனத்தை உண்மையே சுத்தம் செய்யும். அந்நிய நாடுகளுள் ஒன்றில் ஒரு சிறந்த வழக்கம் இருக்கிறதாம். அது பின்வருமாறு :—நம் நாட்டில் பத்திரிகைகளைத் தெருக்களில் விற்றுச் செல்லும் வழக்கம் இருப்பதுபோல் அந்நாட்டில் இல்லை. அந்நாட்டில் தெருக்கள் கூடும் சந்திகளில் பொது மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அன்றன்று வந்த பத்திரிகைகள் யாவும் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பத்திரிகையிலும் பல பிரதிகள்

இருக்கும். பத்திரிகையின் தலைப்பில் அதனது விலை போடப்பட்டிருக்கும். அவற்றின் பக்கத்தில் ஒரு உண்டியலும் இருக்கும். பத்திரிகை விற்பதற்கு அங்கு யாரும் இருக்கமாட்டார்கள். அவ்வழியே செல்கின்றவர்க்குப் பத்திரிகைகள் வேண்டியிருந்தால் அவர்கள் அம்மன்றங்களில் புகுவர்; தமக்கு வேண்டிய பத்திரிகைகளை எடுத்துக் கொள்வர்; அவற்றிற்குரிய தொகையை அங்குள்ள உண்டியலில் போட்டுச் செல்வர். பத்திரிகைகளை எடுத்துச் செல்பவர் அவற்றிற்குரிய பணத்தை உண்டியல்களில் போடாமல் செல்வதே இல்லையாம். இதுவன்றோ நல்லொழுக்கம்! இத்தகைய பலவித முறைகள் ஒரு நாட்டில் அமைந்து, ஒழுங்காக நடைபெறுமானால் அந்நாட்டு அரசாங்கத்திற்கு எவ்வளவு நன்மைகள் உண்டாகும்! இப்படிப்பட்ட ஒழுங்கு முறைகள் அமைந்துள்ள நாட்டில் குழப்பங்களும், கலகங்களும் நடைபெறா. எங்கும் அமைதி நிலவும்.

நாம் நமக்குரிய உரிமைகளை விடுதல் கூடாது. பஸ், டிராம் முதலியவற்றில் பிரயாணம் செய்யுங்கால், டிக்கெட்டுகளை நாமாகக் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும். பக்கத்தில் அமர்ந்திருப்பவர் டிக்கெட்டு வாங்க மறந்திருந்தால் அவருக்கு நினைவூட்ட வேண்டும். தற்காலத்துப் போக்கு வரவுச் சாதனங்களில் பல, அரசாங்கத்தாலேயே நடத்தப்படுகின்றன. ஆகவே அச்சாதனங்கள் யாவும் பொது மக்களாகிய நம்முடைய சொத்தே ஆகும். அவற்றிற்கு வரும் நஷ்டங்கள் நம்மையே சாரும். ஆகவே நாம் இதனை நன்கு நினைவில் வைக்க வேண்டும்.

நகரங்களில் பொது மக்களின் நலத்திற்காக அரசாங்கத்தார் பல சாதனங்களை அமைத்திருக்கின்றனர். தெருக்களில் மின்சார விளக்குகள் போடப்பட்டுள்ளன. பொது மக்களுக்கென்று தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பாதுகாப்பது பொதுமக்களின் கடமையாகும். தோட்டங்களில் போடப்பட்டிருக்கும் பலகைகள், சிமென்ட் மேடைகள் முதலியவற்றை யாரேனும் அசுத்தம் செய்தால், அவற்றால் விளையும் தீமைகளை அவருக்கு

நயமாக எடுத்துரைக்க வேண்டும். தோட்டங்களில் உள்ள தாவரங்களைச் சிலர் விளையாட்டிற்காக நறுக்கியும், வேரோடு களைந்தும் பாழ்படுத்துவர். அவ்வாறு செய்கிறவர்களைத் தடுத்து, அவர்களது செய்கை தவறு என்பதை எடுத்துச் சொல்லுதல் மாணவர்களின் கடமை ஆகும்.

நாம் அனைவரும் நமது நாட்டுக் கொடிக்கு வணக்கம் செலுத்த வேண்டும். நமது சுதந்திர இந்தியாவின் கொடியில் சிவப்பு, வெண்மை, பச்சை ஆகிய மூன்று நிறங்கள் அமைந்துள்ளன என்பது உங்களுக்குத் தெரியும். நம் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைப்பதற்காக இரத்தத்தைச் சிந்திப் பாடுபட்ட தியாகிகளைச் சிவப்பு நிறம் குறிப்பிடும். அந்தச் சிவப்பு நிறத்தைக் கண்டவுடன் நமது தேசத்தலைவர்களின் தியாகச் செயல்கள் நம்முடைய நினைவுக்குவரும். அடுத்துள்ள வெண்மை நிறம் அமைதியைக் குறிப்பிடும். நாம் கள்ளமில்லாத உள்ளத்துடன் இருக்கவேண்டும் என்பதை வெள்ளை நிறம் நமக்குக் கூறுகிறது. நாட்டில் அமைதி நிலவவேண்டும் என்பதையும் நமக்கு அந்நிறம் குறிப்பிடுகிறது. அதனிடம் அமைந்துள்ள அசோக சக்கரம் நமது நாட்டைச் சிறப்புடன் ஒரு குடைக்கீழ் அரசாண்ட அசோகரது ஆட்சியை நமக்கு நினைவூட்டும். இறுதியிலுள்ள பசுமை நிறம் நம் நாட்டுச் செழிப்பைக் குறிப்பிடும். இந்தியாவில் விவசாயத்திற்கு ஏற்ற வசதிகள் அமைந்துள்ளன; தாதுப்பொருள்கள் பல கிடைக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி, இந்தியா செல்வ நிலையில் சிறந்து விளங்குமாறு செய்வது நம் கடமை என்பதை அப்பசுமை நிறம் வெளிப்படுத்துகின்றது. அம்மூன்று நிறங்களும், அசோக சக்கரமும் நமக்குக் குறிப்பிடும் செய்திகள் பலவுள. அவற்றை நீங்கள் உணர்ந்து பிறர்க்கும் கூறவேண்டும். நம் பாரத நாட்டை உலகத்திற் சிறந்த நாடாகச் செய்வது மாணவர்களுடைய கடமையாகும். நீங்கள் உங்களுடைய கடமைகள், உரிமைகள் முதலியவற்றை உணர்ந்து, சிறந்த குடிமக்களாக வாழ்ந்து, பிறர்க்கும் வழி காட்ட வேண்டும். அப்பொழுது நம் நாடு உலகத்திலேயே உயர்ந்த நாடாக விளங்கும்; பொன்னுடாகத் திகழும்.

### பொருள் காண்க

**பண்பு, ஆதி, அண்டி, வாய்ப்பு, அமர்தல், புறம், தூய்மை, வாய்மை, சந்தி, மன்றம், நிலவும்.**

### சிறுவிடை வினுக்கள்

1. நமது நாட்டிற்குச் சுதந்திரம் என்று கிடைத்தது?

2. பஸ்ஸில் செல்லும் பொழுது நாம் பிறர்க்குச் செய்யக் கூடிய சிறு உதவிகளுள் மூன்றினை எழுதுக.

3. சாலை விதிகளில் இரண்டினை வரைக.

4. வாழைப்பழத் தோல்களை ஏன் தெருவில் எறியக் கூடாது?

5. வீட்டில் சேரும் குப்பை கூளங்களை என்ன செய்ய வேண்டும்? ஏன்?

6. 'க்யூ' அமைப்பு என்றால் என்ன?

7. அகத்தூய்மை என்பது யாது? அகத்தைத் தூய்மை செய்வது எப்படி?

8. பஸ், டிராம் முதலியவற்றில் டிக்கெட்டு வாங்காமல் ஏன் பிரயாணம் செய்யக் கூடாது?

9. மாணவர்களின் கடமைகளுள் நான்கினை எழுதுக.

10. நமது பாரத நாட்டுக் கொடியிலுள்ள மூன்று நிறங் களும் எவற்றைக் குறிப்பிடுகின்றன?

### கட்டுரையாக்கம்

1. கூடி வாழ்தலினால் விளையும் நன்மைகளைப் பத்து வரி களில் எழுதுக.

2. பிரயாணம் செய்யும் பொழுது நாம் பிறர்க்குச் செய்யக் கூடிய நன்மைகளைப்பற்றி, உங்கள் வகுப்பு மாணவர் சங்கத்தில், ஐந்து நிமிஷப் பேச்சொன்று நிகழ்த்துவதற்குரிய குறிப்புகளை எழுதுக.

3. 'சமூக சுகாதாரம்' என்பதுபற்றி இருபது வரிகளில், மூன்று பத்திகள் கொண்டதாக ஒரு கட்டுரை வரைக.

4. நம் நாட்டுக் கொடி நமக்கு நினைவூட்டும் செய்திகளை விளக்கி வரைக.

## மொழிப் பயிற்சி

1. எறி, எரி / மறம், மரம் / கறி, கரி / உறி, உரி — இச் சொற்களினுடைய உச்சரிப்புகளில் உள்ள முக்கியமான வேறுபாடு யாது? பொருள் வேறுபாட்டினை வரைந்து, ஒவ்வொன்றையும் ஒவ்வோர் வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

2. நன்னாள், நந்நாள் / நன்னாடு, நந்நாடு / முன்னூறு, முந்நூறு — இவற்றைப் பிரித்துக் காட்டி, பொருள்களை வரைக.

3. அந்நாளில்தான் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது: இஃது என்ன வாக்கியம்? ஏன்?

4. **புணர்த்திக்காட்டுக:**—நாள் + ஆகும்; நம் + இடம்; இது + அன்றோ; கடமை + ஆகும்; பொன் + நாடு; அன்று + அன்று.

## 4. கவின் மிக்க காஷ்மீர்

காஷ்மீர் ஒரு சமஸ்தானம். இஃது இந்தியாவின் வடகோடியில் இமயமலையின் மேற்குப் பகுதியில் உள்ளது. காஷ்மீர் ஒரு பள்ளத்தாக்காகும். இந்நாட்டைச் சுற்றிலும் பனி மூடிய மலைத்தொடர்கள் சுவர்களைப்போல் அமைந்துள்ளன. எனவே இந்நாட்டின்மீது பகைவர்களால் எளிதில் படையெடுக்க முடியாது. புயற்காற்று முதலியவற்றால் இந்நாட்டிற்குத் தீங்கு உண்டாவதில்லை. காஷ்மீர் நாடு கடல் மட்டத்திலிருந்து 5000 அடிகள் உயரத்தில் உள்ளது. இங்குக் குளிர்காலத்தில் குளிர் மிகுதியாக இருக்கும். கோடை காலத்தில் இதன் சீதோஷ்ண நிலை மிதமாக இருக்கும். இந்நாட்டின் வழியாக ஜீலம் நதி செல்கின்றது. நல்ல மழையும் இங்குப் பெய்கிறது. ஆதலால் இந்நாடு நீர்வளம் மிக்க நாடாகத் திகழ்கின்றது.

காஷ்மீர் நாட்டில் இயற்கையன்னையின் அழகுக் காட்சிகள் பலவற்றைக் காணலாம். இந்நாட்டைச் சுற்றி அமைந்துள்ள மலைகளில் வெண்பனி மூடிக் கிடக்கும். அதனால் அம்மலைகள் வெள்ளி மலைகள்போலக் காட்சி தரும். மலைகளில் மரம் அடர்ந்த காடுகள் உள்ளன. மலைச் சரிவுகளில் புற்களும் நெருங்கி வளர்ந்திருக்கும். மரங்களில் பல நிறப் பூக்கள் பூத்திருக்கும் காட்சி கண்டோர் கண்களைக் கவரும். புல்வெளிகள் பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்று காட்சி தரும். இந்நாட்டில் அழகிய பல ஏரிகள் இருக்கின்றன. இத்தகைய அழகுக் காட்சிகளைக் கண்டு களிக்கப் பலர் இந்நாட்டிற்கு அடிக்கடி வருகின்றனர். அயலவர்க்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தே இந்நாட்டில் சிலர் பிழைக்கின்றனர்.

இந்நாட்டில் ஆறுகளும் கால்வாய்களும் அதிகம். அதனால் இங்கு நீர் வழியாகவே போக்கு வரவு பெரும்பாலும் நடைபெறுகின்றது. அதற்கேற்றவாறு பல உருவங்கள் அமைந்த படகுகளை இந்நாட்டவர் செய்கின்றனர். மலைகளுக்கு நடுவில் அமைந்த இந்நாட்டிற்கு இருப்புப் பாதை போடப்படவில்லை. இக்காரணத்தால் இந்நாட்டிற்குச்

செல்வது சிறிது கஷ்டம்தான். இந்நாட்டின் இடையே ரஸ்தாக்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் குளிர் காலத்தில் அவை வெண்பனியால் மூடுண்டு கிடக்கும். அப்பொழுது அந்த ரஸ்தாக்களில் போக்குவரவு நடை பெறுவதில்லை. இந்நாட்டிலிருந்து கனமான பொருள்களை வேறு நாடுகளுக்கு அனுப்பமுடியாது. கனமில்லாதனவும், விலை மிகுந்தனவுமான பொருள்களே இந்நாட்டிலிருந்து வியாபாரத்திற்காக வேறு நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.



காஷ்மீரத்தில் உள்ள பெரிய நகரம் ஸ்ரீநகர் ஆகும். அது தால் ஏரி எனப்படும் ஏரியின் அருகில் உள்ளது. ஸ்ரீநகரில் காஷ்மீரத்தின் அரசர் வசிக்கிறார். இந்நகரில் வாய்க்கால்களே தெருக்களைப்போல் அமைந்துள்ளன. மாணவர்கள் படகுகளில் ஏறிச்சென்றே தம் பள்ளிக்கூடங்களை அடைகின்றனர். கடைக்குப் போவதற்கும், நண்பர்களின் வீடுகளுக்குச் செல்வதற்கும் படகே இந்

நகரத்தில் போக்கு வரவுச் சாதனமாக அமைந்துள்ளது. நீங்கள் வசிக்கும் நகரங்களில், தெருக்களுக்குப் பதிலாகக் கால்வாய்கள் அமைந்திருந்தால் அக்காட்சி எவ்வாறு இருக்கும் என்று நீங்களே ஊகித்துப் பாருங்கள்.

தால் ஏரி எல்லோராலும் புகழப்படுகிறது. அந்த ஏரியைக் கண்டு களிக்கவே பலர் காஷ்மீரத்திற்குச் செல்கின்றனர். அந்த ஏரியில் பல ஆச்சரியமான காட்சிகள் உள்ளன. அவற்றுள் சிறந்தது 'மிதக்கும் தோட்டங்கள்' ஆகும். தோட்டங்கள் ஏரியில் மிதக்கின்றன! ஆ! எத்தகைய அற்புதக் காட்சி! நாணற்குழாய்களை நெருங்க அமைத்துக் கட்டி, அவற்றின்மேல் சேற்றையும், பயனற்ற இலைகளையும் கலந்து அப்பி நீரில் மிதக்க விடுவர். பின்பு அவற்றில் தோட்டம் போட்டு விடுவார்கள். இத்தகைய மிதக்கும் தோட்டங்கள் தால் ஏரியில் பல இருக்கின்றன. இந்தத் தோட்டங்களில் வெள்ளரிக்காய், தக்காளிப் பழம், மெலன்ஸ் முதலியவை பயிரிடப்படுகின்றன.

தால் ஏரியிலுள்ள மற்றொரு அற்புதக் காட்சி 'படகு வீடு' ஆகும். ஏரியில் மிதக்கும் படகுகள் வீடுகளைப்போல் அமைந்திருக்கும். படகுகளின் அடிப்புறம் தட்டையாக இருக்கும். இப்படகு வீடுகளில் எல்லாவிதமான வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. அழகிய அறைகள் பல இவற்றில் இருக்கின்றன. சமைப்பதற்கும், நீராடுவதற்கும், உண்பதற்கும் ஏற்ற சாதனங்கள் இவ்வீடுகளில் உள. ஏரியின் நடுவே படகு வீட்டில் தங்கியிருப்பது இன்பமாக இருக்கும். படகு வீடுகள் காஷ்மீரத்தில் உள்ள ஆறுகளிலும் உள்ளன.

காஷ்மீர் சால்வையைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது வழவழப்பாக இருக்கும். குளிருக்கு அடக்கமாகவும் இருக்கும். காஷ்மீரில் நெய்யப்படுவதாலேயே அதற்கு அப்பெயர் வந்தது. சால்வைகளை நெய்வது இந்நாட்டின் முக்கியமான தொழில்களுள் ஒன்று. இங்குள்ள ஆடுகளின் உடம்பில் மிருதுவான உரோமம் அடர்ந்திருக்கும். அந்த உரோமங்களைக் கொண்டே சால்வைகள், விரிப்புகள் முதலியன நெய்யப்படுகின்றன.

அவற்றின்மேல் இந்நாட்டு மக்கள் அழகிய பூ வேலைகளைச் செய்வது வழக்கம். இந்நாட்டில் வளரும் 'அக்ரோட்' என்னும் மரத்தினுல் மக்கள் மேஜைகளும், தட்டுகளும் செய்கின்ருர்கள். சித்திர வேலைப்பாட்டில் இந்நாட்டு மக்கள் மிகவும் தேர்ந்தவர்கள். இந்நாட்டில் பழத் தோட்டங்கள் மிகுதியாக உள்ளனவாதலால் அவற்றிலிருந்து



காஷ்மீரத்தில் படகு வீடு

ஆப்பிள், பியர் முதலிய பழங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அப்பழங்களை வேறு நாடுகளுக்கு அனுப்புவதால் இந்நாட்டு மக்களுக்குப் பெரும்பொருள் கிடைக்கிறது. இங்குள்ள அழகிய காட்சிகளைக் கண்டுகளிக்க ஆண்டுதோறும் வருகின்ற செல்வர்கள் பெரும் பொருளைச் செலவு செய்கின்றனர். அதனுலும் காஷ்மீரத்து மக்கள் பொருளைப் பெறுகின்றனர்.

காஷ்மீர் நீர்வளம் மிக்க நாடு என்று கூறினேம் அல்லவா? அதனுல் இங்கு நெல் சாகுபடி நன்கு நடைபெறுகிறது. ஏரிகளை அடுத்துள்ள வயல்கள் நெல்லைச்

சாகுபடி செய்வதற்கு ஏற்றனவாக உள்ளன. அதனல் இந்நாட்டு மக்களின் முக்கியமான உணவு அரிசிதான். இங்குத் தரை மங்கலான செந்நிறமுள்ளது. பசுமையான நெற்பயிரும், அதைச் சூழ்ந்துள்ள மங்கலான செந்நிறமும் கண்களுக்கு நல்ல விருந்தாகும்.

காஷ்மீர் சரித்திரப் புகழ்பெற்ற நாடு. இந்தியாவின் பேரரசராக விளங்கிய அசோகர் காஷ்மீரத்தைப் பார்த்திருக்கிருர்; அந்நகரை நன்கு அணிசெய்திருக்கிருர். ஜஹாங்கீர் என்னும் முகலாய அரசர் காஷ்மீரத்திற்கு ஆண்டுதோறும் செல்வதுண்டு என்று சரித்திரம் கூறுகின்றது. முகலாய அரசர்களின் காலத்தில் காஷ்மீரில் பல தோட்டங்கள் உண்டாக்கப்பட்டன. பிற்காலத்தில் காஷ்மீரம் சீக்கியர்களின் ஆதிக்கத்திற்கு வந்தது. சீக்கியர்களின் தலைவராக இருந்த ரஞ்சித் சிங் என்ற வீரரைப்பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஐரோப்பாவிலுள்ள சுவித்ஸர்லாந்தை எல்லோரும் ‘உலகத்தின் விளையாட்டு நிலம்’ என்று புகழ்கின்றனர். அவ்வாறே காஷ்மீரத்தையும் எல்லோரும் புகழ்கின்றனர். காஷ்மீரத்தைக் கண்டவர்கள் அதனை, ‘பூமியிலுள்ள மோட்சம்’ என்று குறிப்பிடுகின்றனர். காஷ்மீரில் உள்ள வானையளாவிய மரங்கள், வெண்பனி மூடிய மலைகள், தெளிந்த நீருள்ள ஏரிகள், அவற்றில் உள்ள மிதக்கும் தோட்டங்கள், படகு வீடுகள், பன்னிறப் பூக்கள் நிறைந்த மரங்கள், படத்தில் எழுதியவை போல் தோன்றும் தோட்டங்கள் முதலியவை அங்குச் சென்று திரும்பியவர்களின் மனத்தை விட்டு எப்பொழுதும் அகலா என்று சொல்லப்படுகின்றது.

பொருள் காண்க

**கவின், திகழ்கின்றது, அற்ற, நீராடுதல், அளாவிய, அகலா.**

**சிறுவிடை வினுக்கள்**

1. காஷ்மீர் நாடு இந்தியாவின் எப்பகுதியில் உள்ளது?

2. இந்நாட்டின்மீது பகைவர்களால் ஏன் படையெடுக்க முடியாது?

3. காஷ்மீரத்தில் போக்கு வரவுக்கு எத்தகைய சாதனம் அமைந்துள்ளது?

4. காஷ்மீரத்திலிருந்து கனமான பொருள்களை ஏன் வேறிடங்களுக்கு அனுப்ப முடியாது?

5. காஷ்மீரத்தின் பெரிய நகரம் எது?

6. தால் ஏரியில் உள்ள அழகுக் காட்சிகளுள் இரண்டினைக் குறிப்பிடுக.

7. காஷ்மீரத்தில் நடைபெறும் தொழில்கள் யாவை?

8. காஷ்மீரின் அழகைக் கண்டு களித்த முற்காலத்து அரசர்களுள் இருவரைக் குறிப்பிடுக.

9. 'உலகத்தின் விளையாட்டு நிலம்' என்று எந்நாட்டிற்குப் பெயர்? அஃது எங்கிருக்கிறது?

10. கீழே சில செய்திகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **சில சரியானவை; சில தவறானவை.** சரியானவற்றிற்கு எதிரில் 'சரி' என்றும், தவறானவற்றிற்கு எதிரில் 'தவறு' என்றும் குறிப்பிடுக:—

(அ) காஷ்மீரம் ஒரு பள்ளத்தாக்கு.

(ஆ) காஷ்மீரம் கடற்கரையில் இருக்கிறது.

(இ) காஷ்மீரத்திற்குச் செல்ல இருப்புப் பாதைகள் அமைந்துள்ளன.

(ஈ) காஷ்மீர், சால்வை நெசவிற்குப் பெயர் போனது.

(உ) தால் ஏரியில் படகு வீடுகள் உள்ளன.

(ஊ) காஷ்மீரத்தில் கோதுமை மிகுதியாகப் பயிரிடப்படுகிறது.

## கட்டுரையாக்கம்

1. 'காஷ்மீர் நாட்டிற்குச் செல்பவர்கள் கண்டு களிக்கும் காட்சிகள்' என்பதுபற்றி எட்டு வாக்கியங்கள் எழுதுக.

2. மிதக்கும் தோட்டம், படகு வீடு: இவ்விரண்டின் அமைப்புகளைப் பற்றி நந்நான்கு வாக்கியங்கள் வரைக.

3. 'காஷ்மீரில் மக்களின் வாழ்க்கை' என்பது பற்றி உங்கள் வகுப்பு மாணவர் சங்கத்தில் ஐந்து நிமிடப் பேச்சு நிகழ்த்தக் குறிப்புகள் தயார் செய்க.

## மொழிப் பயிற்சி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. (அ) | வேலைகளை | + | செய்வது | = | வேலைகளைச்செய்வது |
| | அழகை | + | காண | = | அழகைக்காண |
| | காட்சிகளை | + | பார்த்து | = | காட்சிகளைப்பார்த்து |
| | ஆற்றை | + | தாண்டி | = | ஆற்றைத்தாண்டி |
| (ஆ) | எனக்கு | + | கொடுத்தான் | = | எனக்குக்கொடுத்தான் |
| | நகருக்கு | + | செல்ல | = | நகருக்குச்செல்ல |
| | அதற்கு | + | பெயர் | = | அதற்குப்பெயர் |
| | நாட்டிற்கு | + | தீங்கு | = | நாட்டிற்குத்தீங்கு |

மேலே இருவகையான புணர்ச்சிகள் காட்டப்பட்டுள்ளன. அச் சொற்கள் புணரும்பொழுது இடையே வல்லினம் மிகுந்திருக்கிறது. மேலே காட்டப்பட்டுள்ள புணர்ச்சிகளை ஆராய்ந்து பார்த்து, வல்லினம் மிகும் இடங்களுக்கு ஒரு பொது விதி வரைக.

2. செய்தி, வினு, கட்டளை, உணர்ச்சி என்று வாக்கியங்களை நால்வகையாகப் பிரிக்கலாம் என்பது உங்களுக்குத் தெரியும். பின் வரும் ஒவ்வொரு வாக்கியமும் எவ்வகையைச் சார்ந்தது என்று குறிப்பிடுக:—

(அ) தோட்டங்கள் ஏரியில் மிதக்கின்றன!

(ஆ) காஷ்மீர் ஒரு சமஸ்தானம்.

(இ) காஷ்மீரத்தில் உள்ள பெரிய நகரம் ஸ்ரீநகர்.

(ஈ) காஷ்மீர் நாட்டிற்கு நீங்கள் ஒரு முறை செல்லுங்கள்.

(உ) காஷ்மீர் நாடு நீர்வளம் மிக்கது என்று கூறினேனல்லவா?

# 5. இளமையில் துறந்த ஏந்தல்

முற்காலத்தில் நம் தமிழ் நாட்டை முடிமன்னர் மூவர் ஆண்டு வந்தனர். சேரர், சோழர், பாண்டியர் என்ற மூன்று மரபினரும் முடிமன்னர் என்று அழைக்கப் பட்டனர். அம்மன்னர்களில் பலர், தமிழ்ப்புலவர்களை ஆதரித்துத் தமிழுக்கு ஆக்கம் தேடித்தந்தனர். சிலர் சிறந்த புலவர்களாகவும் விளங்கினர். தமிழ் வேந்தர்களுள் சிலர் பாடிய பாடல்கள் 'புறநானூறு' முதலிய சங்கநூல் களில் காணப்படுகின்றன.

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதி யார் சிலப்பதிகாரத்தைப் புகழ்கின்றார். அந்நூல் இனி மையும், அழகும், சுவையும் வாய்ந்தது. அச்சிறந்த நூலைப் பாடியருளியவர் சேர வம்சத்தைச் சேர்ந்த ஒரு இளவரசரே ஆவார். அவரைத் தமிழ் நாடு 'இளங் கோவடிகள்' என்று அழைக்கின்றது. அவர் இளமையில் துறவு பூண்ட காரணத்தால்தான் அவருக்கு அப் பெயர் ஏற்பட்டது. அவர் துறவு பூண்ட வரலாற்றை இங்கு அறிவோம்.

சேர நாட்டைச் சிறப்புற ஆண்ட சேரர்களுள் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பவனும் ஒருவனாவான். அவன் இமயமலை வரையில் படையெடுத்துச் சென்றான்; பகைவர் பலரை வென்றான்; இமயமலையில் தனது அடையாளமாகிய வில்லைப் பொறித்து மீண்டான். அவனுக்கு மைந்தர் இருவர் இருந்தனர். அவர்களுள் இளையவரே சிலப்பதிகாரத்தைப் பாடியருளிய ஏந்தல் ஆவார். அவருக்கு முன்னோன் சேரன் - செங்குட்டுவன் என்பவன். செங்குட்டுவன் பிற்காலத்தில் பேரரசனாகத் திகழ்ந்தான். அவன் பத்தினிக் கடவுளாகிய கண்ணகி தேவிக்குக் கோயில் கட்டிச் சிறப்புச் செய்திருக்கின்றான்; வடநாட்டு ஆரிய அரசர்களை வென்றிருக்கிறான்.

ஒருநாள் நெடுஞ்சேரலாதன் தனது அத்தாணி மண்டபத்தில் கொலு வீற்றிருந்தான். அப்பொழுது அவ னது புதல்வர்கள் இருவரும் உடனிருந்தனர். அரசனது

அமைச்சரும், ஏனையோரும் அந்த அவையில் அவரவர்க்கு உரிய இடங்களில் இருந்தனர். அதுகாலையில் அந்த அரசவைக்கு ஒரு நிமித்திகன் வந்தான். நிமித்திகர்கள் சோதிடம் கூறுவதில் வல்லவர்கள். வந்த நிமித்திகனை அரசன் வரவேற்றான்; இருக்கையும் அளித்தான்.

நிமித்திகன் அரசவையில் இருந்த அனைவரையும் ஒரு முறை பார்த்தான். அரசனது மைந்தர் இருவரையும் கண்ட அவன் அவர்களை உற்று நோக்கத் தொடங்கினான். இளவரசரைக் கண்ட அவனது முகம் மலர்ந்தது. இளவரசரது அறிவொளி வீசும் முகம் அந்நிமித்திகனது மனத்தைக் கவர்ந்தது. அவன் அந்த ஏந்தலின் முடிமுதல் அடிவரை உற்று நோக்கினான்; அவரது உடல் அமைப்பை நன்கு கவனித்தான். உடனே அவன் அரசனை நோக்கி, 'அரசர்க்கரசே! வாழ்க நின் கொற்றம். உன்னுடைய மைந்தர் இருவரையும் நான் பார்த்தேன். உனக்கு விண்ணுலகு அடையுங்காலம் நெருங்கிவிட்டது. ஆகவே, உனக்குப் பின் இச்சேர நாட்டைச் சிறப்புற ஆளுவதற்கு ஏற்ற ஒருவனை நீ இப்பொழுதே தேர்ந்தெடுக்க வேண்டும். அவனுக்கு முடியும் சூட்ட வேண்டும். உன் புதல்வரில் இளையவனுக்கு நீ முடி சூட்டு. அவனே இந்தச் சீரிய சேர நாட்டை நன்கு ஆளுதற்குரியவன். அவனுக்கு நீ பட்டம் சூட்டுவாயேயானால் சேர நாடு இவ்வுலகிலேயே உயர்ந்த நாடாக விளங்கும். நான் சொல்கின்றபடியே செய்' என்றான்.

நிமித்திகனது சொற்களைக் கேட்ட அவையோர் திடுக்கிட்டனர். அரசன் சொல்வதறியாது வாளா இருந்தான். செங்குட்டுவன் நாணித் தலை குனிந்தான். ஆனால் இளங்கோவோ சீறி எழுந்தார். அவர் நிமித்திகனை நோக்கி, 'பெரியீர்; நீர் அறிவிலும், ஆண்டிலும் முதியவராதலின் நான் உம் இழிசொற்களைப் பொறுத்தேன். தாங்கள் இவ்வாறு சொல்வது தகுமா? மூத்தவன் இருக்கும் பொழுது இளையவன் அரசாள்வது முறையோ? அரசவையில் இவ்வாறு முறை கெடப் பேசுவது அறமா?' என்று கூறி வெகுண்டார்.

இளங்கோவின் சொற்களைக் கேட்ட நிமித்திகன் பதில் சொல்ல வழியறியாது திகைத்து நின்றான். செங்குட்டுவன் சிறிது ஆறுதல் அடைந்தான். எனினும் அவனது முகம் வாட்டமுற்றே காணப்பட்டது. தனது தந்தை இளங்கோ விற்கே முடி சூட்டி விடுவாரோ என்ற அச்சம் அவனது மனத்தைவிட்டு அகலவில்லை. தமது தமையனின் முகவாட்டம் நீங்காதது கண்ட இளங்கோ உடனே 'இன்று இச் சபையில் நிமித்திகர் கூறத்தகாத சொல்லைக் கூறினர். அது கேட்டு எனது தந்தை எனக்கே ஒரு வேளை முடி சூட்டக் கூடும். இத்தகைய முறைகெட்ட செயலுக்கு நான் உடன்படேன். ஆதலால் நான் இன்றே துறவு பூண்டேன். இனி யான் துறவி. இவ்வுலகத்தில் எத்தகைய இன்பத்தையும் யான் விரும்ப மாட்டேன். இஃது ஆணை' என்றார். அது கேட்ட செங்குட்டுவனின் முகம் மலர்ந்தது. நிமித்திகன் தலை குனிந்தவாறே அவ்விடத்தை விட்டகன்றான். அது முதல் இளங்கோ துறவியாகவே வாழ்ந்து வந்தார். அவரை யாவரும் அன்றுமுதல் 'இளங்கோவடிகள்' என்று அழைக்கத் தொடங்கினர்.

சில காலங் கழித்து நெடுஞ்சேரலாதனும் மேலுலகு அடைந்தான். அரசனது மூத்த மைந்தனே பட்டத்திற்கு உரிமை பூண்டவனாதலால் செங்குட்டுவனுக்கு அரச பதவி கிடைத்தது. செங்குட்டுவன், துறவு பூண்ட தன் இளவலை நோக்கி, "அன்ப, நீ எனக்கு இளையவனானாலும் என்னிலும் அறிவு மிக்கவன். 'துறவிக்கு அரசன் துரும்பு' என்றபடி உனக்கு என்னால் ஆக வேண்டியது ஒன்றுமில்லை. ஆனால் உன்னைப் பிரிந்து என்னால் உயிர் வாழ முடியாது. நீ என்னுடன் இருந்து அவ்வப்பொழுது அரசாங்கக் காரியங்களில் யோசனை கூற வேண்டும். இதுவே எனது வேண்டுகோள்" என்றான். இளமையில் துறந்த ஏந்தலார் அதற்கு இசைந்தார். அவ்வாறே பிற்காலத்தில் அவர் செங்குட்டுவனுக்கு உறு துணையாக இருந்து உதவினர்.

செங்குட்டுவன் சிறந்த வீரனாகத் திகழ்ந்தான். அவன் ஒருநாள் மலைவளங் காணுதற்குச் சென்றான். அவனுடன்

அவனது மனைவியும், மதுரைக் கூலவாணிகன் சாத்தனுர் என்னும் புலவரும் சென்றிருந்தனர். அப்பொழுது அம் மலையில் வாழ்ந்து வந்த குறவர்கள் செங்குட்டுவனைக் காண வந்தனர். அவர்கள் கண்ணகி தனது கணவனேடு தேவர்களின் விமானத்தில் ஏறி விண்ணுலகு சென்றதைக் கண்டவர்கள். எனவே, அவர்கள் அரசனை நோக்கி, 'அரசே! இம்மலையில் உள்ள வேங்கை மரத்து நீழலில் நாங்கள் ஒரு அதிசயத்தைக் கண்டோம். பெருந் துயரத்திற்கு ஆளான மங்கை ஒருத்தி அம்மர நீழலில் வந்து நின்ருள். அப்பொழுது தேவர்கள் விமானத்தில் அங்கு வந்தனர். அவ்விமானத்தில் அந்த மங்கையின் கணவனும் இருந்தான். அம்மங்கை உடனே அவ் விமானத்தில் ஏறினள். விமானமும் தேவருலகு சென்று விட்டது. இஃது எங்களுக்கு வியப்பாக இருக்கிறது' என்றனர்.

குறவர்களின் சொற்களைக் கேட்ட செங்குட்டுவனும் அவனது மனைவியும் பெருவியப்புற்றனர். அப்பொழுது அருகிலிருந்த சாத்தனர் உடனே, 'அரசே! நிகழ்ந்ததை நான் அறிவேன். இங்கு வந்து மரநீழலில் நின்று, விமானத்தில் தேவர் உலகம் சென்றவள் கண்ணகி என்னும் பெயரினள். அவள் காவிரிப்பூம்பட்டினத்தைச் சேர்ந்தவள். அவள் தனது கணவனகிய கோவலனுடன் மதுரைக்கு வந்தாள். கோவலன் மதுரையில் சிலம்பு விற்கவே வந்தான். பாண்டிய அரசனது சிலம்பைத் திருடிய கள்வன் என்று குற்றஞ் சாட்டப்பெற்று அவன் கொலையுண்டான். கணவனை இழந்த கண்ணகி தனது கணவன் கள்வனல்லன் என்பதைப் பாண்டிய அரசனுக்கு அறிவுறுத்தினள். தனது பிழையை உணர்ந்த அப்பாண்டியன் உடனே இறந்தான். அவனது மனைவியும் உடன் உயிர் விடுத்தாள். கண்ணகியின் சினத்தால் மதுரையும் எரிந்தது. நான் அப்பொழுது மதுரையில்தான் இருந்தேன். மதுரை நகரில் எரி சூழ்ந்து கொண்டபொழுது நான் அங்குள்ள வெள்ளியம்பலத்தில் படுத்திருந்தேன். நகரில் நெருப்புப் பிடிக்கவே நான் அந்நகரை விடுத்து உன்னைக் காண வந்தேன்' என்ருர். அதுகேட்ட செங்

குட்டுவன் அக்கண்ணகிக் கடவுளுக்குக் கோயில் கட்ட எண்ணினன். எனவே அவன் இமயம் சென்றான்; கல்லெடுத்தான்; கங்கையில் நீராட்டினன்; கண்ணகியின் உருவை அதில் பொறித்தான்; தனது நாட்டில் எழுப்பிய கோயிலில் கண்ணகித் தெய்வத்தை வைத்துச் சிறப்புச் செய்தான்.

சாத்தனார் கண்ணகியின் வரலாற்றை இளங்கோவடிகளிடம் கூறினர். அதுகேட்ட அடிகள் 'இவ்வரலாற்றினல் சிறந்த மூன்று உண்மைகள் வெளிப்படுகின்றன. அரசநீதி பிழைத்தவர்களை அறக் கடவுள் தண்டிக்கும்; பத்தினிக் கடவுளை யாவரும் வணங்கித் துதிப்பர்; முற்பிறப்பிற் செய்த வினை மறு பிறப்பில் வந்து தன் பயனை ஊட்டும் என்பனவே அந்த மூன்று உண்மைகள். இவ்வரலாற்றை ஒரு காவியமாகச் செய்யலாம்' என்றார். உடனே சாத்தனார், 'அடிகளே! சேர சோழ பாண்டிய அரசர்கள் மூவர்க்கும் உரியது இவ்வரலாறு. இவ்வரலாற்றிலிருந்து சிறந்த மூன்று உண்மைகள் வெளிப்படுகின்றன. ஆகவே முற்றத் துறந்த முனிவராகிய தாங்களே இவ்வரலாற்றைக் காவியமாகப் பாடியருளுங்கள்' என்றார். அடிகளும் அதற்கிசைந்து 'சிலப்பதிகாரம்' என்ற பெயருடன் அவ்வரலாற்றைப் பாடினர்.

சிலப்பதிகாரம் முப்பது காதைகளை உடையது. அது செவ்விய இனிய தமிழில் பாடப்பட்டுள்ளது. அந்நூலில் வருணனைகள் அழகாக அமைந்திருக்கின்றன. அடிகள் சேர வம்சத்தைச் சேர்ந்தவராக இருந்தபொழுதிலும் சோழ பாண்டிய அரசர்களையும், அவர்களுடைய நாடுகளையும் உள்ளவாறே புகழ்ந்திருக்கிறார். "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்ற பாரதியாரின் வாக்கு உண்மை என்பது சிலப்பதிகாரத்தைப் படித்தவர்களுக்கு நன்கு விளங்கும்.

## பொருள் காண்க

ஏந்தல், ஆக்கம், பொறித்து, முன்னேன், அத்தாணி மண்டபம், அவை, இருக்கை, வாளா, கோ, வெகுண்டார், இளவல், யாங்கனும்.

## சிறுவிடை வினுக்கள்

1. முடி மன்னர் மூவர் எனப்படுவோர் யாவர்?

2. சிலப்பதிகாரத்தைப் பாடிய ஆசிரியர் யார்? அவருக்கு அப்பெயர் வந்தது ஏன்?

3. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் செய்த அருஞ் செயல் யாது?

4. நிமித்திகனது தொழில் யாது?

5. நிமித்திகன் நெடுஞ்சேரலாதனிடம் யாது கூறினன்?

6. இளங்கோ நிமித்திகனைக் கோபித்துக் கூறியவற்றை மூன்று வாக்கியங்களில் எழுதுக.

7. இளங்கோ அரசவையில் என்ன சபதம் செய்தார்?

8. செங்குட்டுவன் இளங்கோவை யாது வேண்டினன்?

9. குறவர்கள் கண்ட அதிசயம் யாது?

10. கண்ணகிக்கு உற்ற தீங்கு யாது?

11. செங்குட்டுவன் கண்ணகிக் கடவுளுக்கு எத்தகைய சிறப்புச் செய்தான்?

12. சிலப்பதிகாரம் வெளிப்படுத்தும் உண்மைகள் யாவை?

13. சாத்தனர் இளங்கோவடிகளை யாது வேண்டினர்?

14. கீழே சில நூல்களின் பெயர்களும், ஆசிரியர்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. ஆனல் அவை முறைமாறி உள் ளன. அவற்றை மாற்றிச் சரிப்படுத்துக:—

சிலப்பதிகாரம்—சாத்தனர்
மணிமேகலை—பரஞ்சோதிமுனிவர்
இராமாயணம்—சேக்கிழார்
திருவிளையாடற்புராணம்—திருவள்ளுவர்
திருக்குறள்—இளங்கோவடிகள்
பெரிய புராணம்—கம்பர்

## கட்டுரையாக்கம்

1. இளங்கோவடிகள் துறவு பூண்ட வரலாற்றைப் பதினைந்து வரிகளுள் வரைக.

2. கண்ணகியின் வரலாற்றைப் பாடுவதற்கு உரியவர் இளங்கோவடிகளே என்று சாத்தனுர் கருதியது ஏன்? எட்டு வாக்கியங்களில் எழுதுக.

3. கண்ணகியின் வரலாற்றை இருபது வரிகளுக்குள் சுருக்கி எழுதுக.

4. பத்தினிக் கடவுளுக்குச் செங்குட்டுவன் செய்த சிறப்புக்களை வரைக.

## மொழிப் பயிற்சி

1. **பிரித்துக்காட்டுக:**—முற்காலம், புறநானூறு, இளவரசர், அரசாள்வது, அகலவில்லை, பிற்காலம்.

2. **புணர்த்திக் காட்டுக:**—பேர் + அரசன்; படை + எடுத்து; வென்று + இருக்கிறுன்; விண் + உலகு; அ + மங்கை; மரம் + நிழல்; கள்வன் + அல்லன்; யாம் + அறிந்த.

3. அதனை + காட்டி = அதனைக் காட்டி

சிறப்பினை + செய்து = சிறப்பினைச் செய்து

பொருளை + தந்தான் = பொருளைத் தந்தான்

அவனை + பார்த்து = அவனைப் பார்த்து

மேலேகாட்டப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளில் **வல்லினம் மிகுந்துள்ளது.** இதிலிருந்து வல்லினம் மிகும் இடத்திற்கு ஒரு விதி கூறுக.

4. தாங்கள் இவ்வாறு செய்தது தகுமா? : இது **வினு வாக்கியம்.** இதனுள் வினப்பொருளைத் தந்த உறுப்பு எது? இப் பாடத்திலுள்ள வினு வாக்கியங்களுள் நான்கினைப் பொறுக்கி எழுதுக.

# 6. நெல்

நம் உணவுப் பொருள்களுள் முக்கியமானது அரிசி. ஆகவே பல விடங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தென் கிழக்கு ஆசியாவில் நெல் மிகுதியாகப் பயிராகிறது. நல்ல உஷ்ணமும், மழையும் நெற்பயிருக்கு வேண்டும். மழை குறைவான இடங்களில் மக்கள் கால்வாய்களின் மூலம் நீர்பாய்ச்சி நெல்லைச் சாகுபடி செய்கிறார்கள். ஈரத்தை அதிகமாகத் தன்னிடத்தே வைத்திருக்கக் கூடிய களிமண் பாங்கான பூமியே நெற்பயிருக்கு ஏற்ற நிலமாகும். நம் இந்தியாவில் பருவக் காற்றினால் மழையைப் பெறும் இடங்களில் நெற்பயிர் வளர்க்கப்படுகிறது.

தென்னாட்டு மக்கள் எல்லாப் பயிர்களையும்விட நெற்பயிரையே சிறந்ததாகக் கருதுகிறார்கள். சோழ நாட்டைப் பற்றிச் சிறப்பிக்கும் பொழுதெல்லாம் நம் தமிழ்ப் புலவர்கள் அதன் நெற்பயிரைப் புகழாமல் இருக்கமாட்டார்கள். "சோழ வளநாடு சோறுடைத்து" என்ற பாராட்டுச் சொற்களை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். "தென்னிந்தியாவின் நெற் களஞ்சியம்" என்று தஞ்சை ஜில்லா தற்காலத்தில் புகழப்படுகின்றது. நம் நாட்டவர் வயல்களை இருவகையாகப் பிரித்துள்ளனர். அவை நன்செய், புன்செய் என்பன. நெல் பயிராகும் நிலத்திற்கு 'நன்செய்' என்று பெயர். இதிலிருந்தே நெற்பயிரின் சிறப்பினை நாம் நன்கு அறியலாம். தெலுங்கு நாட்டில் உள்ள ஓரூர் 'நெல்லூர்' என்ற பெயருடன் விளங்குகிறது. அவ்வூர்ப் பக்கத்தில் நெல் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது.

நெல்லில் பலவகைகள் உள்ளன. நெற்பயிர் இரு வகைப்படும். அவை பருவப் பயிர், கோடைப் பயிர் என்பன. தென்னாட்டில் பருவப் பயிரினாலேயே நெல் மிகுதியாகக் கிடைக்கிறது. வட கிழக்குப் பருவக் காற்றினால்தான் தமிழ் நாட்டில் மழை பெய்கிறது. அக் காலத்தில் பயிரிடப்படும் நெற்பயிருக்கே பருவப் பயிர் என்று பெயர். பருவப் பயிர் பயன் தருவதற்கு ஆறு மாதங்கள் ஆகும். இனி

நம் நாட்டில் நெல் எவ்வாறு பயிர் செய்யப்படுகிறது என்பதைச் சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

முதல் ஆண்டு விளைந்த நெல்லில் ஒரு சிறு பகுதியை விதைப்பதற்கென்று காப்பாற்றி வைப்பது நம் நாட்டு வழக்கம். உழவர்கள் முதலில் நெல்லை விதைப்பதற்கு நிலத்தில் ஒரு பகுதியைக் குறிப்பிட்டுக் கொள்வர். அப் பகுதிக்கு **நாற்றங்கால்** என்று பெயர். நாற்றங்காலைப் பண்படுத்திய பின், விதைப்பதற்கென்று வைத்த நெல்லை



ஏர்கொண்டு உழுதல்

நன்றாக ஊற வைத்து நீரை வடிப்பர். நெல்லில் முளை கிளம்பியிருக்கும். அந்த நெல் விதைகளை நாற்றங்காலில் விதைப்பர். ஏறக்குறைய ஒன்றரை மாதம் வரையில் நாற்றங்காலிலேயே நாற்றுகள் வளர்ந்து வரும். பிறகு அவற்றைப் பிடுங்கிக் கட்டாகக் கட்டுவர். உழுது, எருப் போடப்பட்ட நிலங்களில் அவை அகல நடப்படும்.

நாற்றங்காலில் நாற்றுகள் வளருங்கால் உழவர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். நாற்றுகள் முற்றுவதற்குள்

அவற்றை நடுவதற்குரிய வயலைப் பண்படுத்தி விடுவார்கள். நிலத்தை ஆழமாகச் சில முறை உழுவர். சில விடங்களில் நாற்று விடாமல், உழுது விதைப்பதும் உண்டு. நம் நாட்டில் ஏரைக் கொண்டே உழுகின்றனர். ஏரை இழுப்பதற்கு மாடுகள் வேண்டும். மாடுகளை ஏரில் பூட்டி உழும் முறையே நம் நாட்டில் பெரும்பாலும் கையா



நிலத்தைப் பண்படுத்தல்

ளப்படுகின்றது. அயல் நாடுகள் சிலவற்றில் ஏரைக் குதிரைகளும் இழுக்கின்றன. தற்காலத்தில் உழுவதற்கென்று இயந்திரங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றிற்கு 'டிராக்டர்கள்' என்று பெயர். இக்காலத்தில் மேனாடுகளில் டிராக்டர்களாலேயே நிலங்கள் உழப்படுகின்றன. அவை குறைந்த காலத்தில் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை ஆழ உழுது விடுகின்றன. உழவு மாடுகளை ஏரில் பூட்டி நிலத்தை உழுவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை விரைவில் உழுவதற்கு உழவு மாடுகளும், ஏர்களும் பயன்படா. டிராக்டர்களால் மற்றொரு நன்மையும் உண்டாகிறது. உழும் பொழுதே

அவை, வயலில் மேடு பள்ளமில்லாமலும் நிரவி விடுகின் றன. இவ்வாறு செய்வதால் நிலத்தில் எளிதாக நீரைக் கட்டலாம். ஏரைக் கொண்டு உழுத நிலங்களைப் பிறகு சமப்படுத்தவேண்டும். நிலங்களிலுள்ள களைகளையும் அகற்ற வேண்டும்.

பிறகு நிலங்களுக்கு எருவினைப் போட வேண்டும். எரு இரண்டு வகைப்படும். அவை இயற்கை எரு, செயற்கை எரு என்பன. மாட்டுச் சாணம் சாதாரணமாக வயலுக்கு ஏற்ற உரமாகும். ஆடு, பன்றி முதலியவற்றின்



டிராக்டர்

கழிவுகளும் எருவாக உதவுகின்றன. மேலே கூறப்பட்ட மிருகங்களின் கழிவுகளை நிலத்தில் போட்டு வைத்திருக்க வேண்டும். நிலத்தில் பாக்டிரியா எனப்படும் நுண்ணிய கிருமிகள் உள்ளன. கழிவுப் பொருள்களைப் பாக்டிரியா மக்கும்படி செய்யும். அப்பொருள்கள் மக்கி மடிந்து மண்ணோடு மண்ணாகக் கலக்கும் பொழுது பயிருக்கு வேண் டிய பலவகையான உப்புகள் நிலத்தில் தானாகவே உண்

டாகி விடும். மடிந்த தாவரங்களும் நம் நாட்டில் எருவாக உபயோகிக்கப்படுகின்றன. பிண்ணாக்கு, எலும்புத் தூள் முதலியனவும் எருவாக நிலத்தில் இடப்படுகின்றன. வயல்களில் ஆடுகளை மடக்கிக் கிடைபோடும் வழக்கம் நம்நாட்டில் இருக்கிறது. தற்காலத்தில் பலவகையான செயற்கை எருக்கள் தயார் செய்யப்படுகின்றன. ஒரு நிலத்து மண்ணில் எத்தகைய உப்பு குறைவாக இருக்கிற தென்பதை உணர்ந்து, அதற்கேற்ற உப்புகள் மண்ணில் கலக்கப்படுகின்றன. நம் நாட்டில் ஆல்வாய், மேட்டூர் முதலிய இடங்களில் செயற்கை எருக்களைத் தயார் செய்யும் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

நெற் பயிருக்கு மிகுதியாக நீர்வேண்டும் என்று குறிப்பிட்டோம். மழையினால் சில வயல்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். ஆறுகளுக்கு அருகில் உள்ள நிலங்களுக்கு வாய்க்கால்களின் மூலமாகவே நீர்பாய்ச்சப்படுகிறது. சிலவிடங்களில் கிணறுகளிலிருந்து நீரை இறைத்துப் பாய்ச்சுகிறார்கள். கிணறுகளிலிருந்து ஏற்றம் போட்டு நீர் இறைக்கப்படுவதை நீங்கள் பார்த்திருக்கலாம். நம்நாட்டில் ஆறுகள் இல்லாத சில இடங்களில் ஏரியே நீர்ப்பாசனத்திற்கு உதவுகிறது. 'ஏர்' என்ற சொல்லுக்கும் 'ஏரி' என்ற சொல்லுக்கும் தொடர்பு இருக்கிறதல்லவா? ஏர்த் தொழிலுக்கு உதவும் நீர் நிலைகளையே நம் தமிழர் 'ஏரி' என்று வழங்கினர். மேனாடுகளில் நீரை இறைப்பதற்கும் இயந்திரங்கள் உபயோகப்படுகின்றன.

வயல்களில் நெற்பயிர் நிறைந்திருக்கும் காட்சி மிக இன்பமாக இருக்கும். நெல் தோன்றத் தொடங்கும் பொழுது பயிர் நிமிர்ந்து நிற்கும். நெல் மணிகள் முற்றிய பிறகு நெற்கதிர்கள் உலர்ந்து சாய்ந்துவிடும். சாய்ந்த பிறகு கதிர்களை 'அறுவடை' செய்துவிடவேண்டும். முற்றிய கதிர்களைப் பல நாட்கள் வயலிலேயே விட்டு வைத்தல் கூடாது. அறுவடை செய்வதற்கு நம் நாட்டில் அரிவாள்கள் பயன்படுகின்றன. அறுவடை செய்த கதிர்களைக் குடியானவர்கள் வயல்களை அடுத்துள்ள களங்களுக்குக் கொண்டு வந்து சேர்ப்பர்; கதிர்களை அடித்து அவற்றி

ளுள்ள நெல்லைப் பிரிப்பர். அடிப்பதால்மட்டும் கதிர்களில் உள்ள எல்லா நெல்லும் பிரிந்து விடாது. மாடுகள் அக்கதிர்களை மிதிக்குமாறு ஓட்டப்படுவதால் கதிர்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் நெல் உதிர்ந்து விடும். இவ்வாறு மாடுகளை வெருட்டிக் கதிர்களை மிதிக்கச் செய்வது 'பிணையடித்தல்' எனப்படும்.

கதிர்களிலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட நெல்லில் குப்பை கூளங்கள் கலந்திருக்கும். சிறிது உயரமான இடத்திலிருந்து நெல்லைக் காற்றில் தூற்றினுல் அதனேடு கலந்துள்ள குப்பைகள் அகன்று விடும். பிறகு குடியானவர்



நெல்லைக் காற்றில் தூற்றுதல்

கள் நெல்லைக் கோணிகளில் கட்டி வண்டிகளில் எடுத்துச் செல்வர். நெற்பயிரின் தண்டு காய்ந்த பிறகு வைக்கோல் எனப் பெயர் பெறும். அது மாடுகளுக்கு ஏற்ற உணவாக இருப்பது உங்களுக்குத்தெரியும். நெல் பிறகு குதிர்களிலும் களஞ்சியங்களிலும் போட்டு வைக்கப்படும்.

மாணவர்களே, நீங்கள் கிராமங்களுக்குச் செல்ல நேரிட்டால் மேலே கூறப்பட்டுள்ளவற்றை நேரில் கண்

டறியலாம். நீங்கள் கோடை விடுமுறைக்கு உங்கள் கிராமங்களுக்குச் செல்லும்பொழுது பெரும்பாலும் வயல்கள் உலர்ந்து வெடித்திருப்பதையே பார்ப்பீர்கள். உங்கள் பள்ளிக்கூடம் திறக்கப்படும் பொழுது பெரும்பாலான வயல்களில் உழவு தொடங்கப்பட்டு விடும். தசரா விடுமுறை நாட்களில் நாற்றுகள் நடப்பட்டிருக்கும். கிறிஸ்துமஸ் விடுமுறையின் பொழுது பயிர்களில் நெற் கதிர்களைக் காணலாம். அதன் பிறகே நெல் அறுவடை செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்பட்ட புது நெல்லையே கிராமங்களில் பொங்கல் திருநாளன்று பொங்குகிறார்கள். கிராமங்களில் பொங்கல் விழா எவ்வாறு கொண்டாடப்படுகிறது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும்.

உழவுத் தொழிலே ஒரு நாட்டின் உயிர். "உழுவார் உலகத்தார்க்கு ஆணி" என்று வள்ளுவர் கூறுகின்றார். "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை" என்று ஔவையார் கூறியுள்ளார். நம் நாட்டில் உழவுத் தொழிலை உயர்த்துவது இன்றியமையாதது. விவசாயத்திற்கு வேண்டிய சாதனங்கள் நம் நாட்டில் நன்கு அமைந்துள்ளன. அவற்றைப் பயன்படுத்துவது நம்முடைய கடமையாகும்.

## பொருள் காண்க

செய், உரம், மடிந்து, நீர்நிலை, அரிவாள், ஒப்பு, இன்றியமையாதது.

## சிறுவிடை வினாக்கள்

1. நெற்பயிர் வளர்வதற்கு வேண்டிய சாதனங்களுள் மூன்றினை எழுதுக.

2. சோழ நாடும், தஞ்சை ஜில்லாவும் எவ்வெவ்வாறு புகழப்பட்டுள்ளன?

3. இருவகை நெற்பயிர்கள் யாவை?

4. நாற்றங்கால் என்றால் என்ன?

5. 'டிராக்டர்' என்பது யாது? அஃது எதற்குப் பயன்படும்?

6. இருவகை எருக்கள் யாவை?

7. பாக்டீரியா என்பது யாது? அது நிலத்தில் செய்யும் வேலை என்ன?

8. கிடை போடுதல், பிணையடித்தல் : விளக்குக.

9. 'ஏரி' என்ற சொல்லை ஆராய்க.

10. கதிரிலிருந்து பிரிக்கப்பட்டபின் நெல்லைத் தூற்ற வேண்டுவது என்?

11. தமிழ் நாட்டில் நெல்லைப் பெரும்பாலும் அறுவடை செய்யும் மாதம் எது?

## கட்டுரையாக்கம்

1. டிராக்டர்களைக் கொண்டு உழுவதால் விளையும் நன்மைகளை ஐந்து வரிகளில் எழுதுக.

2. இயற்கை எருக்கள் தயார் செய்யப்படும் விதம் யாது?

3. நெல்லை விதைப்பது முதல், வண்டியில் ஏற்றி வீட்டிற்குக் கொண்டு வரும் வரையில் உள்ள பல படிகளை முறைப்படி எழுதி, இரண்டிரண்டு வாக்கியங்கள் எழுதுக.

4. 'நம் நாட்டு விவசாயத்தை விருத்தி செய்யும் முறைகள்' என்பதுபற்றி உங்கள் வகுப்பு மாணவர் சங்கத்தில் ஐந்து நிமிஷப் பேச்சொன்று நிகழ்த்துவதற்குக் குறிப்புகள் தயார் செய்க.

## மொழிப் பயிற்சி

1. உழவுத் தொழிலைப் பற்றியுள்ள பழமொழிகளைத் திரட்டி எழுதுக.

2. தஞ்சையில் நெல் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது: ஒரு காரியம் செய்யப்பட்டதென்று இவ் வாக்கியம் கூறுகிறது. இத்தகைய வாக்கியங்களுள் நான்கினை இப்பாடத்திலிருந்து பொறுக்கி எழுதுக.

3. உழவர்கள் ஏரினால் நிலத்தை உழுகின்றனர் : 'உழப்படுகிறது' என்னும் சொல் வருமாறு இவ் வாக்கியத்தை மாற்றி எழுதுக.

4. **பிரித்துக் காட்டுக:**—தென்னாடு, நெற்பயிர், பருவப்பயிர், மேனாடு, நம்முடைய.

# 7. வீண் செலவு செய்த மகன்

ஒரு சிற்றூரில் செல்வர் ஒருவர் இருந்தார். அவருக்கு மைந்தர் இருவர் இருந்தனர். அவர் தெய்வபக்தி உள்ளவர். பாவம் செய்தவர்கள் நரகத்திற்குப் போவார்கள் என்பதிலும், புண்ணியஞ் செய்தவர்கள் சுவர்க்கம் புகுவார்கள் என்பதிலும் அவருக்கு நம்பிக்கை உண்டு. அவர் ஒரு மாளிகையில் வசித்து வந்தார். வேலைக்காரர்கள் பலர் அவரது மாளிகையில் வேலை செய்து வந்தனர். எனவே அவர் கவலையின்றி வாழ்ந்து வந்தார்.

அவருடைய மைந்தர்களுள் மூத்தவன் பயந்த குணம் வாய்ந்தவன். தந்தை சொல்லை அவன் தட்டி நடப்பதில்லை. தந்தைக்கு உற்ற துணையாக அத்தனயன் இருந்தான். அன்றியும் அவன் சிக்கனமாகவே பணத்தைச் செலவு செய்வது வழக்கம். மூத்தவன் குணத்திற்கு மாருன தன்மைகள் இளையவனிடம் அமைந்திருந்தன. அவன் அடிக்கடி தன் தந்தையினிடம் பணங் கேட்பான்; வீண் செலவு செய்வான்; தந்தை சொல்லைக் கேட்பதே இல்லை. கேட்டபொழுதெல்லாம் பணங் கொடுப்பதற்குத் தந்தை தயங்கினுலும், என்ன செலவு செய்தாய் என்று கேட்டாலும் அவனுக்குக் கோபம் பொங்கி எழும். தனக்கு வேண்டியவற்றைக் கொடுப்பது தந்தையின் கடன் என்று அவன் எண்ணினுன்.

இளையவன் பணம் கேட்கும் பொழுதெல்லாம் தந்தை தவருது கொடுத்து வந்தார். எனினும் இளையவனுக்கு மகிழ்ச்சியே உண்டாகவில்லை. அவன் 'சீ இஃது என்ன வாழ்வு! இவ்வீட்டில் நான் அடிமை போல் வாழ வேண்டி இருக்கிறது. பணம் வேண்டுமானுல் தந்தையினிடம் போய் நிற்கவேண்டியிருக்கிறது. தந்தையின் செல்வத்தில் எனக்குப் பங்கு உண்டல்லவா? இப்பொழுதே தந்தையினிடம் செல்கின்றேன். எனது பங்கைப் பிரித்துக் கொடுக்கும்படி கேட்டு வாங்கி விடுகிறேன். பிறகு நான் என் இஷ்டப்படி செலவு செய்வேன்' என்று எண்ணியவனுய்த் தந்தையை அடைந்தான். தந்தை

அன்புடன், 'குழந்தாய், உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டார். உடனே இளையவன், 'இனி என்னால் இவ்வீட்டில் இருக்க முடியாது. இந்தஅடிமை வாழ்வு எனக்கு வேண்டாம். நான் இவ்வீட்டை விட்டு வெளி யேறப் போகிறேன். உங்கள் சொத்தில் எனக்குரிய பங்கை இப்பொழுதே பிரித்துக் கொடுத்து விடுங்கள்' என்றான்.

இளைய மைந்தனின் சொற்கேட்ட தந்தைக்கு முதலில் சினம் உண்டாயிற்று. ஆனால் அதை உடனே அடக்கிக் கொண்டு விட்டார்; பிறகு சிந்திக்கலானார். 'ஓடுகிறேன் என்னும் பிள்ளையை வீட்டிலேயே நிறுத்தி வைப்பது எப்படி? நிறுத்தினாலும் பயன் இல்லை. அவனுக்குரிய பங்கைக் கொடுத்து விடுவோம். அவன் அச்செல்வத்தை யெல்லாம் சில நாட்களிலேயே செலவு செய்து விடுவது திண்ணம். பிறகு கையில் காசு இல்லாமல் கஷ்டப்படு வான். அப்பொழுது அவனுக்குக் கட்டாயமாக நல்ல புத்தி வந்து விடும். பின்னர் அவன் திருந்தி விடுவான். நான் எவ்வளவு நல்லுரை கூறினாலும் அவன் கேட்கப் போவதில்லை' என்று சிந்தித்த அத் தந்தை, மறுமொழி கூறாமல்,உடனே தமது சொத்தில் இளைய மைந்தனுக்குரிய பங்கைப் பிரித்துக் கொடுத்து விட்டார். மூத்தவன் தந்தை யினிடமே இருந்து வந்தான்.

இளையவன் கூட்டிலிருந்து விடுபட்ட பறவை எவ்வளவு மகிழ்ச்சி அடையுமோ அவ்வளவு மகிழ்ச்சி அடைந்தான். 'இனி நான் வைத்தது சட்டம். என்னை இவ்வுலகில் ஏனென்று கேட்பதற்கு யாருமில்லை. என்னிஷ்டப்படி இனிச் செலவு செய்வேன்; உண்பேன்; உடுப்பேன்; ஆடுவேன்; பாடுவேன்' என்று அவன் எண்ணினான். சில நாட்களில் அவன் அவ்வூரை விடுத்தே கிளம்பி விட்டான்; நெடுந்தூரத்தில் உள்ள ஒரு நகரை அடைந்தான்; தீய வழிகளில் பணத்தைச் செலவு செய்யத் தொடங்கினான். சில நாட்களில் அவனது செல்வம் முழுவதும் கரைந்து விடவே அவன் ஓட்டாண்டியாகி விட்டான். அச்சம யத்தில் அவன் தங்கியிருந்த நாட்டில் பெரும் பஞ்சம்

வந்துவிட்டது. பணம் கொடுத்தாலும் உணவுப் பொருள்கள் அகப்படுவது அருமையாக இருந்தது. அப்படி இருக்கும் பொழுது பணமே இல்லாத அவ்விளைஞன் என்ன செய்வான்? என்றாலும் தான் செய்த காரியம் பிழையானது என்பதை அவன் உணரவில்லை.

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை என்பன பசி வந்திடப் பறந்து போகும் அல்லவா? அவ்விளைஞனையும் பசிப்பிணி வாட்டியது. அவன் அதனால் அந்நகரில் இருந்த ஒரு செல்வனிடம் சென்று தனக்கு வேலை கொடுக்குமாறு கேட்டான். செல்வன் அவனைத் தனது பன்றிகளுக்கு உணவு கொடுக்கும் வேலையில் அமர்த்தினான். செல்வச் சிறுவனுக்கு உண்டான வருத்தத்திற்கு எல்லையில்லை. என்றாலும் என் செய்வது? அவன் தன் தலை விதியை எண்ணியவாறு பன்றிகளுக்கு உணவளிக்கும் வேலையை ஒப்புக் கொண்டான். பன்றிகளுக்கு உணவாகக் கொடுக்கப்பட்டு வந்த உமியும் தோலுமே அவனுக்கும் உணவாகக் கிடைத்தன. ஒரு சிறு ரொட்டித் துண்டைக் கூட அவனால் பார்க்க முடியவில்லை. அவனுக்கு இரங்கி யாரும் உணவு கொடுக்கவில்லை.

இந்நிலையிலேயே அவ்விளையவன் தான் செய்த தவறுகளை உணர்ந்தான். அவன் தன் மனத்தில், 'என்னே என் அறிவீனம்! என் தந்தையோ செல்வர். வேண்டாமென்று வெறுத்து ஒதுக்கும்படியாக உயர்ந்த உணவுகள் எனது வீட்டில் எனக்குக் கிடைக்கும். என் தந்தையினிடம் எவ்வளவு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்! அவர்களையெல்லாம் வெருட்டி ஏவல் கொண்டேனே. அப்படிப்பட்ட நிலையில் இருந்த எனக்கு இன்று பன்றிகளின் உணவை உண்ணும்படியான காலம் வந்துவிட்டதே. இதற்கு நானேதான் காரணம். தந்தையைச் சினந்தேன்; சொத்தில் பங்கு பெற்றேன்; வீண் செலவு செய்தேன்; ஏழை ஆயினேன்; இன்று பன்றி மேய்க்கிறேன். நான் ஒரு மூடன். நானே என் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டேன். இனி நான் என்ன செய்வது?' என்று

சிந்தித்தான். இறுதியில் அவனது மனம் ஒரு முடிவுக்கு வந்தது. அவன் துணிவு கொண்டான். அவன் 'நான் என் தந்தையினிடம் திரும்பிச் செல்வேன். என் பிழைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டுவேன். அவருடைய வேலையாட்களில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும்படி கெஞ்சுவேன்' என்று கூறிக் கொண்டான். அவ்வாறே அவன் சில நாட்களில் தனது ஊருக்குத் திரும்பி வந்துவிட்டான்.

திருந்திய மனத்துடன் திரும்பிவந்த தனயனைத் தந்தை தழுவி மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அவன் தந்தையின் அடிகளில் வீழ்ந்து, 'தந்தையே! யான் பெருந் தவறு செய்துவிட்டேன். எனக்கு நரகம் கிடைக்கப் போவது நிச்சயம். தாங்கள் என் பிழையைப் பொறுத் தருளுங்கள். தங்கள் மகன் என்று சொல்லிக் கொள்வதற்குக் கூட எனக்குத் தகுதி இல்லை. என்னைத் தங்களுடைய வேலையாட்களில் ஒருவனாக அமர்த்திக் கொள்ளுங்கள்' என்றான். தனது குற்றத்தை உணர்ந்து வருந்தும் மகனைத் தந்தை தேற்றினார்; வேலையாட்களை அழைத்தார்; மகனுக்கு நல்லுடையும், நல்லணியும் அணிவித்தார். அவருடைய வீட்டில் கொழுத்த ஆடு ஒன்று இருந்தது. ஒரு நாள் நல்ல விருந்துணவுக்கு ஏற்றதாக இருக்கவேண்டுமென்றே அது கொழுக்க வைக்கப்பட்டது. தந்தை அந்த ஆட்டையும் அன்று கொன்று, சுவையுள்ள உணவைத் தயாரிக்குமாறு கட்டளையிட்டார். இளைய மைந்தன் திரும்பிவந்த அந்நாளை அவர் ஒரு பண்டிகைபோலக் கொண்டாடினர். விருந்துணவு நடந்தது. பின்பு ஆடலும் பாடலும் தொடங்கின. எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். இளையவன் நாணங்கொண்டான்; தவறு செய்த தனக்கு இவ்வளவு பெரிய வரவேற்பா என்று எண்ணினான்; அவனது மனமே அவனைச் சுட்டது.

அவ்வீட்டில் எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருக்கும் பொழுது மூத்த மகன் அங்கு இல்லை. அவன் வயல் வெளிகளில் வேலை செய்வதற்காகச் சென்றிருந்தான். அவன் நெடுநேரம் பாடுபட்டு உழைத்த பிறகு வீட்டை நெருங்கி

னுன். தன் வீட்டில் ஆடலும் பாடலும் நிகழ்வதன் காரணம் அவனுக்குத் தெரியவில்லை. அவன் உடனே ஒரு வேலைக்காரனை அழைத்து, 'வீட்டில் என்ன விசேஷம்' என்று கேட்டான். அதற்கு அவ்வேலைக்காரன், 'ஐயா! வீட்டைவிட்டு ஓடிப்போன உமது தம்பி திரும்பவும் வீட்டிற்கு வந்துவிட்டார். அவர் சுகமாக வீடு திரும்பியதனுல் உமது தந்தை பெருமகிழ்ச்சி அடைந்தார்; அவருக்கென்று இன்று தனி விருந்து வைத்தார். வீட்டில் வளர்க்கப்பட்டுவந்த கொழுத்த ஆட்டைக்கூட இன்று கொன்று விருந்து தயாரிக்கப்பட்டது. விருந்து முடிந்துவிட்டது' என்றுன். அது கேட்ட மூத்த மகனுக்குக் கோபமும், வருத்தமும் உண்டாயின. அவன், "இளையவன் தந்தை சொல்லைக் கேட்கவில்லை; தந்தையுடன் சண்டையிட்டான்; பங்கு பிரித்துக்கொண்டு ஓடினன். அவனுக்கு இப்பொழுது இவ்வளவு பெரிய விருந்து நடக்கிறது! நாமோ வீட்டிலேயே தந்தைக்கு உதவியாக இருக்கிறேம். அவர் ஏவிய வேலைகளையெல்லாம் செய்கிறேம். நமக்கு உபசாரமோ விருந்தோ இல்லை. இஃது என்ன அநியாயம்' என்று எண்ணினன். எனவே அவன் வீட்டிற்குள் நுழையாமல் கோபத்துடன் வெளியிலேயே நின்றுவிட்டான்.

தமது மூத்த மகன் வெளியில் கோபத்துடன் நிற்பது கண்ட தந்தை உடனே வீட்டிற்கு வெளியே வந்தார். அவர் மூத்தவனைப் பார்த்து, 'மகனே, ஏன் கோபத்துடன் இருக்கிறுய்?' என்றூர். மூத்தவனுக்குக் கோபம் பொங்கியது. அவன் தனது தந்தையை நோக்கிச் சீறி, அவரைப் பார்த்துக் கடுங்குரலில், 'இஃது என்ன நியாயம்? ஒழுங்கு தவறியவனுக்கு விருந்து! உங்களுடன் சண்டையிட்டு ஓடியவனுக்கா விருந்து? அதுவும் வீட்டில் அருமையாகக் கொழுக்க வைக்கப்பட்ட ஆட்டின் மாமிசம் அவனுக்கா? நெறி தவறியவனுக்குப் பரிசு! நன்னெறியில் நடக்கின்ற எனக்கு ஒன்றுமே இல்லையா? எனக்கு ஒருநாள்கூடத் தாங்கள் விருந்துணவு கொடுத்ததில்லையே? நான் மகிழ்ச்சியுடன் எந்த நாளிலும் இருந்ததில்லை' என்றுன்.

மூத்த மகனது சீற்றத்தைத் தந்தை ஒருவாறு தணித்தார். பிறகு அவர் அன்பு நிறைந்த சொல்லில் அவனைப் பார்த்து, 'அப்பா குழந்தாய்! கோபத்தை விடு. நீ என்னுடனேயே இருக்கிறாய். நான் உண்ணும் உணவையே நீயும் உண்டாய். நான் அடைந்த இன்பங்களை நீயும் அடைந்தாய். என்னுடைய செல்வம் முழுவதும் உன்னுடையதே. இன்று உனது தம்பி வீட்டிற்குத் திரும்பி விட்டான். அவன் உனது பழைய தம்பி அல்லன். அவன் இப்பொழுது புதிய பிறப்பை எடுத்துவிட்டான். ஒழுக்கம் தவறிய தம்பி இறந்துவிட்டான் என்று எண்ணிக்கொள். இப்பொழுது அவன் நல்லொழுக்கத்துடன் உயிர்பெற்று வந்திருக்கிறான். தனது பிழையை அவன் உணர்ந்து திருந்திவிட்டான். இவ்வுலகில் எல்லோரும் குற்றம் செய்வது இயற்கைதான். செய்த குற்றத்தை ஒப்புக்கொள்வதுதான் அருமையானது. உனது இளவல் அத்தகைய அரிய காரியத்தைச் செய்துவிட்டான். இனி அவன் நல்லொழுக்கத்திலிருந்து தவறமாட்டான். அவனை நாம் ஏற்றுக்கொள்வதே முறையும் நீதியும் ஆகும் என்றார். மூத்தவனும் சினந்தணிந்தான். அன்று முதல் இளையவன் வாய்மை, ஒழுக்கம், அன்பு, அருள் முதலிய நற்குணங்களுடன் விளங்கினான்.

### பொருள் காண்க

இன்றி, உற்ற, சினம், திண்ணம், பிழை, வண்மை, தாளாண்மை, பிணி, இரங்கி, இறுதி, தனயன், அணி, நாணம், நெறி, சீற்றம், இளவல், வாய்மை.

### சிறுவிடை வினாக்கள்

1. செல்வரின் மூத்த மகன் எப்படிப்பட்டவன்? இளையவன் எப்படிப்பட்டவன்?

2. இளைய மகன் கோபத்துடன் தந்தையினிடம் கூறியவை யாவை?

3. செல்வர் தமது இளைய மகனுக்குரிய பாகத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டது எக் கருத்தினால்?

4. வீட்டை விடுத்து மகிழ்ச்சியோடு வெளிவந்த இளைய மைந்தனின் மன நிலைக்குக் காட்டப்பட்ட உவமை யாது?

5. இளையவன் ஏழ்மை நிலையை அடைந்தது எதனால்?
6. புது நகரத்தில் இளையவனுக்கு எவ் வேலை கிடைத்தது?
7. பிழையுணர்ந்து வருந்திய மகன் எம் முடிவுக்கு வந்தான்?
8. வீடு திரும்பிய மகனைத் தந்தை எப்படி உபசரித்தார்?
9. மூத்த மகனுக்குக் கோபம் வந்தது எதனால்?
10. மூத்த மகனது கோபத்தைத் தந்தை எவ்வாறு தணித்தார்?

## கட்டுரையாக்கம்

1. இளைய மகன் புது நகரத்தில் கஷ்டப்பட்டது ஏன்? அவன் பட்ட கஷ்டங்களை ஐந்து வாக்கியங்களில் எழுதுக.

2. இளைய மகன் திருந்திய விதத்தைப் பதினைந்து வரிகளில் வரைக.

3. 'சிக்கனம்' என்னும் பொருள்பற்றி ஐந்து நிமிஷப் பேச்சு நிகழ்த்துவதற்குரிய குறிப்புகள் தயார் செய்க.

## மொழிப் பயிற்சி

1. இளையவன் அடிக்கடி தன் தந்தையினிடம் பணங் கேட்பான்; வீண் செலவு செய்வான்; தந்தை சொல்லைக் கேட்பதில்லை: இஃது என்ன வாக்கியம்? ஏன்? இத்தகைய வாக்கியங்களுள் இரண்டினைச் சொந்தமாக எழுதுக.

2. இஃது என்ன அநியாயம்!

மகனே, ஏன் கோபத்துடன் இருக்கிறாய்?

மேலே காட்டப்பட்டுள்ள இரண்டு வாக்கியங்களுக்கும் உள்ள வேறுபாடு யாது? விளக்குக.

3. இளையவனுக்கு + கோபம் = இளையவனுக்குக் கோபம்

தனக்கு + செய்த = தனக்குச் செய்த

மகனுக்கு + தந்த = மகனுக்குந் தந்த

மூத்தவனுக்கு + பணம் = மூத்தவனுக்குப் பணம்

மேலே காட்டப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளில் வல்லினம் மிகுந்துள்ளது. இதிலிருந்து வல்லினம் மிகும் இடத்திற்கு ஒரு விதி கூறுக.

## 8. மன்னரின் மன மாற்றம்

'குடிமையும் கடமையும்' என்னும் பாடத்தில் நமது பாரத நாட்டுக் கொடியைப்பற்றி நீங்கள் படித்தீர்கள். அக்கொடியில் சக்கரம் ஒன்று இருக்கிறது. அதற்கு 'அசோக சக்கரம்' என்று பெயர். அசோகர் நமது இந்தியாவை ஆண்ட பேரரசர்களுள் தலைசிறந்தவர். அவரது ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியோடு இருந்தனர். நாடு அமைதியாக இருந்தது. அவரது பெயர் அழியாது இன்று நிலைபெற்றிருப்பதற்குக் காரணம் அவரது மனமாற்றமே ஆகும். கலிங்க நாட்டில் அவர் கடும் போர் செய்தார். அப்போரின் கொடுமைகளை நேரிற் கண்டதும் அவர் கலக்கம் கொண்டார். அவரது மனமும் மாறியது. அவ்வரலாற்றைச் சுருக்கமாக ஈண்டு அறிவோம்.

அசோகருக்கு இளமை முதலே போர் செய்வதில் விருப்பம் அதிகம். வீரர்களின் வரலாறுகளை அவர் ஆவலோடு கேட்பார். அவரது பாட்டனாகிய சந்திர குப்தர் பெருவீரராக விளங்கினர் என்பதை நினைத்து நினைத்து அவருள்ளம் பூரித்தது. சந்திரகுப்தர் கிரேக்கர் களுடன் போரிட்டு வென்றார் என்ற செய்தியை யாரேனும் கூறினல் அவர் உடனே துள்ளிக் குதித்து, 'ஆம், எனது பாட்டனர் கிரேக்கர்களைத் துரத்தி அடித்தார். பகைவர் கள் பறந்து ஓடினர். இந்தியர் என்றால் கனவிலும் பகைவர்கள் நடுங்கும்படியாக அவர் செய்து விட்டார். நான் பெரியவனாக வளர்ந்தவுடன் அரசனாக முடிசூட்டிக் கொள்வேன்; எனது பாட்டனாரைப் போலவே பகைவர் களைச் சிதற அடிப்பேன்; இவ்வுலகம் முழுவதையும் வெல்வேன்; ஒரு குடைக்கீழ் ஆளுவேன்' என்பார். அவரது இளமனம் போர் செய்யும் நன்னாளை ஆவலுடன் எதிர்பார்த்தது.

அசோகர் இளமையிலேயே படைக்கலக் கல்வியை நன்கு கற்றார். யானையேற்றம், குதிரை யேற்றம், வாட் போர் முதலியவற்றில் அவர் சிறந்து விளங்கினர். பிற உயிர்களிடத்தில் அன்பு காட்ட வேண்டும் என்று அவரது




ஆசிரியர் அவருக்கு அடிக்கடி கூறுவதுண்டு. ஆனல் அசோகர் அச்சமயங்களிலெல்லாம், 'போர் செய்வதே அரசரது கடமை. போர்க்குச் சென்று முகத்திலும் மார்பிலும் புண் பெருத அரசன் இவ்வுலகில் இருந்து

பயனில்லை. போரில் இறந்த அரசனே வீர சுவர்க்கம் பெறுவான். போரில் தோற்று ஓடுபவன் மனிதருள் கடையானவன் ஆவான்' என்பார். இவ்வாறு அசோகர் சிறந்த வீரர்க்குரிய தன்மைகளெல்லாம் வாய்க்கப் பெற்றிருந்தார்.

அசோகருக்கு வயது இருபத்தொன்று ஆயிற்று. அப்பொழுது அவரது தந்தையும் இறந்தார். அசோகர் பேரரசராக முடி சூட்டிக் கொண்டார். தமது கனவுகள் பலிக்கும் நாள் வந்துவிட்டது என்று அவர் மகிழ்ச்சி கொண்டார். அரியணை ஏறியவுடன் அசோகர் செய்த முதற் காரியம் படை திரட்டியதே ஆகும். ஒரு நாட்டிற்கு இன்றியமையாது வேண்டப்படுவது வலிய படையே என்பது அவருடைய ஊன்றிய கருத்தாகும். சிறந்த வீரர்களை அவர் தமது படையில் சேர்த்துக் கொண்டார். யானைப் படை, குதிரைப் படை, காலாட்படை ஆகிய பிரிவுகள் அவரது படையில் இருந்தன. கடல் போன்ற அப்பெரும் படையைக் கண்டு கண்டு அசோகர் அளவிலா மகிழ்ச்சி கொள்வார்.

போர் செய்ய வேண்டுமென்பது அசோகருடைய விருப்பமல்லவா? ஆனால் பட்டத்திற்கு வந்து எட்டாண்டு வரையில் அவரது விருப்பம் நிறைவேறவில்லை. நாட்டில் கலகமோ, குழப்பமோ நேரிடவில்லை. எங்கும் அமைதி நிலவியது; இந்தியாவில் இருந்த ஏனைய அரசர்கள் அடங்கிக் கிடந்தனர். மேனாட்டவர்களோ அசோகரது படை வலிமையைக் கேட்டவுடன், இந்தியாவைப்பற்றி நினைப்பதையே அகற்றி விட்டனர். இந்நிலையில் அசோகரது விருப்பம் எவ்வாறு நிறைவேறும்? இஃது அவருக்குப் பெருங்குறையாக இருந்தது.

அசோகரது தந்தையாகிய பிந்துசாரர் தென்னிந்தியாவின்மேல் படையெடுத்து வந்து பலரை வென்றிருக்கிறார். ஆனால் பிந்துசாரரோ, சந்திரகுப்தரோ கலிங்க நாட்டைத் தம் பேரரசின்கீழ்க் கொண்டு வரவில்லை. கலிங்க நாடு என்பது இந்தியாவின் கீழ்க் கடற்கரை ஓரத்

தில் உள்ளது. பல நாடுகளை வென்று அடிமைப்படுத்திய தம் தந்தையும், பாட்டனாரும் ஏன் கலிங்க நாட்டின்மேல் மட்டும் படை யெடுக்கவில்லை என்ற எண்ணம் அசோக ருக்கு உண்டாயிற்று. எண்ணம் தோன்றியதுதான் தாமதம். அவர் உடனே கலிங்க நாட்டின்மேல் படை யெடுக்க முடிவு செய்து விட்டார். எனவே அவரது பெரும் படை ஒரு நன்னாளில் கலிங்க நாடு செல்லக் கிளம்பியது. அசோகருடைய கனவு நனவாகும் நாளும் வந்துவிட்டது.

கலிங்கத்தில் போர் தொடங்கியது. ஆ! அப்போர் நிகழ்ச்சியைப்பற்றி எவ்வாறு கூறுவது? யானையும் யானையும் மோதிக் கொண்டன. அது மலையும் மலையும் மோதிக் கொள்வது போல் இருந்தது. குதிரைகள் காற்றி னும் கடுகச் சென்று பகைவரின் குதிரைகளை முட்டின. அஃது அலையொடு அலை மோதுவது போல் இருந்தது. புலியும் புலியும் பொருவது போல் வீரரோடு வீரர் பொரு தனர். வேல்களும் வாள்களும் மின்னின. இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. பகைவரின் தலைகள் அந்த ஆற்றில் மிதந்தன. உடல்கள் கீழே கிடந்தன. கழுகு களும், பருந்துகளும் போர்க்களத்தில் வட்டமிட்டன. எங் கும் பிண நாற்றம் வீசியது. அசோகருக்குப் பெரு வெற்றி கிடைத்தது. அவரது கனவு நனவாயிற்று. அப்பொழுது அவரது உள்ளத்தில் உவகை பொங்கிக் கொண்டிருக்கும் என்று நீங்கள் நினைப்பீர்கள். அன்று அன்று. ஏன்?

அசோகர் போரை விரும்பியது உண்மையே. போர் செய்யும் நன்னாள் எந்நாளோ என்று ஏங்கிக் கொண்டு தான் இருந்தார். அந்நாளும் வந்தது. அசோகர் போர் செய்தார்; வெற்றி பெற்றார். ஆனால் போர்க்களக் காட்சிகளை அவர் கண்டவுடன் அவரது உள்ளம் பதைத் தது; உடல் நடுங்கியது. வீரர்களின் வெட்டுண்ட முகங் கள் அவரைக் கண்டு இகழ்வனபோல் தோன்றின. இறந்த வீரர்களின் மனைவிமார்களும், மக்களும் தம்மைச் சபிப்பது போல அவருக்குத் தோன்றியது. இந்நிலையில் இரவும் வந்தது.

ஆ! அந்த இரவில் அவரது மனம் என்ன பாடுபட்டது! அவர் தமக்குள்ளேயே சிந்திக்கலானார். "என்னே என் மடமை! போர் செய்வதற்குரிய நாள் வருமோ என்று நான் ஏங்கியிருந்தேன். ஆனால் போரினால் விளையும் கொடுமைகளை நான் சிறிதும் ஆராய்ந்து பார்க்கவில்லையே. அந்தோ! இன்று எவ்வளவு பெயர்கள் என் கைவாளுக்கு இரையாயினர்! அவர்கள் எனக்கிழைத்த தீங்கு யாது? அமைதியுடன் இருந்த அவர்களை நானே வலிய வந்து போருக்கு அழைத்தேன்; வெட்டி வீழ்த்தினேன். இதுவோ நீதி? நன்று நன்று. என்னினும் கொடியவர் இவ்வுலகில் உளரோ? ஐயோ! இன்று போர்க்களத்தில் நான் கண்ட காட்சிகளை நினைத்தாலே என் உடல் நடுங்குகிறதே. அவர்களுடைய மனைவிமார்களும், மக்களும் இப்பொழுது எவ்வாறு வருந்துவரோ? தீர்க்க முடியாத பாவத்தை நான் செய்துவிட்டேன். எனக்கு நரகம்தான் கிடைக்கப் போகின்றது" என்று அசோகரின் மனம் நினைத்தது. அதன் பயனாக அவரது மனமும் மாறியது. 'போரே செய்வதில்லை' என்று அவர் உறுதி பூண்டார்.



அசோகர் நாட்டிய ஸ்தூபி

கலிங்கப் போரே அசோகரின் முதற் போர். அதுவே அவரது இறுதிப் போரும் ஆகும். கலிங்கப் போருக்குப் பிறகு அவரது உள்ளத்தில் அருள் நிரம்பியது. அவர் தமது நாட்டிற்குத் திரும்பியவுடன் தமது அமைச்சர், படைத் தலைவர் முதலியோரை அழைத்து ஒன்றுகூட்டினர். அவர்களை நோக்கி அசோகர், 'நண்பர்களே, கலிங்கப் போர் எனது கண்களைத் திறந்துவிட்டது. இனி நான் போர் செய்யப் போவதில்லை. அதற்குப் பதிலாக நான் எனது மக்களுக்கு நல்ல பாதுகாவலை அளிப்பேன். வாள்களையும் வேல்களையும் நான் அவர்களுக்குக் கொடுக்கமாட்

டேன்; ஏரும், ஏனைய உழவுகருவிகளும் அளிப்பேன்; நாட்டில் அமைதியை நிலை நாட்டுவேன். அருளின் உருவமாக உள்ள புத்தர் பெருமான் காட்டிய நல்வழியை நான் இனிப் பின்பற்றுவேன்; அதனைப் பின்பற்றுமாறு பிறரையும் தூண்டுவேன். ஈது உறுதி' என்றார். அதன் படியே அவர் பிறகு நடந்தும் வந்தார்.

அசோகரது ஆளுகையில் நாடுமுழுவதும் அமைதி நிலவியது. மக்கள் கவலையின்றி வாழ்ந்து வந்தனர். அசோகர் மன்னுயிரைத் தன்னுயிர் போல் கருதினார். குடிகளின் இன்ப துன்பங்களைத் தம்முடைய இன்பதுன்பங்களாகக் கருதினார். புத்தர் பெருமானின் அறவுரைகளை இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் பரப்பினார். தம் கருத்தைப் பாறைகளில் செதுக்கினார். ஸ்தூபிகள் எழுப்பினார். இக் காரணங்களால் அவரது ஆட்சியை மக்கள் பொற்காலம் என்று குறிப்பிடுகின்றனர். அசோகரது ஆட்சிச் சிறப்பை இன்று உலகம் ஒருமுகமாகப் புகழ்கின்றது. இத்தகைய அழியாப் புகழை அவருக்கு வாங்கிக் கொடுத்தது கலிங்கப் போர் நிகழ்ச்சியே அன்றோ ?

### பொருள் காண்க

பேரரசர், தலை சிறந்தவர், பூரித்தது, அரியணை, நிலவியது, நனவு, அடிப்படுத்திய, கடுக, பொருதல், உவகை, மடமை, இறுதி, அறவுரை.

### சிறுவிடை வினாக்கள்

1. நமது நாட்டுக் கொடியில் அசோக சக்கரம் அமைக்கப் பட்டிருப்பது ஏன்?

2. அசோகரின் பாட்டனார் யார்? அவரைப்பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுதுக.

3. அசோகருக்கு இளமையில் எழுந்த பேராவல் யாது?

4. மனிதருள் கடையானவன் என்று சொல்லப்படுபவன் யாவன்?

5. அசோகர் அரியணை ஏறியவுடன் செய்த முதற் காரியம் யாது?

6. "இஃது அவருக்குப் பெருங் குறையாக இருந்தது" : சந்தர்ப்பம் வரைக.

7. கலிங்க நாடு எங்குள்ளது?

8. அசோகர் கலிங்க நாட்டின்மீது படையெடுத்ததற்குரிய காரணம் யாதாக இருக்கலாம்?

9. யானையொடு யானை, குதிரையொடு குதிரை, வீரரொடு வீரர் போர் செய்ததற்குக் காட்டப்பட்ட உவமைகளைத் தனித் தனி வரைக.

10. "அவரது கனவு நனவாயிற்று" சந்தர்ப்பம் காட்டி விளக்குக.

11. அசோகரது மனம் மாறியது ஏன்?

12 அசோகர் செய்து கொண்ட உறுதி யாது?

13. அசோகர் தம் குடிகளுக்குச் செய்த நன்மைகளுள் இரண்டினை வரைக.

14. கோடிடப்பட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்துக் காட்டுக:—

(அ) அசோகர்——மதத்தை எங்கும் பரப்பினார்.
(ஆ) சந்திர குப்தர்——வென்று துரத்தினார்.
(இ) புலியொடு புலி பொருவது போல்— —பொருதனர்.
(ஈ) எவ்வுயிருக்கும்——செய்வதில்லை என்று அசோகர் ——பூண்டார்.

## கட்டுரையாக்கம்

1. அசோகரின் இளமைப் பருவத்தைப்பற்றி ஆறு வரிகள் எழுதுக.

2. 'அசோகரின் கலிங்கப் படையெடுப்பு' என்னும் பொருள் பற்றி உங்கள் வகுப்பு மாணவர் சங்கத்தில் பேச்சு நிகழ்த்து வதற்குக் குறிப்புகள் எழுதுக.

3. "மன்னரின் மன மாற்றம்": இத் தலைப்பு இப் பாடத்திற்கு எவ்வாறு பொருந்தும்?

4. கலிங்கப் போரைப்பற்றி எட்டு வரிகள் எழுதுக.

5. அசோகர் செய்த நன்மைகளைப் பத்து வரிகளில் வரைக.

## மொழிப் பயிற்சி

1. ஏறி, ஏரி / திறை, திரை / கறை, கரை / மறம், மரம் — இவற்றினுடைய உச்சரிப்புகளில் உள்ள வேறுபாடுகளைப் புலப்படுத்தி, பொருள் வேறுபாடு விளங்குமாறு ஒவ்வோர் வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

2. நன்னாள்: இதனைப் பிரித்துக் காட்டி, சொற்கள் புணருங்கால் உண்டான எழுத்துத் திரிபுகளை விளக்குக.

3. கடல் போன்ற அப் பெரும் படையைக் கண்டு கண்டு அசோகர் அளவிலா மகிழ்ச்சி கொள்வார்: இவ் வாக்கியத்தில் எழுவாய் எது? அதனை முதலில் அமைத்து வாக்கியத்தை முடித்துக் காட்டுக.

# 9. பசிப்பிணி மருந்து

(ஓர் உரையாடல்)

('இளமையில் துறந்த ஏந்தல்' என்ற பாடத்தி லிருந்து இளங்கோவடிகளுக்குக் கண்ணகியின் வரலாற் றைக் கூறியவர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனர் என்று தெரிந்து கொண்டீர்கள். சிலப்பதிகாரத்தைப் பாடியருளுமாறு அடிகளை வேண்டிக் கொண்டவர் சாத்த ஞர். அவர் 'மணிமேகலை' என்று ஒரு காவியத்தை இயற்றியிருக்கிறார். இக்காவியம் சிலப்பதிகாரத்தோடு தொடர்பு கொண்டது. மணிமேகலை என்பவள் கோவல னுக்கு மாதவியினிடம் பிறந்த மகளாவாள். அவளது துறவைப்பற்றியே 'மணிமேகலை' என்னும் காவியம் கூறுகின்றது. மணிமேகலை மணிபல்லவம் என்ற தீவுக் குச் சென்ற காலத்தில் அவளுக்கு ஓர் அட்சயபாத்திரம் கிடைத்தது. அதற்கு 'அமுத சுரபி' என்று பெயர். அதிலிருந்து எடுக்க எடுக்கக் குறையாமல் உணவு வந்து கொண்டிருக்கும். மணிமேகலை அதிலிருந்து கிடைத்த உணவை மக்களுக்குக் கொடுத்து மக்களின் பசிப்பிணி யைப் போக்கினள்.

'அமுத சுரபி' என்னும் அட்சய பாத்திரம் ஆபுத் திரன் என்பவனுக்குச் சிந்தாதேவி என்ற தெய்வத்தால் கொடுக்கப்பட்டது. அக்காலத்தில் நாட்டில் மழையில்லா மையால் பஞ்சம் ஏற்பட்டிருந்தது. அதனல் மக்கள் பசியால் வாடினர். ஆபுத்திரன் தனது கையில் அமுத சுரபியை ஏந்தி அதன் உதவியால் மக்களின் பசியைப் போக்கிக் கொண்டிருந்தான். அதனை உணர்ந்த இந் திரன் அவனைக் கண்டு வரங்கொடுப்பதற்கும், உலகத்துப் பஞ்சத்தை ஒழிப்பதற்கும் எண்ணினன். எனவே அவன் முதிய அந்தண உருவங்கொண்டு ஆபுத்திரனை அடைந் தான். உருமாறிவந்த இந்திரனுக்கும் ஆபுத்திரனுக்கும் உரையாடல் தொடங்குகிறது)

(உரையாடல்)

அந்தணர் :—அப்பா! உன் கையில் இருப்பது யாது?

ஆபுத்திரன் :—[வணக்கத்துடன்) ஐய, இஃது அமுதசுரபி. இதில் உணவு இருக்கிறது. எடுக்க எடுக்க அவ்வுணவு குறையாது.

அந் :—அப்படியா! வியப்பாக இருக்கிறதே. உனக்கு இஃது எப்படிக் கிடைத்தது?

ஆபுத் :— பெரியவரே! நான் நாள்தோறும் பிச்சை எடுத்துவந்து பலர்க்கும் அதனை அளித்து, எஞ்சியதை நானும் உண்டு வந்தேன். சிந்தாதேவியினது கோயிலின் முன்புறமுள்ள அம்பலத்தில்தான் நான் தூங்குவது வழக்கம். ஒருநாள் இரவு சிலர் என்னை வந்து எழுப்பினர். நான் அவர்களுக்கு வேண்டுவது யாதென வினவினேன். அந்தோ! அவர்கள் முகத்தைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. வாடியமுகம். உட்குழிந்த கண். ஒட்டிய வயிறு. பசிநோயினால் தாங்கள் வருந்துவதாக அவர்கள் கூறினர். ஐயோ! அப்பொழுது என் மனம் என்னபாடுபட்டது! நடு இரவில் நான் உணவுக்கு எவ்விடம் செல்வேன்? நானே பிச்சை எடுத்து வாழ்கின்றவன். எவ்விடத்தில் போய்ப் பிச்சை கேட்பேன்? நான் என்ன செய்வதென்று தெரியாது தவித்தேன். அப்பொழுது சிந்தாதேவி என்ற தெய்வம் என்முன் தோன்றி, என்னிடம் இந்த அமுதசுரபியை ஈந்தது; நாடு வறுமையுற்றாலும் இவ்வோடு வறுமை உறாது என்றும் கூறியது. இதிலிருந்து உணவை எடுத்துப் பசித்து வந்தோர்க்கு அளித்தேன். ஆஹா! அப்பொழுது அவர்கள் முகம் எவ்வளவு மலர்ந்தது! ஆ! அது கண்ட என் மனம் எவ்வளவு மகிழ்ந்தது!

அந்த :—அன்ப! உணர்ந்தேன் உணர்ந்தேன். இப்பொழுது ஏன் கையில் அமுத சுரபியுடன் நிற்கிறாய்?

ஆபுத் :—முதியவரே! இப்பொழுது இந்நாட்டில் பஞ்சம் வந்திருப்பது உங்களுக்குத் தெரியாதா? மழை பெய்து பன்னிரண்டாண்டுகள் ஆயினவே. பசும்புல் லும் பூமியில் தோன்றவில்லையே. உண்ண உணவில் லாமல் மக்கள் படுந்துயரத்தை என்னால் பொறுக்க முடியவில்லை. பசித்து வந்தவர்க்கு உணவு கொடுக்க லாம் என்ற எண்ணத்துடனேயே நான் இப்பாத்தி ரத்துடன் இங்கு நிற்கின்றேன்.

அந்த :—நன்று நன்று. குழந்தாய் மெச்சினேன் உன் குணத்தை. நான் இந்திரன். உனது அமுதசுரபியின் புகழையும், உனது அன்னதானச் சிறப்பையும் கேள்வியுற்று உன்னைக் காணவே நான் இங்கு வந் தேன். உனது மனப்பான்மையை உணரவே உன் னைப்பற்றி யான் வினவினேன்.

ஆபு :—(வியப்புற்று வணங்கி) அமரர்க்கரசரே! உங்களைக் கண்டு நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் விண்ணுலகில் பசித்து வருபவர்கள் உளரோ?

இந்திரன் :—பசியா? எனது நாட்டிலா? நன்று கூறினாய்! மகனே, எங்கள் நாட்டில் பசியும் பிணியும் இல்லை. பிச்சை எடுப்போரும், தானம் அளிப்போரும் இலர்.

ஆபு:—பசித்து வருபவர் இல்லையா? பசித்து வந்தவர் பசியைப் போக்கி, அவர்களது இன்முகத்தைக் காணும் பேறு உங்களுக்குக் கிட்டாதா? அறம் புரி கின்றவர்கள் உங்கள் நாட்டில் இல்லையா?

இந் : — சரி, உனக்கு வரங்கொடுப்பதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன். உனது அறத்தினைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். உனக்கு வேண்டிய வரம் கேள், தருகிறேன்.

ஆபு :—(பெரு நகையுடன்) வரமா? எனக்கா? எனக்கு என்ன வேண்டும்? பசித்தவர்க்கு உணவு கொடுத்து அவர்களுடைய முகங்கண்டு களிப்பதைக் காட்டிலும் சிறந்த இன்பம் என்ன இருக்கிறது? அத்தகைய

இன்பத்தை இந்தத் தெய்வக் கடிகை எனக்குக் கொடுக்கின்றது. இதனிலும் சிறந்த பொருள்களும் உளவோ? அறம் செய்ய வழியே இல்லாத நாட்டின் தலைவராகிய நீங்கள் எனக்குக் கொடுக்கக்கூடியது யாது?

இந் :—உனக்கு நான் தேவபதவியை அளிப்பேன்.

ஆபு :—ஐயையோ! எனக்கா தேவபதவி! வேண்டவே வேண்டாம். உங்கள் உலகத்தில் நான் எப்படி வாழ்வேன்! பசி நீங்கினோரின் இன்முகம் காண இயலாத உமது நாட்டிற்கு நான் வரவேமாட்டேன். எனக்கு இந்த அமுதசுரபி ஒன்றே போதுமானது. (அமுத சுரபியை அணைத்துக்கொண்டு) பசிப்பிணி மருந்தை இடைவிடாது அளித்துக் கொண்டிருக்கும் பாத்திரம் ஒன்றே எனக்குப் போதுமானது.

இந் :—என்ன? நான் சொல்வதைக் கேட்கமாட்டாயா? வரம் வேண்டாமா? இப்பொழுதே நான் இந்நாட்டில் மழை மிகுதியாகப் பெய்யும்படி செய்கின்றேன். அப்பொழுது நாட்டில் பசியே இராது. உன்னைத் தேடி யாரும் வரமாட்டார்கள். அப்பொழுது உனது செருக்கு அடங்கிவிடும்.

ஆபு :—ஐய, தங்கள் சினத்திற்கு யான் அஞ்சவில்லை. இந்நாட்டில் மழை பொழிந்து விளைவு பெருகினால் யான் ஊரூராகச் செல்வேன். பசி நோயால் வருந்துபவர் உளரோ என்று வினவி உணவு கொடுப்பேன். அவர்களுடைய இன்முகம் கண்டு களிப்பேன். பசிப் பிணி மருத்துவனாக இருப்பேன். தங்களுக்கு வணக்கம். (செல்கிறான்).

(உரையாடல் முடிகிறது)

(ஆபுத்திரன்மீது சினங்கொண்ட இந்திரன் நாடு முழுவதும் மழை பெய்யுமாறு செய்கிறான். நாட்டில் பஞ்சம் நீங்கியது. ஆபுத்திரனது அமுத சுரபிக்கு வேலையே இல்லை. அவன் ஊரூராகச் சென்றும் பசித்தோரைக் காணவில்லை. அப்பொழுது சாவக நாட்டில் மழையின்மையால் பஞ்சம் வந்துள்ளது என்று சிலர் அவனுக்குக்

கூறினர். உடனே அவன் சாவக நாட்டிற்கு மரக்கலத்தில் செல்லத் தொடங்கினன். அம்மரக்கலம் ஒருநாள் மணிபல்லவம் என்ற தீவில் தங்கியது. அத்தீவினைக் காணவிரும்பிய ஆபுத்திரன் மரக்கலத்திலிருந்து இறங்கினன். மரக்கலம் கிளம்புவதற்குள்ளாகத் திரும்பி விடலாம் என்று எண்ணியே அவன் அத்தீவினுட் சென்றான். இறங்கியவன் ஏறி விட்டானென்று கப்பலின் தலைவன் எண்ணி, அம்மரக்கலத்தை வேறிடத்திற்கு ஓட்டிச் சென்று விட்டான். ஆபுத்திரன், மக்களே இல்லாத அத்தீவில் தனித்து விடப்பட்டான். எவருமில்லாத தீவில் அமுதசுரபியுடன் இருக்க விரும்பாத ஆபுத்திரன் உயிர் துறக்கத் துணிந்தான். எனவே அவன் அங்குள்ள ஒரு குளத்தில் அப்பாத்திரத்தை விடுத்தான். அவ்வாறு விடுப்பவன், 'பசிப்பிணி தீர்க்கும் பாத்திரமே! நீ ஆண்டிற்கு ஒருமுறை வெளியில் தோன்றுவாயாக. அருள் மிகுந்த உள்ளம் படைத்தவர் வந்தால் அவர் கையில் புகுவாயாக' என்று கூறினன். பிறகு அவன் உண்ணா நோன்பு இருந்து உயிர்துறந்தான். அப் பாத்திரமே பிறகு மணிமேகலைக்குக் கிடைத்தது. மணிமேகலை என்ற நூலுள் இத்தகைய சிறந்த பல நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.)

### பொருள் காண்க

**தொடர்பு, அம்பலம், வறுமை, உருது, அமரர், விண், புரிதல், கடிநை, இயலாத, செருக்கு, மருத்துவன்.**

### சிறுவிடை வினுக்கள்

1. இளங்கோவடிகளுக்குக் கண்ணகியின் வரலாற்றைக் கூறியவர் யார்?
2. 'மணிமேகலை' என்னும் நூலை இயற்றியவர் யார்?
3. மணிமேகலை என்பவள் யார்?
4. அமுதசுரபியின் தன்மை யாது?
5. ஆபுத்திரனுக்கு அமுதசுரபியைக் கொடுத்தது எது? ஏன்?
6. ஆபுத்திரனிடம் இந்திரன் ஏன் வந்தான்?
7. ஆபுத்திரன் தேவபதவி தனக்கு வேண்டாமென்று கூறியது ஏன்?
8. பசிப்பிணி மருந்து எது?

9. ஆபுத்திரன் எங்கு இறந்தான்? ஏன்?

10. அமுதசுரபி மணிமேகலைக்கு எவ்வாறு கிடைத்தது?

11. கீழ்க்கண்ட வாக்கியங்களைப் பொருத்தமாக அமைத்துக் காட்டுக:—(பல விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏற்ற சொல்லைப் பொறுக்கி அமைக்கவும்):—

(அ) அமுதசுரபியை ஆபுத்திரனுக்கு—என்னும் தெய்வம் அளித்தது. (மணிமேகலை, இந்திரன், சிந்தாதேவி, இலக்குமி)

(ஆ) மணிமேகலைக்கு——என்ற இடத்தில் அமுதசுரபி கிடைத்தது. (காவிரிப்பூம்பட்டினம், சாவகநாடு, மணிபல்லவம், காஞ்சிபுரம், வஞ்சி)

(இ) 'மணிமேகலை' என்ற நூலுடன் தொடர்புகொண்ட மற்றொரு நூல்——. (சிந்தாமணி, திருக்குறள், சிலப்பதிகாரம், திருவிளையாடற்புராணம், நளவெண்பா)

## கட்டுரையாக்கம்

1. ஆபுத்திரனுக்கு அமுதசுரபி கிடைத்த வரலாற்றைப் பத்து வரிகளில் எழுதுக.

2. ஆபுத்திரன் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த காரணத்தைப் பத்து வாக்கியங்களுக்குள் எழுதுக.

3. 'பசியினால் வரும் தீங்கு' 'அன்னதானத்தின் சிறப்பு' என்னும் பொருள்கள்பற்றிப் பேசுவதற்கேற்ற குறிப்புகள் தருக.

4. ஆபுத்திரனும், இந்திரனும் உரையாடுவதாக ஓர் உரையாடலை உங்கள் சொந்த வாக்கியங்களில் எழுதுக.

## மொழிப் பயிற்சி

1. **புணர்த்திக் காட்டுக:**—அ + காலம்; இ + ஊர்; எ + இடம்; வேறு + இடம்; வியப்பு + உற்று; எனக்கு + கொடு; நன்கு + பார்.

2. **பிரித்துக் காட்டுக:**—வரங்கொடுத்தல், சினங்கொண்டான், மனமகிழ்ந்தான், இத்தகைய, அப்பாத்திரம், அத்தீவு.

3. இப்பாடத்திலிருந்து உணர்ச்சி வாக்கியம், வினா வாக்கியம் ஆகிய இரண்டு வாக்கியங்களுக்கும் மும்மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.

4. மெச்சினேன் உன் குணத்தை: இவ் வாக்கியத்தின் உறுப்புகளைக் குறிப்பிடுக.

5. சிந்தாதேவி ஆபுத்திரனுக்கு அமுதசுரபியை அளித்தது: இவ் வாக்கியத்தில் செயப்படுபொருள் எது? செயப்படு பொருளை முதலில் வைத்து இவ் வாக்கியத்தை மாற்றி எழுதிக் காட்டுக.

# 10. கலையும் கலைச் செல்வரும்

நமது தென்னாட்டில் கோவில்கள் பல உள்ளன. கோவில்களின் கோபுரங்களைக் கவனித்துப் பாருங்கள். அவற்றின் வானையளாவிய தோற்றம் நமது மனத்தில் எவ்வளவு மகிழ்ச்சியையும், பெருமையையும் உண்டாக்குகின்றது! கோபுரங்களில் எவ்வளவு உருவங்கள் உள்ளன! கற்களில் செதுக்கப்பட்ட அவ்வுருவங்கள் உயிருள்ளவை போலவே தோன்றுகின்றன. கோவிற் சுவர்களில் தீட்டப் பெற்ற சித்திரங்கள் நமது கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்கின்றனவன்றோ? நமது தமிழ் நாட்டை ஆண்ட பல்லவர், பிற்காலச் சோழர் ஆகியோர் காலங்களில் சித்திரக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை முதலியன நன்கு வளர்ந்தன. மகாபலிபுரம், தஞ்சைப் பிருகதீசுவரர் கோவில் முதலிய இடங்களிலுள்ள சிற்ப வேலைப்பாடுகள் நமது பழந்தமிழ் அரசர்களின் கலையார்வத்தை நன்கு விளக்கும்.

அக்காலத்தில் வட நாட்டரசர்களும் கலையை நன்றாய் வளர்த்து வந்தனர். ஸாஞ்சியிலுள்ள ஸ்தூபி அழகிய சிற்ப வேலைப்பாடு அமைந்தது. அதனை எழுப்பியவர் அசோகர். அஜந்தா, எல்லோரா ஆகிய இடங்களில் உள்ள குகைகளில் கண்ணைக் கவரும் சித்திரங்கள் பல உள்ளன. அவை இன்று உலகத்தில் எல்லோராலும் புகழப்படுகின்றன. ஷாஜஹான் என்ற முகலாய அரசரால் ஆக்ரா நகரில் கட்டப்பட்டுள்ள தாஜ்மஹாலைப்பற்றி நீங்கள் எல்லோரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது வெள்ளைச் சலவைக் கல்லால் கட்டப்பட்டது. நம் தேசத்தைக் காண வரும் அந்நியர்கள் தாஜ்மஹாலைப் பாராமல் செல்வதில்லை. இப்படியாக நம் இந்தியா சித்திரக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை முதலியவற்றில் நெடுங்காலமாகவே சிறப்புப் பெற்றுளது.

மேனாட்டிலும் மேற்கூறிய கலைகள் நன்கு வளர்ந்து வந்தன. பழங்காலத்துக் கிரேக்கர்களும் உரோமர்களும் சிற்பக்கலையில் சிறந்து விளங்கினர். அவர்கள் காலத்துச்



தஞ்சைப் பிருகதீசுவரர் கோவில்

சிற்பங்கள் இன்று ஐரோப்பாவில் எல்லோராலும் போற்றப்படுகின்றன. கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பிய மக்களின் மனத்தில் ஒரு புதிய உணர்ச்சி தோன்றியது. இறந்து போன கலைகள் மறுபடியும்

தழைத்து மலரத் தொடங்கின. அழகிய பொருள்களைச் செய்வதில் மக்கள் ஆர்வம் கொண்டனர். மக்களின் அறிவு பல விதங்களில் மேம்பட்டு விளங்கியது. இவ்வாறு மக்களுடைய அறிவு புத்துயிர் பெற்றதை ஐரோப்பியர் "மறுமலர்ச்சி" என்று குறிப்பிட்டனர். மறுமலர்ச்சி இயக்கம் முதலில் சிறந்து விளங்கியது இதாலியில் தான். பிறகு அஃது ஐரோப்பா முழுவதிலும் பரவியது.

மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய கலைஞர்களுள் தலைசிறந்தவராக விளங்கியவர் லியனர்டோ டா வின்ஸி என்பவர். அவர் பல துறைகளில் சிறந்து விளங்கினர். அவர் தீட்டிய சித்திரங்கள் உலகோரால் இன்றும் புகழப்படுகின்றன. அந்தச் சித்திரங்களுள் பெரும் புகழ் பெற்றவை இரண்டாகும். ஒன்று இயேசு நாதரது வாழ்க்கையின் ஒரு பகுதியைச் சித்திரிக்கும் 'இறுதி இராச் சாப்பாடு' என்பது. மற்றொன்று 'மோனலிஸா' என்ற பெண்மணியின் சித்திரம். மோனலிஸாவின் சித்திரம் பேரழகு வாய்ந்தது. அதனைப் படத்தில் பாருங்கள். லியனர்டோவினுடைய சிற்பக்கலை யறிவிற்கு, மிலான் நகரத்திலுள்ள பெருங்குதிரைச் சிலையே போதிய சான்றாகும். அவருக்குத் தெரியாத கலைத் துறையே இல்லை என்று சொல்லப்படுகின்றது.


மோனலிஸாவின் படம்

லியனர்டோ, 1452-ஆம் ஆண்டு வின்ஸி என்ற இடத்தில் ஒரு வழக்கறிஞரின் மைந்தராய்த் தோன்றினர். இயற்கையின் அழகில் அவர் மனம் இளமையிலேயே பெரிதும் ஈடுபட்டது. அழகுமிக்க பூக்களையும், பூச்சி, பறவை முதலியவற்றையும் அவர் பேராவலோடு ஒன்று சேர்ப்பார்; அவற்றைப் போன்ற உருவங்களைத் தீட்டுவார். வயது ஆக ஆக்

அவருக்குச் சித்திரக்கலையிலும், சிற்பக் கலையிலும் திறமை பெருகியது. பிளாரென்ஸின் புகழ்பெற்ற ஓவியர் என்று அவர் எல்லோராலும் போற்றப்பட்டார். பிளாரென்ஸின் அரசர் அவரைத் தம் அரண்மனையின் ஓவியப் புலவராக அமர்த்திக் கொண்டார். லியனர்டோவின் முயற்சியால் பிளாரென்ஸ் நகரம் அழகுடன் விளங்கியது.

லியனர்டோ ஒரு சித்திரத்தைத் தீட்டுவதிலோ, சிற்பத்தை அமைப்பதிலோ ஈடுபட்டுவிட்டால் பசி தாகத்தைக்கூட மறந்து விடுவாராம். 'இறுதி இராச்சாப்பாடு' என்ற சித்திரத்தை அவர் தீட்டுவதற்குப் பல ஆண்டுகள் ஆயின. மிலான் நகரக் கோமகன் ஒரு முறை லியனர்டோவைப் பார்த்து, "உங்களால் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டார். அதற்கு நமது கலைச் செல்வர் புன் சிரிப்புடன், "மண், மரம், கருங்கல், பளிங்கு முதலியவற்றுள் எதைக் கொண்டு வேண்டுமானாலும் நான் அழகிய உருவங்களை அமைப்பேன்; எவ்வுருவத்தை வேண்டுமானாலும் தீட்டுவேன்; நமது முன்னோர் சிறப்புடன் போற்றிவரும் வெண்கலக் குதிரை போன்ற உருவத்தை எவ்விடத்தில் வேண்டுமானாலும் அமைப்பேன்" என்று விடையிறுத்தார். லியனர்டோ டா வின்ஸியைக் கொண்டாடாதவர்கள் உலகில் இலர் என்று கூறலாம்.

நம் நாட்டில் சிறந்த கலைச் செல்வர்கள் பலர் வாழ்ந்திருந்தனர்; இன்றும் வாழ்கின்றனர். நம் தென்னாட்டில் வாழ்ந்த ராஜா இரவி வர்மாவின் சித்திரங்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். கடவுளரின் திவ்விய உருவங்கள், பெரியார்களின் உருவங்கள், சிறந்த சரித்திர நிகழ்ச்சிகள், இயற்கையழகுக் காட்சிகள் முதலிய பலவற்றை இரவிவர்மா அவர்கள் சித்திர உருவில் தீட்டியுள்ளார். வங்காளத்தில் அபனீந்திர நாத தாகூர் என்பவர் சித்திரக் கலையில் புகழ் பெற்றிருந்தார். நீங்கள் அழகிய சித்திரங்கள் பலவற்றைத் தீட்டப் பழக வேண்டும். "சித்திரமும் கைப்பழக்கம்" என்று நமது முன்னோர் கூறியுள்ளனர். சித்திரம் வரைவது சிறந்த இன்பப் பொழுதுபோக்காகும். களைத்த மனத்தைத் தளிர்க்கச் செய்பவை சித்திரங்களே. நீங்கள்

கோயில்களுக்கும், சரித்திரப் புகழ் பெற்ற இடங்களுக்கும் செல்ல நேரிடும் பொழுதெல்லாம், அவ்விடங்களிலுள்ள சித்திர சிற்ப வேலைப்பாடுகளைக் காணத் தவறக்கூடாது. நமது தென்னாடு கலைத்திறமைக்குப் பெரும்புகழ் பெற்றது. அப்புகழ் மேலும் மேலும் ஓங்குமாறு செய்வது உங்களுடைய கடமையாகும்.

### பொருள் காண்க

வான், அளாவிய, ஆர்வம், போற்றுதல், புத்துயிர், தீட்டிய, சான்று, ஓவியர், கோமகன், விடையிறுத்தார்.

### சிறுவிடை வினாக்கள்

1. சிற்ப வேலைப்பாடு அமைந்த கோவில்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.

2. பழங்காலத்தின் சித்திரக்கலைச் சிறப்பை விளக்கும் இரண்டிடங்களைக் குறிப்பிடுக.

3. தாஜ்மஹால் எங்கு யாரால் கட்டப்பட்டது?

4. 'மறுமலர்ச்சி' என்றால் என்ன? அவ்வியக்கம் முதன் முதல் எவ்விடத்தில் தோன்றியது?

5. லியனார்டோ டா வின்ஸி தீட்டிய சித்திரங்களுள் சிறந்தவை யாவை?

6. லியனார்டோ டா வின்ஸியின் சிற்பக்கலையறிவிற்கு ஒரு சான்று காட்டுக.

7. இளமைப் பருவத்தில் லியனார்டோவினிடம் அமைந்திருந்த சிறப்பியல்பு யாது?

8. லியனார்டோ மிலான் நகரத்துக் கோமகனிடம் கூறியவை யாவை?

9. தென்னாட்டில் சிறப்புடன் வாழ்ந்திருந்த ஓவியப் புலவர் யார்?

10. பின்வரும் வாக்கியங்களில் முடிக்குஞ் சொற்கள் விடப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாக்கியத்தின் பக்கத்தில் பல விடைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஏற்ற ஒன்றைப் பொறுக்கியமைத்து, ஒவ்வொரு வாக்கியத்தையும் முடித்துக் காட்டுக.

(அ) தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டியவர்————. (முதலாம் குலோத்துங்கன், கங்கை கொண்ட சோழன், முதலாம் இராசராசன்)

(ஆ) மகாபலிபுரத்துச் சிற்பங்களைத் தோற்றுவித்தவர்கள் ————. (சோழர், பல்லவர், சேரர், பாண்டியர்)

(இ) ஸாஞ்சி ஸ்தூபியை எழுப்பியவர்————. (அசோகர், ஹர்ஷர், சந்திரகுப்தர், அலெக்ஸாந்தர்)

## கட்டுரையாக்கம்

1. 'தென்னாட்டுக் கோவில்கள்' என்னும் பொருள்பற்றிப் பேசுவதற்குரிய குறிப்புக்கள் எழுதுக.

2. 'பல்லவர்களும் சிற்பக் கலையும்' என்பதுபற்றி எட்டு வரிகள் எழுதுக.

3. 'லியனார்டோ டா வின்ஸியின் கலையறிவு' என்பது பற்றிப் பதினைந்து வரிகளுக்குள் ஒரு கட்டுரை எழுதுக.

4. உங்கள் ஊரிலுள்ள கோவிலின் அமைப்பைப் பத்து வரிகளில் வரைக.

## மொழிப் பயிற்சி

1. வலி + இல்லை = வலியில்லை
   தீ + எழுந்தது = தீயெழுந்தது
   கலை + அறிவு = கலையறிவு

மேலே காட்டப்பட்டுள்ளவை புணருங்கால் இடையில் 'ய்' என்ற எழுத்து வந்துள்ளது. அந்த மெய்யெழுத்திற்கு இலக்கணத்தில் அமைந்துள்ள பெயர் யாது? ஏன்?

2. 'கோவில்' என்ற சொல்லை 'கோயில்' என்றும் எழுதலாம்: இதற்குரிய இலக்கணம் யாது?

3. "கோபுரங்களில் எவ்வளவு உருவங்கள் உள்ளன!" இவ்வாக்கியத்தின் இறுதியில் அமைந்துள்ள குறியின் பெயர் என்ன? இத்தகைய வாக்கியங்கள் மூன்று எழுதுக.

## 11. கிருஷ்ணதேவராயரும் அப்பாஜியும்

நமது இந்தியாவில் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு விஜயநகரம் என்றொரு பேரரசு சிறப்புடன் விளங்கியது. அதனை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்த பெருமை கிருஷ்ண தேவராயருக்கும், அவரது சிறந்த அமைச்சரான அப்பாஜிக்கும் உரியது. அப்பாஜியினது அறிவின் நுட்பங்களை விளக்கும்படியான வரலாறுகள் பலவுள்ளன. சாணக்கியர் போன்ற அறிவும் ஆற்றலும் அப்பாஜியின் பால் அமைந்திருந்தன. அவர் சொல்லின் செல்வர்; அரிய கருத்துக்களை எளிய முறையில் எல்லோருக்கும் விளக்குவார். நகைச்சுவை ததும்பப் பேசுவதிலும் அவர் வல்லவர். அவரது நுண்ணறிவை வெளிப்படுத்தும் செய்திகளுள் ஒன்றைக் கீழே வரும் செய்தி நன்கு விளக்கும்.

கிருஷ்ணதேவரது சபைக்கு அப்பாஜி நாள் தோறும் செல்வார்; அரசரோடு உரையாடுவார்; அரசியற் காரியங்களை ஆராய்வார்; அருங்கருத்துக்களைக் கூறுவார். ஒரு நாள் அப்பாஜி, தேவருடைய அரண்மனைக்குத் தாமதமாகச் சென்றார்.

[கிருஷ்ணதேவர் அப்பாஜியைப் பார்த்து, விளையாட்டாக]

**கிருஷ்ண:**—ஏன் இன்று தாமதமாக வந்தீர்! வீட்டில் வேலை மிகுதியாக இருந்ததோ ?

**அப்பாஜி:**—வேலை ஒன்றும் இல்லை. குழந்தையின் தொல்லையை என்னால் பொறுக்கமுடியவில்லை. அதைச் சமாதானப்படுத்தி வருவதற்கு இவ்வளவு நேரம் ஆகிவிட்டது.

**கிருஷ்ண:**—(புன்சிரிப்புடன்) என்ன! குழந்தையின் தொல்லையா? அதற்காக நேரம் கழித்து வருவதா? அது கேட்பதைக் கொடுத்து விடுகிறதுதானே? அது செய்யச்சொல்வதைச் செய்து விட்டால் சரியாகப் போகிறது.

அப்பாஜி :—அரசே, குழந்தை கேட்பதையெல்லாம் நம்மால் கொடுக்கமுடியுமா? நம்மால் செய்யமுடியாதவற்றை யெல்லாம் செய்யும்படி அது வற்புறுத்தும்.

கிருஷ்ண :—ஏன் முடியாது? இதனைச் சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லையா? பெரிய சாம்ராஜ்யத்தின் முதல் மந்திரியாராகிய தங்களால் ஒரு குழந்தை சொல்வதைச் செய்ய முடியாதா?

அப்பாஜி :—வேந்தே, என்னால் மட்டுமல்ல, உங்களாலும் முடியாது. வேறு யாராலும் முடியாது. குழந்தை சொல்வதையெல்லாம் செய்வது சாத்தியமில்லை.

கிருஷ்ண:—(கோபத்துடன்) பகைவர்களை வென்று, பேரரசனாக விளங்கும் என்னால் கூட முடியாதா? தாங்கள் என்னை ஏளனம் செய்கிறீர்களா?

அப்பாஜி :—மன்ன, குழந்தைகளின் தன்மையைத் தாங்கள் உணர மாட்டீர்கள். யாராலும் கொடுக்க முடியாதவற்றை அவை கேட்கும். செய்யமுடியாதவற்றைச் செய்யச் சொல்லி அழும்.

கிருஷ்ண :—எதுவானால் என்ன? என்னால் செய்யமுடியாது என்று தாங்கள் சொல்வது தவறு.

அப்பாஜி: —காவல, நான் சொல்வது சரியே. நான் வேண்டுமானால் சிறிது நேரம் குழந்தை போல் நடிக்கிறேன். தாங்கள் தந்தையாக நடியுங்கள். அப்பொழுது குழந்தைகளின் மனப்பண்பினைத் தாங்கள் உணர்வீர்கள்.

கிருஷ்ண:—சரி, அப்படியே. (தேவர் தந்தையாகவும், அப்பாஜி குழந்தையாகவும் பாவித்துக் கொண்டனர். உடனே அப்பாஜி குழந்தைபோல் அழத் தொடங்கினர். தேவர், அப்பாஜியின் அருகில் வந்து,)

கிருஷ்ண :—குழந்தாய்! ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன வேண்டும்.

அப்பாஜி :—எனக்கு ஒரு சட்டி வேண்டும், ம், ம், ம் (அழுகிறார்).

கிருஷ்ண :—சட்டிதானே வேண்டும்? ஒரு சட்டி என்ன? ஆயிரம் சட்டிகள் வேண்டுமானாலும் தருகிறேன். (தேவர் உடனே ஒரு சட்டி கொண்டு வருமாறு சேவகனை அனுப்பினார். அவனும் உடனே ஒரு சட்டி கொண்டு வந்தான். அது அப்பாஜியினிடம் கொடுக்கப்பட்டது. சட்டியைப்பெற்ற பிறகும் அப்பாஜியின் அழுகை நிற்கவில்லை. அது கண்ட தேவர்)

கிருஷ்ண :—குழந்தாய், ஏன் இன்னும் அழுகிறாய்? இன்னும் உனக்கு என்ன வேண்டும்?

அப்பாஜி :—(அழுது கொண்டே) எனக்கு ஒரு பெரிய பூசணிக்காய் வேண்டும், ம், ம், ம்.

கிருஷ்ண :—இதுதானா பிரமாதம். இப்பொழுதே தருகிறேன். இதற்காக அசடு போல் அழுவதா?

பிறகு தேவரின் கட்டளைப்படி பூசணிக்காய் அங்கு வரவழைக்கப்பட்டது. சட்டியையும், பூசணிக்காயையும் பெற்ற அப்பாஜியின் அழுகை நிற்கவில்லை. தேவருக்குச் சிறிது கோபம் உண்டாயிற்று. எனினும், அவர் அதை அடக்கிக் கொண்டு, குழந்தையாக நடிக்கும் அப்பாஜியைப் பார்த்து 'ஏனப்பா, வீணாக அழுகிறாய்? நீ கேட்டவற்றையெல்லாம் கொடுத்து விட்டேனே. அவற்றை வைத்துக் கொண்டு விளையாடு' என்றார். அதற்கு அப்பாஜி, 'பூசணிக்காயை இந்தச் சட்டிக்குள் போட்டுக் கொடு' என்று அழுதார். அந்தச் சட்டியின் வாய் குறுகலாக இருந்தது. பூசணிக்காயோ பெரியது. கஷ்டப்பட்டுத் திணித்தால் சட்டி உடைந்து விடும். (எனவே தேவர் அப்பாஜியைப் பார்த்து,)

கிருஷ்ண :—எப்படியப்பா பூசணிக்காயைச் சட்டிக்குள் போடுவது? வாய் குறுகலாயிற்றே! பானை உடைந்து விடுமே!

அப்பாஜி :—பூசணிக்காயைப் போட்டுக் கொடுத்தால்தான் ஆயிற்று.

கிருஷ்ண :—குழந்தாய், நீ இப்படியெல்லாம் அழுதால் எனக்குக் கோபம் வரும். எனக்கு அரண்மனைக்குப் போக

வேண்டும். நேரமாகி விட்டது. பானை உடைந்து விடு மென்றால் கேட்கமாட்டேன் என்கிறாயே.

அப்பாஜி :—மாட்டேன், போட்டுக் கொடுத்து விட்டுப்போ.

கிருஷ்ண :—முடியாது.

உடனே அப்பாஜி தரையில் படுத்துக் கொண்டு உருண்டு புரண்டு அழத் தொடங்கினார். தேவர் எவ்வளவோ சமாதானங்கள் சொல்லிப் பார்த் தார். அப்பாஜியாகிய குழந்தை அவற்றைக் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. 'சட்டியில் பூசணிக் காயைப் போட்டுக் கொடு' என்று சொல்லிக் கொண் டே அப்பாஜி கதறிக் கொண்டிருந்தார்; தரையில் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் புரண்டு புரண்டு அழுதார். பார்த்தார் தேவர். அவர் உடனே, 'அமைச்சரே, நீர் நடித்தது போதும். குழந்தை கேட் பதையெல்லாம் கொடுக்க முடியாது; சொல்வதையெல் லாம் செய்ய முடியாது என்ற உண்மையை நான் உணர்ந்து கொண்டேன். இனி நீர் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தாமதமாக இங்கு வாருங்கள்' என்றார். அப்பாஜியும், தமது நடிப்பை நிறுத்தித் தேவருடன் சாதாரணமாக அளவளாவினார். இந் நிகழ்ச்சியைக் கண்டவர்கள் எல்லோரும் அப்பாஜி யின் அறிவு நுட்பத்தினை அறிந்து அவரைப் புகழ்ந் தனர்.

### பொருள் காண்க

**அமைச்சர், ஆற்றல், தொல்லை, வென்று, ஏளனம், பண்பு, பாவித்தல், உணர்தல்.**

### சிறுவிடை வினாக்கள்

1. கிருஷ்ணதேவர் ஆண்டு வந்த சாம்ராஜ்யம் எது?
2. சாணக்கியர் என்பவர் யார்?
3. அப்பாஜி, அரண்மனைக்குத் தாமதமாகச் சென்றது ஏன்?
4. யாராலும் செய்ய முடியாதது எது என்று அப்பாஜி கூறி னார்?
5. குழந்தையாக நடித்த அப்பாஜி கேட்டவை யாவை?

6. குழந்தையாக நடித்த பொழுது அப்பாஜி தேவரிடம் என்ன வேண்டிக் கொண்டார்?

7. குழந்தைகளின் மனப்பண்பினைப் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.

8. அப்பாஜி, தேவருக்கு வெளிப்படுத்திய உண்மை யாது?

## கட்டுரையாக்கம்

1. அப்பாஜியின் அறிவு நுட்பத்தைப் பற்றி ஆறு வரிகள் எழுதுக.

2. இப்பாடத்தில் வந்துள்ள வரலாற்றைச் சுருக்கிப் பதினைந்து வரிகளுக்குள் எழுதுக.

3. தெனாலிராமன் கதைகள், பரமார்த்த குரு கதைகள் ஆகியவற்றுள் உங்களுக்குத் தெரிந்த ஒன்றினை ஒரு பக்கத்திற்குள் எழுதுக.

## மொழிப் பயிற்சி

1.

| | |
|---|---|
| அந்த + உலகம் = அந்தவுலகம்<br>நிற்க + இல்லை = நிற்கவில்லை<br>பலா + இலை = பலாவிலை<br>அம்மா + இடம் = அம்மாவிடம் | இப் புணர்ச்சிகளின் இடையில் புதிதாகத் தோன்றியுள்ள எழுத்து எது? அதன் பெயர் என்ன? ஏன்? |

2. தேவரின் கட்டளைப்படி ஒரு பெரிய பூசணிக்காய் அங்கு வரவழைக்கப்பட்டது: 'வரவழைத்தார்' என்று முடியுமாறு இவ்வாக்கியத்தை அமைத்துக்காட்டுக.

3. குழந்தாய், ஏன் இன்னும் அழுகிறாய்: இது வினா வாக்கியம்: எதனால்? வினாப்பொருளைத் தந்த உறுப்பு யாது?

4. இரண்டாம் வேற்றுமை உருபுடன் வல்லினம் புணரும் பொழுது, வந்த வல்லினம் மிகும் என முன்பு அறிந்தீர்கள். அதற்கு இப்பாடத்திலிருந்து மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.

## 12. துருவம் கண்ட தூயோன்

இன்று உலகத்தில் வலிமை மிக்க சாம்ராஜ்யங்கள் பல உள்ளன. அவற்றுள் அகன்ற இடப்பரப்பை உடையது பிரிட்டிஷ் சாம்ராஜ்யமேயாகும். உலகில் உள்ள எல்லாக் கண்டங்களிலும் அந்த சாம்ராஜ்யம் பரவியுள்ளது. இதற்குக் காரணம் என்ன? ஆங்கிலரின் ஆற்றலே என்று கூறுவது பொருந்தும். அதிலும், அவர்களுடைய கடற்படையே அதற்குக் காரணம் என்று கூறுதல் சாலச் சிறந்தது. ஆங்கிலரிடம் வலிய கடற்படை உள்ளது. அவர்களுக்கு உரிய பிரிட்டிஷ் தீவுகளுக்கு 'கடலரசி' என்ற பெயரும் ஏற்பட்டுள்ளது. அவர்களிடம் கப்பல்கள் கணக்கின்றி இருந்ததனால் அவர்களால் உலகத்தின் பல இடங்களுக்கும் எளிதில் செல்ல முடிந்தது ; குடியேறவும் முடிந்தது.

புதிய இடங்களுக்குச் செல்லக் கப்பல்கள் மட்டும் இருந்தால் போதுமா? கப்பல்களைத் திறம்படச் செலுத்தும் மாலுமிகள் வேண்டாமா? ஆங்கிலருள் அஞ்சா நெஞ்சம் படைத்த மாலுமிகள் பலர் இருந்தனர். அவர்கள் தம் உயிரைப் பொருட்படுத்தவில்லை. ஆழங் காண முடியாத சமுத்திரங்களில் அவர்கள் அச்சமின்றிச் சென்றனர் ; புதிய நாடுகளைக் கண்டுபிடித்தனர் ; ஆங்கிலர் அவ்விடங்களிற் குடியேறுமாறு செய்தனர். இவ்வாறு செய்தவர்களுள் சிறந்தவராகக் காப்டன் குக் என்பவரைக் குறிப்பிடலாம். குக்கைப் போன்ற பலர், புதிய சமுத்திரங்களில் துணிவுடன் செல்வதற்கு வழிகாட்டினர். அதனல் ஆங்கில மாலுமிகளிற் பெரும்பாலோர் எந்த இடத்திற்கும் கப்பலில் துணிவுடன் செல்ல முன் வந்தனர். உலகத்தின் வட கோடியிலும், தென் கோடியிலும் கண்டங்கள் இருக்க வேண்டும் என்று அவர்கள் ஊகித்தனர். அச்சமயத்தில் நார்வே தேசத்தைச் சேர்ந்த டாக்டர் நான்சன் என்பவர் வடதுருவம் சென்று, அவ்விடத்தை ஆராய்ந்து திரும்பினர். இச்செய்தி கேட்ட ஆங்கிலர் தாமும் உலகத்தின்

முனையைக் காண வேண்டும் என்று விரும்பினர்; நான்சன் வடதுருவத்திற்குச் சென்று ஆராய்ந்து விட்டாராதலால், தென்துருவம் செல்வதே சிறந்தது என்று கருதினர்.



காப்டன் ஸ்காட்

எனவே, தென் துருவம் செல்வதற்கென்று அவர்களிடையே ஒரு சிறு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் தலைவராக இருந்தவர் காப்டன் ஸ்காட் என்னும் வீரமாலுமியே ஆவார்.

ஸ்காட் தமது பிரயாணத்தைத் தொடங்குவதற்கு முன்னதாகவே, பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டார். தென் துருவம் செல்வதென்பது எளிய காரியமன்று. அங்குப் பொறுக்கமுடியாத குளிர் இருக்கும். அக்குளிரில் உடம்பு உணர்ச்சியற்றுப் போய்விடும். சமுத்திரத்தின் நீர், பனிக்கட்டியாக உறைந்து போயிருக்கும். அப்பொழுது கப்பலில் செல்ல முடியாது. பனிக்கட்டிகள் சில சமயங்களில் மிதந்துவரும். அவற்றுள் ஒன்றின் மீது கப்பல் மோதினுல் உடனே உடைந்துவிடும். இவைகளுக்குத் தப்பி, துருவத்தை அடைந்தாலும் அங்கு உணவு ஏது? பசும் புல்லைக்கூட எங்கும் காணமுடியாது. கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் எங்கும் பனிப்பாறைகளே காணப்படும். ஆனுல் இவற்றிற்கெல்லாம் ஸ்காட் அஞ்சவில்லை. அவர் பல ஆண்டுகட்குப் போதுமான உணவைத் தயார் செய்து தம்முடன் எடுத்துக் கொண்டார்.

ஸ்லெட்ஜ் வண்டிகள், அவற்றை இழுப்பதற்கு நாய்கள், 'ஸ்கீ' எனப்படும் ஒருவகையான மரச்செருப்புகள் முதலியவற்றையும் ஸ்காட் தம்முடன் கொண்டு சென்ருர். ஸ்லெட்ஜ் என்பது உருளையற்ற ஒருவகை வண்டி. அதைக் கலைமான்களும், நாய்களுமே இழுக்க வல்லவை. பனி மூடிய தரையில் செல்வதற்கு அத்தகைய வண்டிகள் பயன்படும். 'ஸ்கீ' எனப்படும் மரச் செருப்பின் உதவியால் பனித் தரையில் எளிதாக நடக்கலாம். ஸ்காட்டுடன் நான்கு நண்பர்கள் சென்றனர். அவர்கள் சென்ற கப்பலுக்கு 'டிஸ்கவரி' என்பது பெயர். அக்கப்பல் 1901-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31-ஆம் நாள் இங்கிலாந்திலுள்ள தேம்ஸ் நதியிலிருந்து கிளம்பியது. ஸ்காட் தென் துருவம் காணக் கிளம்பிவிட்டார்.

இந்தப் பிரயாணத்தின் பொழுது ஸ்காட்டிற்கு உண்டான துன்பங்களுக்கு அளவில்லை. ஆனுல் அவர் எல்லாவற்றையும் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டார்; துன்பத்தில் இன்பமும் கண்டார். முதலில் 'டிஸ்கவரி' ஆறு மாத காலம் தெற்கு நோக்கிச் சமுத்திரத்தில் சென்றது

அதற்கு மேல் நீரில் செல்ல முடியவில்லை. ஏனெனில் நீர் பனிக்கட்டியாக உறைந்து போய்விட்டது. அதனால் அவர்கள் கோடை வரும் வரையில் அவ்விடத்திலேயே இருக்க வேண்டி நேரிட்டது. பனிக் கட்டியின் மேல் ஸ்லெட்ஜில் அவர்கள் நெடுந்தூரம் சென்று அவ்விடங்களை ஆராய்ந்தனர். மேலே போகப் போக இடையூறுகள் பல உண்டாயின. ஸ்லெட்ஜ்களை இழுத்த நாய்கள் ஒன்றன்பின் ஒன்றாக இறக்கத் தொடங்கின. கொண்டு வந்த உணவும் சுருங்கத் தொடங்கியது. குளிர் பொறுக்க முடியாமல் இருந்ததால் பலர் உணர்ச்சியற்றுப் போய் விட்டனர். எனினும் ஸ்காட் தளர்ச்சியடையாமல் அவ் விடத்திய காட்சிகளைக் கண்டு, குறிப்புகள் எழுதி வந்தார். ஸ்காட் மேலும் தெற்கே சென்று தென் துருவத்தைக் காண விரும்பினார். ஆனால் அவருடன் வந்தவர்கள் அதற்கு ஒருப்படவில்லை. சிலருக்கு நோய் கண்டது. எனவே, 1903-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ஆம் நாள் அவர்கள் தம் நாடு நோக்கித் திரும்ப வேண்டியதாயிற்று. ஆனால் கப்பலைச் சுற்றி நீர் உறைந்து விட்டது. நல்ல வேளையாக அவர்களுடைய உதவிக்காக இங்கிலாந்தி லிருந்து இரண்டு உதவிக் கப்பல்கள் அப்பொழுது வந் தன. அவற்றின் துணையால் அவர்கள் இங்கிலாந்திற்குத் திரும்பினர். தென் துருவத்தைக் காணாது திரும்பியதில் ஸ்காட்டிற்குப் பெருங் குறைதான்.

தென் துருவத்தை என்று காண்பது என்ற ஏக்கத் துடனேயே இருந்த ஸ்காட் மறுமுறை 1911-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-ஆம் நாள் தமது இரண்டாவது பிரயா ணத்தைத் தொடங்கினார். ஸ்காட் மனவுறுதி வாய்ந்தவர். எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்க வேண்டும் என்பதே அவரது நினைவு. இந்த முறை அவரும், அவரது நண்பர்கள் மூவரும் தென் துருவத்தை அடைந்து விட்டனர். தென் துருவத்தைக் கண்டதில் ஸ்காட் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவருக்கு முன்ன தாகவே அந்த இடத்திற்கு நார்வே தேசத்தைச் சேர்ந்த ஒரு குழுவினர் சென்று மீண்டனர். 'தென் துருவத்தை

முதலில் கண்டவர்' என்ற பெயர் தமக்குக் கிடைக்க வில்லை என்பதில் ஸ்காட்டிற்கு வருத்தம்தான். என்றாலும் தமது முயற்சி வெற்றி பெற்றது என்பதில் அவருக்குப் பெரு மகிழ்ச்சியே உண்டாயிற்று.

ஸ்காட்டும், அவரது நண்பர்களும் தென் துருவத்தில் பல அழகிய காட்சிகளைக் கண்டு களித்தனர். தென் முனையில் வாழ்ந்துவந்த பல அழகிய பறவைகள் அவர்களுடைய கண்களைக் கவர்ந்தன. வெள்ளிய பனித்தரையில் நீலமும் பழுப்பும் கலந்த நிறமுடைய பறவைகள் அணியணியாக நிற்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்குமன்றோ! அங்கு அவர்கள் எவ்விதமான தாவரத்தையும் காணவில்லை.

ஸ்காட் பிறகு தமது நண்பர்களுடன் தென் முனையை விடுத்துத் திரும்பினர். ஆனால் அந்தோ பரிதாபம்! அவர்கள் தாம் கண்ட காட்சிகளைத் தம் நாட்டாருக்கு எடுத்துக் கூறும் பேற்றினைப் பெறவில்லை. அவர்கள் திரும்புங்கால் பெருமழை தொடங்கியது. பனிப்புயல் வீசியது. குளிரோ பொறுக்க முடியவில்லை: அவர்கள் உடம்பு மரக்கட்டைகளைப்போல் ஆகிவிட்டன; சிறிது கூட உஷ்ணமே இல்லை. உணவுப் பொருள்களைக் கூடச் சமைக்க முடியவில்லை. சில நாட்களில் ஸ்காட்டுடன் சென்ற நால்வரில் இருவர் இறந்துவிட்டனர். ஏனையோரால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. எனவே அவர்கள் கூடாரம் ஒன்று அமைத்துக்கொண்டு அதனுள் படுத்தனர். அதன் பின் அவர்கள் எழுந்திருக்கவே இல்லை. குளிராலும், பசியாலும் அவர்கள் இறந்து போயினர்.

ஸ்காட் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பு, தமது தாய் நாட்டு மக்களுக்கென்று எழுதி வைத்திருந்த கடிதத்தின் சுருக்கம் வருமாறு:— "நண்பர்களே, நான்கு நாட்களாக நாங்கள் பசியால் வாடுகின்றோம். கூடாரத்தை விடுத்து வெளிப்புறத்தில் வர இயலவில்லை. காற்றொலி காதைச் செவிடுபடுத்துகிறது. எங்கள் உடல் சோர்ந்து விட்டது. என்னால் எழுதக்கூட முடியவில்லை. நாங்கள்

இறக்கப் போவது திண்ணம். எனக்கு ஒரே ஒரு குறை தான். நான் கண்ட காட்சிகளை எனது தாய் நாட்டாருக்கு நேரில் கூறும்படியான பேறு எனக்குக் கிடைக்கவில்லை. எனது நண்பர்கள் என்னுடன் ஒத்துழைத்தனர். எங்களுடைய அனுபவங்கள் சுவை மிக்கன. அவற்றைக் கதைகளாக உங்களுக்குச் சொல்லவேண்டுமென்று நினைத்தேன். உயிருடன் இருந்தால் சொல்லுகிறேன்."

ஸ்காட்டும், அவரது நண்பர்களும் இறந்த செய்தி பல மாதங்களுக்குப் பிறகு இங்கிலாந்து மக்களுக்குத் தெரிந்தது. அவர்கள் அடைந்த வருத்தத்திற்கு எல்லையில்லை. ஸ்காட் தமது அனுபவங்களை நேரில் சொல்வதைக் கேட்டுக் களிக்கவேண்டும் என்று நினைந்திருந்த அவர்கள் மனம் என்ன பாடு படும்? அவரது முடிவு உலக மக்கள் எல்லோரையும் துயரக்கடலில் ஆழ்த்தியது. ஸ்காட்டைப் போன்ற திண்ணிய உள்ளம் படைத்த வீரர்கள் இவ்வுலகத்தில் பலர் வாழ்ந்திருந்தனர்; இன்றும் வாழ்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் சுவை மிகுந்தவை. அவற்றைப் படிப்பதனால் நீங்கள் எத்துணையோ அரிய பல செய்திகளை உணர்ந்து கொள்ளலாம். தந்நலம் துறந்த அப்பெரியார்களின் வரலாறுகளைப் படிப்பதைக்காட்டிலும் இன்பமானது வேறொன்று உண்டோ?

### பொருள் காண்க

அஞ்சா, குழு, அற்று, நினைவு, மீண்டனர், அணி, பேறு, திண்ணம், எத்துணை, இடையூறு.

### சிறுவிடை வினாக்கள்

1. உனக்குத் தெரிந்த சாம்ராஜ்யங்களுள் இரண்டின் பெயரினைக் குறிப்பிடுக.

2. ஆங்கிலேயர் பல இடங்களில் குடியேறுவதற்குச் சாதகமாக இருந்தவை யாவை?

3. நான்சன் என்பவர் யார்? அவர் செய்த அருஞ்செயல் யாது?

4. சமுத்திரத்தின் நீர் பனிக்கட்டியாவது ஏன்?

5. ஸ்லெட்ஜ், ஸ்கீ: ஒவ்வொன்றைப்பற்றியும் இரண்டிரண்டு வாக்கியங்கள் எழுதுக.

6. தேம்ஸ் நதி எங்குள்ளது?

7. ஸ்காட் முதலில் பிரயாணம் செய்த கப்பலின் பெயர் என்ன?

8. தென் துருவத்தில் ஸ்காட் கண்ட அதிசயங்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.

9. ஸ்காட் எவ்வாறு இறந்தார்?

10. கீழே சில பெரியார்களின் பெயர்களும், அவர்கள் செய்த அரும்பெருஞ் செயல்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாகப் பொருத்திக் காட்டுக :—

| பெரியார்கள் | அருஞ்செயல்கள் |
|---|---|
| கொலம்பஸ் | இந்தியாவிற்குக் கடல் வழியைக் கண்டுபிடித்தார். |
| டாக்டர் நான்சன் | ஆஸ்திரேலியத் தீவுகளைக் கண்டுபிடித்தார். |
| காப்டன் குக் | அமெரிக்காவைக் கண்டு பிடித்தார். |
| மங்கோபார்க் | வடதுருவஞ் சென்று ஆராய்ந்தார். |
| வாஸ்கோ ட காமா | ஆப்பிரிக்காவை ஆராய்ந்தார். |

## கட்டுரையாக்கம்

1. தென் துருவத்தைப்பற்றி ஆறு வாக்கியங்கள் எழுதுக.

2. ஸ்காட் தம்முடன் எடுத்துச் சென்ற பொருள்கள் யாவை? அவற்றின் உபயோகங்கள் யாவை?

3. ஸ்காட்டின் தென் துருவப் பிரயாணத்தைப்பற்றி, ஒரு ஐந்து நிமிஷப் பேச்சிற்கு வேண்டிய குறிப்புகள் எழுதுக.

4. ஸ்காட் இறப்பதற்குமுன், ஆங்கில மக்களுக்கு எழுதி வைத்த கடிதத்தின் சுருக்கத்தை ஐந்து வாக்கியங்களில் எழுதுக.

## மொழிப் பயிற்சி

1. இவைகளுக்குத் தப்பி, துருவத்தை அடைந்தாலும் அங்கு உணவு ஏது?: இவ்வினா வாக்கியத்தைச் செய்தி வாக்கியமாக மாற்றுக.

2. பிரித்துக் காட்டுக :—உருவையற்ற, கடற்படை, கடலரசி, அவ்விடம், இச்செய்தி, இவற்றிற்கெல்லாம், தந்நலம்.

3. துயரக்கடல்: இச்சொற்றொடரை விளக்குக.

4. கீழ்வருவனவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக :—வழிகாட்டினர், முன்வந்தனர், பொருட்படுத்தவில்லை, திறம்பட, கண்கொள்ளாக் காட்சி.

# 13. வைட்டமின்

நாம் உயிர் வாழ்வதன் பொருட்டு உணவை உட்கொள்கிறோம். உணவு உடம்பிற்குச் சக்தியைக் கொடுக்கிறது. உணவு உட்கொள்ளா விட்டால் நம்மால் எக்காரியத்தையும் செய்து முடிக்க முடியாது. 'பசிப்பிணி மருந்து' என்னும் பாடத்தில் பசியினல் வரும் கஷ்டங்களைப்பற்றிப் படித்தீர்கள். உணவை 'ஆருயிர் மருந்து' என்று நமது நூல்கள் குறிப்பிடுகின்றன. நாம் சத்துள்ள உணவை உட்கொண்டால் நமது உடம்பு உறுதியாக இருக்கும். நோய்களும் வாரா. ஒருவருடைய உடம்பு நன்னிலையில் இருப்பதற்கேற்ற உணவுத் திட்டத்தை ஆராய்ச்சியாளர்கள் வகுத்துள்ளனர். சீரான கலப்புணவு என்று அதற்குப் பெயர். இவற்றைப்பற்றி விரிவாக உங்களுடைய விஞ்ஞான வகுப்புகளில் நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

நாம் போதிய அளவு உணவுப் பொருள்களை உட் கொண்டாலும், நமது உடம்பில் சில நோய்கள் வருகின்றன; வலிமையும் குறைகின்றது. இதற்குக் காரணம் என்ன? இதைப்பற்றி அறிஞர்கள் பலர் ஆராய்ந்தனர். உட்கொள்ளும் உணவில் சில துணைப்பொருள்கள் குறைவதனலேயே உடம்பில் வலுக்குறைந்து, நோய்கள் வருகின்றன என்று அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். அந்தத் துணைப்பொருளுக்கு 'வைட்டமின்' என்ற பெயரையும் அவர்கள் கொடுத்துள்ளனர். ஆகவே, நமது உணவில் வைட்டமின் என்னும் சத்துப்பொருள் வேண்டிய அளவு இருந்தால், நாம் பல நோய்களிலிருந்து தப்பலாம்; உடம்பும் வளர்ச்சி அடையும்.

ஹாப்கின்ஸ் என்ற ஓர் அறிஞர் இந்த உணவுச்சத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து வந்தார். அவர் ஒரு முறை சில எலிகளைப்பிடித்துக் கூண்டுகளில் அடைத்தார்; அவற்றிற்கென்று, தனியாக உணவைத் தயாரித்தார். அவ்வுணவில் இருந்த சத்துப் பொருள்கள் யாவும் அகற்றப்பட்டுவிட்டன. அத்தகைய உணவையே அவர் எலிகளுக்குக் கொடுத்து வந்தார். சில நாட்களில் அவ்வெலிகளின்

எடை குறைந்தது; உடம்பும் இளைத்து விட்டது. ஹாப்கின்ஸ் பிறகு அவற்றிற்குச் சிறிது பாலைக் கொடுத்து வந்தார். நாளடைவில் அவ்வெலிகள் வளரத் தொடங்கின. பழைய எடையும் அவற்றிற்குத் திரும்ப வந்துவிட்டது. இதிலிருந்து, உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத துணைப்பொருள் பாலில் இருப்பதாக ஹாப்கின்ஸ் முடிவு செய்தார்.

கப்பலில் செல்கின்றவர்களுக்கு ஒருவித நோய் வருவதுண்டு. அதற்கு 'ஸ்கர்வி' என்று பெயர். சோர்வு, மந்தம், தசைகளில் வலி, கண் குழிதல், மூக்கிலிருந்தும் கண்ணிலிருந்தும் இரத்தம் வருதல் முதலியன இந் நோயின் அடையாளங்களாகும். முன் காலத்தில் கப்பலில் சென்ற பலர், இந்நோயால் இறந்தனர். ஒரு முறை ஒரு கப்பலில் சிலர் பிரயாணம் செய்தனர். தாகத்திற்காகச் சிலர் எலுமிச்சம்பழச் சாற்றை உட்கொண்டனர். சிலர் அதனை உட்கொள்ளவில்லை. அவ்வாறு உட்கொள்ளாதவர்களை 'ஸ்கர்வி' நோய் பீடித்தது. எலுமிச்சம்பழச் சாற்றை உட்கொண்டவர்களை அந்நோய் தீண்டவே இல்லை. இதிலிருந்து ஆராய்ச்சியாளர் எலுமிச்சம்பழம், டொமொட்டோஸ், ஆரஞ்சு முதலியவற்றில் துணைப்பொருளாகிய வைட்டமின் உள்ளது என்று முடிவு செய்தனர். அறிஞர்களின் ஆராய்ச்சிகளால் வைட்டமினைப்பற்றிக் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகள் பல. அவற்றுள் சிலவற்றை நாம் இங்குத் தெரிந்து கொள்வோம்.

வைட்டமின் பல வகைப்படும். அவற்றுள் முக்கியமானவை ஐந்து. அவை 'வைட்டமின் எ, வைட்டமின் பி, வைட்டமின் ஸி, வைட்டமின் டி, வைட்டமின் இ' என வழங்கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றிலும் சில உட்பிரிவுகள் உள்ளன. அவற்றைப்பற்றியெல்லாம் நீங்கள் கல்லூரி வகுப்புகளில் விரிவாக அறியலாம்.

**வைட்டமின் எ:**—பால், வெண்ணெய், முட்டை, காட்லிவர் எண்ணெய் ஆகியவற்றில் இந்த வைட்டமின்

இருக்கிறது. தேக வளர்ச்சிக்கு இது மிகவும் இன்றி யமையாதது. இந்தச் சத்து நமது உணவில் கலந்திருந் தால், நாம் சில தொற்று நோய்களால் பீடிக்கப்படாமல் தப்பலாம். இது நம் உணவில் குறைந்தால் கண்ணோய் முதலியன உண்டாகும். இதனல்தான் மருத்துவர்கள் பாலை மிகுதியாக உட்கொள்ளும்படி நமக்குக் கூறுகிறார் கள். உடல் வலிமை குறைந்தவர்கள் முட்டை, காட்லிவர் எண்ணெய் முதலியவற்றை உட்கொள்வது உங்களுக்குத் தெரியும்.

வைட்டமின் பி:—கோதுமையிலும், கைக்குத்தல் அரிசி யிலும் இந்த வைட்டமின் இருக்கிறது. கைக் குத்தல் அரிசியின்மேல் தவிடு ஒட்டிக் கொண்டிருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். அதில்தான் இந்த வைட்டமின் இருக்கிறது. இயந்திரங்களில் தீட்டப்பட்ட அரிசியில் தவிடு நீங்கி விடுகிறது. எனவே அந்த அரிசியில் இந்த வைட்டமின் இல்லை. இதனல்தான் கைக்குத்தல் அரிசி நம் உடம்புக்கு நல்லது என்று பெரியோர்கள் கூறுகின் றனர். வைட்டமின் பி-1 என்று ஒரு பிரிவு உண்டு. அது நம் உணவில் குறைந்தால் 'பெரி-பெரி' என்னும் நோய் உண்டாகும். அந்நோய் வந்தவர்களுக்குச் சோர்வு உண்டாகும். அவர்களால் கைகால்களை மடக்க முடியாது. உடம்பிலுள்ள நரம்புகளும் நோயுறும்.

வைட்டமின் ஸி:—டொமொட்டோஸ், கிச்சிலிப் பழம், ஆரஞ்சுப்பழம், எலுமிச்சம்பழம், பச்சைக் காய்கறிகள், பச்சைக் கீரை முதலியவற்றில் இந்த வைட்டமின் இருக் கிறது. இந்தச் சத்து நம் உணவில் இல்லாவிட்டால் 'ஸ்கர்வி' என்னும் நோய் உண்டாகும்; பல்லீறிலிருந்து இரத்தம் வரும்; சொறி சிரங்குகள் உண்டாகும். உலர்ந்த காய்கறிகளையும், தகரங்களில் அடைக்கப்பட்ட உணவை யும் மட்டும் உபயோகிப்பவர்களுக்கு இந்த வைட்டமின் கிடைக்காது.

வைட்டமின் டி:—இந்த வைட்டமின் காட்லிவர் எண் ணெயில் மிகுதியாக இருக்கின்றது; பால், வெண்ணெய்

நெய் முதலியவற்றில் சிறிதளவு இருக்கின்றது. இது நமது உணவில் குறைந்தால் 'ரிக்கட்ஸ்' என்னும் எலும்பு நோய் உண்டாகும். இந்த வைட்டமினின் உதவியால்தான் நமது எலும்புகளும், பற்களும் உறுதி பெறுகின்றன. குழந்தைகளுக்கு இந்த வைட்டமின் குறைந்தால் அவற்றின் எலும்புகள் வலிமை குன்றி வளைந்துவிடும். சூரியனின் நேர்கதிர்கள் உடம்பில் படுவதால் இந்த வைட்டமின் உண்டாகக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஏழைகளின் குழந்தைகளுக்குப் பாலும் நெய்யும் எவ்வாறு கிடைக்கும்? ஆனல் அக்குழந்தைகளின் உடம்பில் சூரியனின் நேர்கதிர்கள் நன்கு படுகின்றன. அதனல்தான் அவற்றிற்கு இந்த வைட்டமின் செலவில்லாமல் கிடைக்கின்றது. நம் நாட்டில் நெடுங்காலமாக 'சூரிய நமஸ்காரம்' செய்யும் வழக்கம் இருக்கிறது. சூரியனின் கதிர்கள் உடம்பில் படுவது நல்லது என்று நம் முன்னோர்கள் கருதி வந்தனர். இன்றும் மேனடுகளில் 'வெயில் காய்தல்' (Sun Bath) என்ற வழக்கம் இருக்கிறது.

வைட்டமின் இ:—பால், நெய், பாதாம் பருப்பு முதலியவற்றில் இந்த வைட்டமின் இருக்கிறது.

எனவே, நோய்களிலிருந்து தப்புவதற்கும், உடல் உறுதியாக இருப்பதற்கும் நம் உணவில் 'வைட்டமின்' என்னும் சத்துப் பொருள் இருக்க வேண்டும் என்பதை நீங்கள் உணரலாம். சில உணவுப் பொருள்களை மிகுதியாக வேக வைத்தால் அவற்றிலுள்ள வைட்டமின் நீங்கிவிடும். ஆகவே, நமது உணவில் வைட்டமின் போதுமான அளவு சேர்ந்திருக்கிறதா என்று கவனிக்க வேண்டுவது இன்றியமையாதது. இவ்வுண்மைகளை உங்களுடைய தாய்மார்களுக்கும், ஏனையோர்க்கும் எடுத்துரைக்க வேண்டுவது உங்களுடைய கடமையாகும்.

பொருள் காண்க

**பிடித்தது, நாளடைவில், குன்றி, சோர்வு, நோயுறும், கதிர், மேனடு, உரைத்தல்.**

### சிறுவிடை வினக்கள்

1. நாம் ஏன் உணவை உட்கொள்கிரேம்?

2. சீரான கலப்புணவு என்ருல் என்ன?

3. நாம் போதிய அளவு உணவை உட்கொண்டாலும், சில சமயங்களில் ஏன் நோய் வருகிறது?

4. வைட்டமின் என்பது யாது?

5. பாலில் வைட்டமின் இருக்கிறதென்பதைக் கண்டிபிடித்தவர் யார்?

6. 'ஸ்கர்வி' என்ற நோயின் அடையாளங்கள் யாவை? அந் நோய் எப்பொழுது வரும்?

7. 'வைட்டமின் ஏ' எவற்றில் மிகுதியாக உள்ளது?

8. கைக்குத்தல் அரிசி ஏன் உடம்பிற்கு நல்லது?

9. பச்சைக் காய்கறிகளில் உள்ள வைட்டமின் எது?

10. ரிக்கட்ஸ் என்ற நோய் வருவது எதனுல்?

11. சூரிய நமஸ்காரம், வெயில் காய்தல்: சிறு குறிப்புகள் எழுதுக.

### கட்டுரையாக்கம்

1. ஹாப்கின்ஸ் என்பவர் செய்த ஆராய்ச்சியை எட்டு வரிகளில் எழுதுக.

2. 'வைட்டமின்' என்பதுபற்றி ஓர் ஐந்து நிமிஷப் பேச்சிற்கு வேண்டிய குறிப்புகள் எழுதுக.

3. பாலுணவின் பயனைப்பற்றி ஆறு வரிகள் எழுதுக.

4. வைட்டமின் குறைவினல் வரும் நோய்களைக் குறிப்பிட்டு, அந்நோய்களைப் பற்றிச் சுருக்கி எழுதுக.

### மொழிப் பயிற்சி

1. **புணர்த்திக் காட்டுக :—** அருமை + உயிர், நல் + நிலை, நூறு + ஆண்டு; உடம்பில் + உள்ள; இஃது + உண்மை; மேல் + நாடு.

2. சக்தி + இல்லை; துணை + எங்கே; பல + இடம்; பனி + இல்லை; அங்கே + உள்ள: மேற்கண்டவை புணருங்கால் இடையில் தோன்றும் உடம்படுமெய்களைக் குறிப்பிடுக.

3. உணவை 'ஆருயிர் மருந்து' என்று நூல்கள் கூறுகின்றன: இவ் வாக்கியத்தில் 'ஆருயிர் மருந்து' என்னும் சொற்ருெடரின் இரு புறங்களிலும் அமைந்துள்ள குறியின் பெயர் யாது? அக்குறி எப்பொழுது இடப்படும்?

# 14. மாடுகள்

முன் பாடத்தில் உணவிலுள்ள துணைப்பொருள்களைப்பற்றிப் படித்தோம். பாலில் வைட்டமின் மிகுதியாக இருக்கிறதென்றும் ஆண்டுக் கூறப்பட்டது. குழந்தைகள் பாலையே முக்கிய உணவாகக் கொள்கின்றன. ஏனையோரும் பாலைப் பல விதங்களில் உபயோகிக்கின்றனர். மிருகங்களுள் பல, தம் குட்டிகளுக்குப் பால் கொடுக்கின்றன. நமக்கு உபயோகப்படும் பாலானது பசு, எருமை முதலிய மாடுகளிடமிருந்தே கிடைக்கின்றது. ஏர்த் தொழிலுக்கும் மாடுகள் இன்றியமையாது வேண்டப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, நம்முடைய வாழ்க்கைக்குப் பேருதவி செய்வன கால் நடைகளே என்பது கண்கூடு. அத்தகைய கால் நடைகளின் பராமரிப்பில் நாம் கண்ணுங்கருத்துமாய் இருக்க வேண்டும்.

பழங்காலத்தில் நம்நாட்டிற்கு வந்த மக்கள், தங்கள் ஆடுமாடுகளை மேய்ப்பதற்கேற்ற புல்வெளிகளைத் தேடித் திரிந்தனர். அவை மேய்வதற்கேற்ற புல்வெளிகள் இந்தியாவில் இருந்தமையால், அவர்கள் இவ்விடத்திலேயே குடியேறினர். 'மாடு' என்ற சொல்லுக்கே 'செல்வம்' என்று ஒரு பொருள் உண்டு. முற்காலத்தில், ஒருவரிடமுள்ள மாடுகளின் தொகையைக் கொண்டே, அவருடைய செல்வநிலை நிர்ணயிக்கப்பட்டது. மேலும், பழங்காலத்தில் ஆடு, மாடு முதலியவை பண்ட மாற்றிற்கு ஏற்ற பொதுப் பொருளாகவும் இருந்தன. அஃதாவது ஆட்டையோ மாட்டையோ கொடுத்துவிட்டு, மக்கள் தமக்கு வேண்டிய நெல் முதலிய தானியங்களைப் பெற்றுக் கொண்டனர். இந்துக்கள் பசுவினைத் தெய்வமாகக் கருதுவது உங்களுக்குத் தெரியும். சிவபெருமானுக்குரிய ஊர்தி ஒரு காளையே அன்றோ? பொங்கல் திருநாளுக்கு மறு நாளை மாட்டுப் பொங்கல் விழாவாகத் தமிழர் கொண்டாடுகின்றனர். எனவே, நம் நாட்டினர் மாடுகளைத் தம் செல்வமாகக் கருதியிருந்தனர் என்பதையும், அவற்றினல் கிடைக்கும் உதவிகளை நன்கு அறிந்திருந்தனர் என்பதையும் நாம் உணரலாம்.

உலகத்தில் உள்ள மாடுகளுள் மூன்றில் ஒரு பங்கு மாடுகள் நம் இந்தியாவில் உள்ளன என்று கணக்கிடப் பட்டுள்ளது. உஷ்ணப் புல் வெளிகள் உள்ள நாடுகளிலும், மித உஷ்ணப் பிரதேசங்களிலும் மாடுகள் நன்கு வளரும். நம் இந்தியாவில் பதினெட்டுக்கோடி மாடுகள் உள்ளன. என்றாலும், நாம் இப்பொழுது அவற்றினிட மிருந்து முழுப்பயனையும் பெற முடியவில்லை. இதற்குக் காரணம் என்ன ?

நம் நாட்டில் மாடுகள் மிகுதியாக இருக்கின்றனவே ஒழிய, அவற்றிற்குப் போதுமான உணவு இல்லை. இஃது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். நம் இந்தியத்தரை நல்ல வளப்பம் வாய்ந்தது. ஆனால் வளப்பம் வாய்ந்த இடங்களில், நாம், நமக்கு வேண்டிய பொருள்களையே சாகுபடி செய்கின்றோம். மாடுகளுக்கென்று தனியாக நிலங்களை நாம் ஒதுக்கி வைக்கவில்லை. மாடுகள் புறம் போக்கு நிலங்களில் சிறிது வளர்ந்திருக்கும் புல்லையே தின்கின்றன. அவ்வாறு கிடைக்கும் உணவால், அவற்றிற்குக் கால் வயிறு கூட நிரம்புவதில்லை. உணவு போதிய அளவு மாடுகளுக்குக் கிடைக்கவில்லையாதலால் அவை வலுக்குன்றி இளைத்துப் போகின்றன ; விரைவில் இறந்தும் விடுகின்றன. எனவே, மாடுகளுக்கு வேண்டிய உணவு கிடைக்கும் படியாகச் செய்வது நமது முதற் கடமையாகும்.

ஓரிடத்தில் மழை பெய்யாமல், பஞ்சம் வந்தால் அவ்விடத்திலுள்ள மாடுகளே முதலில் இறக்கின்றன. மழையில்லை என்றால் பசும்புல் எவ்வாறு வளரும் ? மேனாடுகளில் இதற்கு ஒரு வழி செய்திருக்கிறார்கள். மேய்வதற் கென்று தனி நிலங்கள் அந்நாடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளன. 'மேய்ச்சல் தரைகள்' என்று அவ்விடங்கள் அழைக்கப்படும். மக்கள், அவ்விடங்களில் புல்லை நன்கு வளர்க்கிறார்கள். புல்லை வளர்ப்பதில் கஷ்டம் அதிகமாக இல்லை. நாம் பெரும் பாடு படவும் வேண்டுவதில்லை. சிறிது முயற்சி செய்தால், நமக்குத் தேவையான மாடுகளுக்கு வேண்டிய புல்லை, நாம் வளர்த்து விடலாம். கோடை காலத்தில் நம் நாட்டு மாடுகள் பசும்புல்லைத்

தேடி அலைகின்றன. இத்தகைய நிலை நீடிக்குமாறு விடுதல் கூடாது. நமக்குப் பேருதவி புரிகின்ற மாடுகளுக்கு வேண்டிய உணவு கிடைப்பதற்கேற்ற வழிவகைகளை நாம் உடனே கைக்கொள்ளவேண்டும்.

மாடுகளால் நமக்கு உண்டாகும் நன்மைகளுக்கு அளவில்லை. பசு, எருமை ஆகியவற்றிலிருந்து பால் கிடைக்கின்றது. நம்முடைய தேவைக்குக் கண்டு எஞ்சிய பாலிலிருந்து தயிர், வெண்ணெய் முதலியன செய்து விற்றுப் பிழைக்கலாம். மேனாடுகளில், பால் மிகுதியாகக் கிடைக்கும்



இடங்களில், பாலிலிருந்து, பாற்பொடி, பாலடைக்கட்டி, புட்டிப்பால் முதலியன செய்யப்படுகின்றன. மாட்டுப் பண்ணைகளும், பாற்பண்ணைகளும் அந்நாடுகளில் பல உள்ளன. நாமும் அத்தகைய பண்ணைகளை அமைக்க வேண்டும். மாடுகளைத் தகுந்த முறையில் பாதுகாத்து வளர்க்க வேண்டும். நம்நாட்டில் காங்கேயம், ஓங்கோல், டெல்ஹி முதலிய இடங்கள் நல்ல மாடுகளுக்குப் பெயர் பெற்றவை. அவ்விடங்களிலிருந்து மாடுகளை வருவித்து வளர்த்து, வலுவுள்ள மாடுகளைப் பெருக்கலாம்.

காளைகளும், எருதுகளும் உழவுத்தொழிலுக்கு உதவு கின்றன. எருது, எருமை முதலிய சொற்கள் 'ஏர்' என்ற சொல்லுடன் தொடர்பு கொண்டிருப்பதை நோக்குங்கள். ஏர்த்தொழிலுக்கு உதவுவதால் தான் அவை அப்பெயர் களைப்பெற்றன. உழுவதற்கும், வண்டியிழுப்பதற்கும் அவை உதவுவதுடன், அவற்றின் சாணம் நிலத்திற்கு ஏற்ற எருவாகின்றது. மாட்டின் தோல், கொம்பு, குளம்பு ஆகிய யாவும் நமக்குப் பயன்படுகின்றன. தொழில்களை நன்கு நடத்தவும் மாடுகள் உதவி செய்கின்றன.

மாடுகளை நல்ல முறையில் வளர்ப்பதை நாம் அறிய வேண்டும். மாடுகளின் உடம்பில் அசுத்தம் சேராவண்ணம், தேய்த்து நீராட்டுவிப்பது மாடுகளை வைத்திருப்பவர்களின் கடமையாகும். மாட்டுக் கொட்டில், மாடு நீருண்ணும் தொட்டி முதலியவற்றைச் சுத்தமாக வைக்கவேண்டும். மாடுகளுக்கு வரும் நோய்களை உடனுக்குடனே கவனிக்க வேண்டும். அவற்றிற்குத் தீனி கிடைக்குமாறும் செய்ய வேண்டும். அரசாங்கத்தார் மாட்டு வைத்திய சாலைகளைப் பலவிடங்களில் ஏற்படுத்தி இருக்கிறார்கள்; மாடுகளை நல்லமுறையில் வளர்ப்பதைப்பற்றி, மக்கள் அறிவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்துள்ளனர். சில இடங் களில் 'கால்நடைக் காட்சிச் சாலைகள்' நடத்தப்படுகின் றன. மாடுகளை வளர்க்கும் முறைகள் அவ்விடங்களில் நன்கு விளக்கப்படுகின்றன.

### பொருள் காண்க

கண்கூடு, பராமரிப்பு, நிர்ணயித்தல், பண்ட மாற்று, புறம் போக்கு நிலம், குன்றி, எஞ்சிய, தொடர்பு, நோக்குங்கள், நீராட்டி.

### சிறுவிடை வினாக்கள்

1. மாடு: இச்சொல்லின் பொருள் யாது? அதிலிருந்து நீங்கள் அறிவது என்ன?
2. பண்ட மாற்று என்றால் என்ன?
3. மாட்டுப் பொங்கல் எப்பொழுது கொண்டாடப்படுகிறது?
4. எத்தகைய இடங்களில் மாடுகள் நன்கு வளரும்?

5. நம்மால் ஏன் மாடுகளிடமிருந்து முழுப்பயனையும் பெற முடியவில்லை?

6. மேய்ச்சல் தரைகள் என்று தனியாகச் சில இடங்கள் ஒதுக்கப்படவேண்டுவது ஏன்?

7. நம் நாட்டில் மாடுகளுக்குப் பெயர் பெற்ற இடங்கள் யாவை?

## கட்டுரையாக்கம்

1. 'மாட்டுப் பொங்கல்' உங்கள் ஊரில் கொண்டாடப்படும் விதத்தையும், அதன் நோக்கத்தையும் பற்றி ஆறு வரிகள் எழுதுக.

2. 'இந்தியாவிலுள்ள மாடுகளின் நிலையும், நமது கடமைகளும்' என்பதுபற்றி, உங்கள் வகுப்பு மாணவர் சங்கத்தில் ஐந்து நிமிஷப் பேச்சொன்று நிகழ்த்தக் குறிப்புகள் எழுதுக.

3. 'மாடுகளினால் நாம் அடையும் நன்மைகள்' என்பது பற்றிப் பத்து வரிகளுக்குள் ஒரு சிறு கட்டுரை எழுதுக.

4. 'உழவுத் தொழிலும் மாடுகளும்' என்பதுபற்றிப் பேசுவதற்குக் குறிப்புகள் எழுதுக.

## மொழிப் பயிற்சி

1. மக்கள் பாலைப் பலவிதங்களில் உபயோகிக்கின்றனர்: இவ்வாக்கியத்தை 'மக்களால்' என்று தொடங்கி முடித்துக் காட்டுக.

2. நம் நாட்டில் மாடுகள் மிகுதியாக இருக்கின்றனவே ஒழிய, அவற்றிற்குப் போதுமான உணவு இல்லை: இவ்வாக்கியத்தை இரண்டு தனிவாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

3. மழையில்லையென்றால் பசும்புல் எவ்வாறு வளரும்: இந்த வாக்கியத்தைச் செய்தி வாக்கியமாக மாற்றுக.

4. ஏர், ஏரி, எருது, எருமை: இச்சொற்களுக்குள்ள தொடர்பினை ஆராய்க.

## 15. எங்கள் இன்பப் பிரயாணம்

(மேட்டூர் அணையைக் கண்டது)

1940-ஆம் ஆண்டு சென்னை, திருவல்லிக்கேணியிலுள்ள இந்து உயர்நிலைப்பள்ளியில் நான், தமிழாசிரியராக இருந்தேன். அந்த ஆண்டு நாங்கள் மாணவர்களுடன் மேட்டூர் அணையையும், வேறு சில இடங்களையும் கண்டு திரும்புவது என்று முடிவு செய்தோம். எங்களுக்கு மைக்கேல்மஸ் விடுமுறை நெருங்கியது. அவ்விடுமுறையில் நான்கு நாட்களுக்குள் எங்கள் இன்பப் பிரயாணத்தை முடித்து விடவேண்டும் என்று எங்கள் தலைமையாசிரியர் கூறினர். நாங்கள் அதற்கு ஒப்புக்கொண்டோம். அவர் தென்னிந்தியப் புகைவண்டிக் கம்பெனியின் அதிகாரி களுக்கு எங்கள் பிரயாணத்தைப் பற்றி எழுதினர். கம் பெனி அதிகாரிகள் மனமுவந்து, எங்களுக்கென்று தனி வண்டியை ஓட்டுவதாகச் செய்தி அனுப்பினர். நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. எங்களுக்கே மகிழ்ச்சி மிகுதியாக இருந்ததென்றால், மாணவர்களின் மகிழ்ச்சி இத்துணையதென்று கூற முடியுமோ?

செப்டெம்பர் மாதம், 22-ஆம் தேதி, இரவு 9-மணி இருக்கும். சென்னை எழும்பூர்ப் புகை வண்டி நிலையத்தில் நின்ற புகைவண்டியில் நாங்கள் அமர்ந்திருந்தோம். புகை வண்டித் தொடரின் இருபுறங்களும் நன்கு அலங்கரிக்கப் பட்டிருந்தன. மாணவர்களின் பேச்சொலியும், ஆர்ப் பொலியும் எழும்பூர் நிலையம் முழுவதும் நிரம்பியிருந்தன. சிலர் பாடினர். சிலர் ஆர்த்தனர். சிலர் கைகொட்டி னர். புகை வண்டியின் ஓர் அறைக்கு எட்டு மாணவர்கள் வீதம் அமர்த்தப்பட்டிருந்தனர். எட்டு மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டிருந்தார். 225 மாணவர் களும், முப்பது ஆசிரியர்களும், ஒரு மருத்துவரும், இரண்டு சேவகர்களும் அவ்வண்டியில் இருந்தனர். சரி யாக 9-30 மணிக்கு எங்கள் வண்டி எழும்பூரை விடுத்துக் கிளம்பியது.

வண்டி செங்கற்பட்டை அடையும் வரை, மாணவர்கள் பேசிக்கொண்டும், பாடிக்கொண்டும் மகிழ்ந்திருந்தனர். அதன் பிறகு ஒவ்வொருவராகத் தூங்கத் தொடங்கினர். எனக்கென்று பிரிக்கப்பட்டிருந்த மாணவர்கள் தூங்கத் தொடங்கியவுடன், நானும் சிறிது கண்ணயர்ந்தேன். இடையிடையே கண் விழித்துப் பார்த்து, எனது எட்டு மாணவர்களும் சரியாக இருக்கின்றனரா என்று பார்த்துக் கொண்டேன்.

காலை மணி $5\frac{1}{2}$ இருக்கும். எங்கள் வண்டி விருத்தாசலத்தில் நின்றது. மாணவர்களும் எழுந்துவிட்டனர். எல்லோரும் வண்டியை விடுத்துக் கீழே இறங்கினோம். நான் எனது எட்டு மாணவர்களையும் வரிசையாக நிற்கச் சொன்னேன். அப்படியே எல்லா மாணவர்களும், அணிவகுத்து நிற்பது போல், நின்றனர். எங்கள் பள்ளிக்கூட உடற் பயிற்சி ஆசிரியர், எங்கள் எல்லோருக்கும் சிறிது உடற் பயிற்சி அளித்தார். 'வலதுபுறம் திரும்பு', 'இடதுபுறம் திரும்பு', 'குனி', 'நிமிர்', 'மூச்சை உள்ளே இழு', 'மூச்சை வெளியே விடு' என்பனவே அப்பயிற்சிகள். அவை எனக்குச் சிறிது கஷ்டமாகத்தான் இருந்தன. என்றாலும் என் செய்வது? ஊருடன் ஒத்துழைக்க வேண்டாமா? பிறகு எல்லோரும் சேர்ந்து ஒரே குரலில் தேசீயப் பாட்டினைப் பாடினோம்; அதன்பின் காலைக்கடன்களை முடித்தோம். பின்னர் எங்களுக்குச் சுடச்சுட இட்டலி, பொங்கல், காப்பி ஆகியவை கிடைத்தன. சிற்றுண்டி முடிந்ததும் நாங்கள் வண்டியில் திரும்ப ஏறினோம். உடற் பயிற்சி ஆசிரியர், ஒவ்வொரு வண்டிக்கும் வந்து, 'எல்லோரும் சரியாக இருக்கின்றார்களா?' என்று கேட்டுவிட்டுச் சென்றார். சுமார் 6-30 மணிக்கு வண்டி நகர்ந்தது.

நாங்கள் 8-30 மணிக்குச் சேலத்தைத் தாண்டி விட்டோம். சுமார் 9-30 மணிக்கு நாங்கள் மேட்டூரை அடைந்தோம். முன்னதாகவே, எங்களை ஏற்றிச் செல்வதற்காக மோட்டார்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரைமணி நேரத்தில் நாங்கள் மேட்டூர் அணையை அடைந்தோம்.

மேட்டூர் அணையின் நீளம் ஒரு மைல் இருக்கும். அத்தேக்கத்தின் பரப்பு அறுபது சதுர மைலாம். அணை அடிப்புறம் பெருத்தும், மேலே செல்லச் செல்லச் சிறுத்தும் காணப்படுகின்றது. அடிப்புறத்தில் அதன் அகலம்



நூற்றெழுபது அடி. மேற்பாகத்தில் அதன் அகலம் இருபது அடி. தேக்கத்தில் நீர் நிரம்பி வழியும்பொழுது பக்கத்தில் ஓடும் நீர் செல்வதற்கு வடிமடை ஒன்றும், அதிக நீரை வெளிவிடும் மதகுகள் பலவும் இருக்கின்றன. தேக்கத்து நீரில் படகுகள் பல மிதந்தன. இவற்றை நாங்கள் கண்டு ஓரிடத்தில் ஒன்றுகூடி வட்டமாக அமர்ந்தோம். அப்பொழுது எங்கள் பள்ளிக்கூடத்தின் பூகோள ஆசிரியர் ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தினர். அவர் பேசியதன் சுருக்கம் வருமாறு :—

"மாணவர்களே, ஆசிரியர்களே, நீங்கள் எல்லோரும் இவ்வணைக்கட்டின் பகுதிகளைப்பார்த்தீர்கள். நமது புகழ் மிக்க சோழநாட்டை வளப்படுத்துவது காவிரியாறே என்பது உங்களுக்குத் தெரியும். அது மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள குடகு நாட்டில் மெர்க்காரா என்னுமிடத்தில் தோன்றுகிறது. குடகு நாட்டில் கோடை காலத்தில் மழை மிகுதியாகப் பொழிகிறது. அதனுல் காவிரியாறு பெருக்கெடுத்து ஓடுகிறது. அது நெடுந் தூரம் மலைப்பிரதேசத்தின் வழியாகவே பாய்ந்து வந்து,

இடையில் மைசூர் ராஜ்யத்தைக் கடந்து, இவ்வூருக்கு அருகில் சமவெளிப் பகுதியில் புகுகிறது. அதனால்தான் ஈண்டு அணை அமைக்கப்பட்டுள்ளது.

காவிரியாறு திருச்சி, தஞ்சை ஜில்லாக்களின் வழியாக ஓடிக் கடலில் விழுகிறது. காவிரியாற்றினால் தஞ்சை ஜில்லாவுக்கு, எதிர்பார்த்த பலன் கிடைக்காமலிருந்தது. இந்த ஆற்றின் நீர் வீணே கடலில் கலந்துகொண்டிருந்தது. இந்நீரைத் தடுத்து, அதன் ஓட்டத்தை ஒழுங்குபடுத்தி, நீர் தேவையான இடங்களுக்கு அனுப்பப்படுதல் வேண்டுமென அறிஞர் பலர் எண்ணினர். எனவே கர்னல் எல்லிஸ் என்பவர் பேரணை ஒன்று கட்டும் திட்டத்தை வகுத்தார். சென்னை நிர்வாக சட்டசபையின் அங்கத்தினராயிருந்த ஸர் சி. பி. இராமசாமி ஐயரவர்கள் இவ்வணை கட்டுவதற்கு வேண்டிய வேறொரு திட்டத்தை அமைத்தார். எனவே 1928-ஆம் ஆண்டில் இவ்வணை வேலை தொடங்கியது. பிறகு மேட்டூர் ஒரு பெரிய நகரமாக்கப்பட்டது. அணைகட்டுவதற்கு உதவும் பெரிய இயந்திரங்களும், சாமான்களும் ஈண்டுக் கொண்டுவரப்பட்டன. இந்தப் பேரணை, ஆறு ஆண்டுகளில் முடிவு பெற்றது. சுமார் ஏழு கோடி ரூபாய் இதன் பொருட்டுச் செலவிடப்பட்டிருக்கின்றது. இத்தேக்கத்திலிருந்து கிடைக்கும் நீரினால், தஞ்சை ஜில்லாவில் உள்ள கணக்கில்லாத வயல்களில், சாகுபடி வேலை நன்கு நடைபெறுகிறது. இவ்வணையைப்பற்றி நீங்கள் அறிய வேண்டுவன பல. அவற்றைச் சொல்ல இப்பொழுது நேரமில்லை. இவ்வளவு நேரம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த உங்களுக்கு என் நன்றி உரித்தாகுக."

சொற்பொழிவு முடிந்த பிறகு, மற்றொரு முறை அவ்வணையின் அமைப்பையும், மதகுகளையும், நீர்த்தேக்கத்தையும் நாங்கள் கண்டோம். அணை கட்ட எண்ணிய அறிஞர்களையும், கட்டி முடிப்பதற்குப் பாடு பட்ட பெரியார்களையும் எங்கள் மனம் வாழ்த்தியது. அப்பொழுது மணி 11- 30 இருக்கும். நாங்கள் எல்லோரும் அவ்வூரிலுள்ள அரசி

யலார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடத்திற்குச் சென்ருேம். பகலுணவு அங்கு எங்களுக்குத் தயாராக இருந்தது. இரண்டு பெரிய கூடங்களில் நாங்கள் வரிசையாக அமர்ந்து உண்டோம். மாணவர்கள் பலவிதமாகப் பேசிக் கொண்டனர். ஒருவன், 'அணை எவ்வளவு உயரம் இருக்கிறது!' என்று வியந்தான். முதல் அமைப்பு மாணவன் ஒருவன், தன் நண்பனைப் பார்த்து, 'ராமு, அந்தப் படகில் ஏறிச் சுற்றுவதற்கு நம்மை ஆசிரியர்கள் அனுமதிப்பார்களா?' என்ருன். ஒருவாறு எங்கள் உணவு முடிந்தது. சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டோம். பிற்பகல் சுமார் மூன்று மணிக்கு நாங்கள் மறுபடியும் அணைக்கட்டை அடைந்தோம்.

அப்பொழுது நாங்கள் பார்த்த இடங்களுள் முக்கியமானது மின் உற்பத்திச்சாலை ஆகும். மேட்டூரில் உண்டாக்கப் படும் மின் சக்தியைக் கொண்டு கணக்கில்லாத இயந்திரங்கள் ஓட்டப்படுகின்றனவாம். அதனல் பல நகரங்களுக்கு மின் விளக்கு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளனவாம். மாலை 5 மணிக்கு நாங்கள் ஒரு பூங்காவில் ஒன்று கூடினேம்; எல்லோருமாகச் சேர்ந்து ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டோம்; மேட்டூர் அணையின் பல காட்சிகளையும் புகைப்படம் எடுத்தோம். திருவல்லிக்கேணியிலுள்ள இந்து உயர் நிலைப்பள்ளியில், இன்றும் அந்தப் புகைப் படப் பிரதிகள் சுவரில் தொங்கிக்கொண்டிருக்கின்றன.

அன்று இரவு, உணவுக்குப்பின் நாங்கள் புகை வண்டியில் ஏறினேம். பிறகு நாங்கள் திருச்சி, தஞ்சை முதலிய இடங்களைப் பார்த்துவிட்டுச் சென்னைக்குத் திரும்பினேம். பிரயாணத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் எல்லோரும், தாம் கண்ட காட்சிகளைப்பற்றிக் கட்டுரைகள் எழுதினர். அவற்றுள் சிறந்த மூன்று கட்டுரைகளுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. இந்தப் பிரயாணத்தினல் ஆசிரியராகிய எனக்கே பெருமகிழ்ச்சி உண்டாயிற்றென்ருல், மாணவர்களுடைய மகிழ்ச்சியின் அளவை எவ்வாறு கூறுவது?

### பொருள் காண்க

உவந்து, இத்துணையது, அமர்ந்து, மருத்துவர், ஆர்த்தனர், ஈண்டு.

### சிறுவிடை வினுக்கள்

1. நாங்கள் எப்பொழுது எழும்பூர்ப் புகைவண்டி நிலையத்திலிருந்து கிளம்பினேம்?

2. விருத்தாசலம் நிலையத்தில் நாங்கள் செய்தவை யாவை?

3. மேட்டூர் அணையின் நீளம், தேக்கத்தின் உயரம் ஆகியவை எவ்வளவு மைல்கள்?

4. காவிரி எங்கு உற்பத்தி ஆகின்றது?

5. காவிரியில் அணைகட்டுவதற்கு மேட்டூர் ஏன் தகுந்த இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது?

6. மேட்டூர் அணையைக் கட்டிமுடிக்க முயன்ற பெரியார் யார்?

7. மேட்டூர் நீர்த்தேக்கத்தினுல் அதிகப்பயனை அடையும் இடம் எது?

8. மேட்டூர் அணையினுல் உண்டாகும் நன்மைகளுள் மூன்றினைக் குறிப்பிடுக.

### கட்டுரையாக்கம்

1. மேட்டூர் அணைக்கட்டின் அமைப்பை ஐந்து வரிகளில் எழுதுக.

2. மேட்டூர் அணையை நாங்கள் கண்டு திரும்பிய செய்தியைப் பதினைந்து வரிகளில் ஒரு கட்டுரையாக எழுதுக.

3. இன்பப் பிரயாணம் செய்வதனுல் உண்டாகும் நன்மைகளைப்பற்றி, உங்கள் வகுப்பு மாணவர் சங்கத்தில் ஐந்து நிமிஷப் பேச்சொன்று நிகழ்த்தக் குறிப்புகள் எழுதுக.

4. உங்கள் ஊருக்கு அருகிலுள்ள ஓர் இடத்தைக் கண்டு திரும்பியதாகக் கற்பனை செய்துகொண்டு, அதைப்பற்றிப் பத்து வரிகளில் ஒரு கட்டுரை எழுதுக.

## மொழிப் பயிற்சி

1. **பிரித்துக் காட்டுக:**—உடற்பயிற்சி, பேச்சொலி, எல்லையில்லை, அளவில்லை, தலைமை யாசிரியர், காவிரியாறு, வேறொரு.

2. **புணர்த்திக் காட்டுக:**—இன்ப + பிரயாணம் ; தென் + இந்தியா ; சிறு + உண்டி ; நிற்க + இல்லை ; செல்ல + செல்ல ; மேற்கு + தொடர்ச்சி ; அ + ஊர் ; புகை + படம்.

3. பின் வருவனவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக :—

ஓட்டப்படுகின்றன, அனுமதிப்பார்களா, நடைபெறுகிறது, அளவில்லை, அமைக்கப்பட்டுள்ளது, தேர்ந்தெடுக்கப்பட்டது, ஒத்துழைப்பு.

4. **எதிர் சொல் கூறுக :**—

இன்பம், நன்மை, ஏறினேம், நிமிர், மகிழ்ச்சி.

5. ஒருவன் அணை எவ்வளவு உயரம் இருக்கிறது என்று வியந்தான் முதல் அமைப்பு மாணவன் ஒருவன் தன் நண்பனைப் பார்த்து ராமு அந்தப் படகில் ஏறிச் சுற்றுவதற்கு நம்மை ஆசிரியர்கள் அனுமதிப்பார்களா என்றான் : ஏற்ற இடங்களில் **நிறுத்தக் குறிகள்** அமைத்துக் காட்டுக.

TB
031 (6)
N49
87060

# 16. கன்னனின் கொடைத்திறம்

## (நாடகக் காட்சி)

(இராமாயணம், பாரதம் என்பன நம் நாட்டில் உள்ள இதிகாசங்கள். அவற்றை முறையே வால்மீகி முனிவர், வியாச முனிவர் ஆகிய இருவரும் வடமொழியிற் செய்துள்ளனர். அவ்வரலாறுகளைத் தமிழில் பலர் பாடியுள்ளனர். கம்பரால் பாடப்பட்ட இராமாயணமும், வில்லி புத்தூராழ்வாரால் பாடப்பட்ட மகா பாரதமும் தமிழில் சிறந்து விளங்குகின்றன. வில்லிபுத்தூரார் பாரதம் அழகிய சந்த விருத்தங்களைக் கொண்டது. அதன் ஓசை நயம், படிப்போர்க்கும், கேட்போர்க்கும் இன்பம் பயக்கும். ஈண்டு மகாபாரதத்தின் ஒரு சிறு பகுதி நாடக உருவத்தில் காட்டப்பட்டுள்ளது.

பாண்டவர்களும், கௌரவர்களும் தாயபாகம் காரணமாகப் போர் செய்தனர். பதினெட்டு நாட்கள் கடும் போர் நிகழ்ந்தது. பாண்டவர்கள் வெற்றி பெற்றனர். கௌரவர்களின் பக்கத்தில் கன்னன் என்னும் வீரன் இருந்தான். அவன் சிறந்த கொடையாளியும் ஆவான். போரின் பதினாறாவது, பதினேழாவது நாட்களில் அவன் படைத் தலைமை தாங்கினான். அருச்சுனன் விடுத்த அம்புகளால் அவன் தளர்ந்தான். எனினும் அவன் அதுவரை செய்து வந்த தர்மம் அவனைக் காத்து வந்தது. புண்ணியப் பயன் அவனை விடுத்து அகலும் வரையில் அவனை யாராலும் கொல்ல முடியாது. எனவே, அருச்சுனனின் தேரை ஓட்டிய கண்ணன், ஒரு முதிய அந்தண உருவுடன் கன்னனிடம் வந்து, அவனுடைய புண்ணியப் பயனைக் கொடையாகப் பெற்றுச் செல்கின்றார். அந்நிகழ்ச்சியே இங்கு நாடக உருவில் அமைந்துள்ளது.)

இடம் : போர்க்களம்

காலம் : மாலை

பாத்திரங்கள் : கன்னனும், கண்ணனும்.

கன்னன் :— (தனிமொழி) என்னே வியப்பு ! இன்று பாரதப் போரை முடித்துவிடவேண்டுமென்று எண்ணினேன். அது முடியாதுபோலிருக்கிறதே. அருச்சுனன் ஒருவனைக் கொன்றுவிட்டால் அதுவே போதும். போர் முடிந்துவிட்டதாகக் கருதி விடலாம். ஏனையோரை நான் ஒரு கணத்தில் கொன்றுவிடுவேன். இன்று பகைவர்கள் எல்லோரையும் நான் கொன்றுவிடுவேன் என்று எனது உயிர் நண்பனாகிய துரியோதனன் கருதி யிருக்கிறான். தேர்ப்பாகனின் இல்லிடத்தே வளர்ந்த என்னை அவன், தாயினும் பன்மடங்கு அதிகமாகப் போற்றி உதவினான் ; என்னை அரசனாக்கினான். அவனுக்கு நான் செய்யக்கூடிய கைம்மாறு என்ன இருக்கிறது? ஒன்று, பகைவர்களைக் கொல்ல வேண்டும். இல்லையெனில் போரில் இறந்தாவது என் கடமையைச் செலுத்த வேண்டும். இன்று ஒரு முடிவு கண்டுவிடவேண்டும். (அம்பு விடுகிறான்) என்னே, என் கைகள் நடுங்குகின்றனவே! எனது கவச குண்டலங்கள் குலைந்தன. மகுடம் அழிந்தது. என்றாலும் நான் தளர்தல் கூடாது. உடம்பில் உயிர் இருக்கும் வரையில் போர் செய்வது எனது கடமை.

(கண்ணன் முதிய அந்தண உருவுடன் வருகிறார்)

கன்னன் :— (அந்தணரைப் பார்த்து) முனிவரே. வருக வருக. நும்முடைய வரவு நல்வரவாகுக. என்ன ! போர்க்களத்திற்கு வந்தீர்களே. தாங்கள் யார்? தங்களுக்கு என்ன வேண்டும் ?

கண்ணன் :— கொடைச் செல்வ, யான் மேரு மலையில் தவம் புரிகின்றேன். வறுமைத் துயரால் வாடுகின்றேன். உனது கொடைப் புகழை யான் கேள்வியுற்றேன். உன்னைக் காண வேண்டுமென்னும் அவா எனக்கு உண்டாயிற்று. எனவே நான் இங்கு வந்தேன். ஆனால், அந்தோ ! நீ போர் செய்துகொண்டிருக்கிறாயே. உனது உடலும் தளர்ந்து விட்டது. இந்நிலையில் உன்னிடம் ஒன்றினைக் கேட்க என் மனம் ஒருப்படவில்லை. யான் செல்கின்றேன்.

கன்னன் :— அந்தணரே, நன்று நன்று. இன்று வரையில் இரப்பவர்க்கு யான் இல்லை என்று சொன்ன தில்லை. அம்புகள் தைக்கப்பெற்ற எனது உடல் சல்லடைக் கண்களாகக் காட்சி யளிக்கின்றதைப் பாருங்கள். நான் இன்னும் சிறிது நேரத்தில் இறக்கப்போகின்றேன். சாதலின் இன்னாதது, இரப்பவர்க்கு இல்லை என்று கூறுவதல்லவா ? எனினும் உங்களை வெறுங் கையுடன் அனுப்ப நான் விரும்பவில்லை. ஆகவே தாங்கள் அருள் கூர்ந்து, என்னிடம் உள்ள ஒரு பொரு ளைக் கேளுங்கள், தருகிறேன். ஐய, 'இறக்கும்பொழுது கன்னன் இல்லை என்று கூறினன்' என்ற அவச் சொல் எனக்கு வராதவாறு தாங்கள் காக்கவேண்டும். கேளுங்கள், கேளுங்கள், என்னிடம் இப்பொழுது உள்ள ஒரு பொருளைக் கேளுங்கள். (வணங்கி எழுகிறான்)

கண்ணன் :—ஏன்? உனது புண்ணியப் பயனைக் கொடுத்து விடு. அஃது உன்னிடம் தானே இருக்கிறது.

கன்னன்:— (முகமலர்ச்சியுடன் மீண்டும் வணங்கி) தவக் குன்றே, இன்று தாங்கள் எனக்குச் செய்த உதவியை வேறு யார் செய்வர்? தங்களுக்கு யான் எழுமையும் கடப்பாடுடையேன். யான் இரப்பவர்க்குப் பொன் னும் மணியும் பொருந்துமாறு அளித்த அந்நாளில் தாங்கள் வரவில்லை. எனது உயிரோ நிலையிலிருந்து கலங்கி விட்டது. அஃது எனது யாக்கையின் அகத் தில் இருக்கப் போகின்றதோ, வெளியிற் செல்லப் போகின்றதோ எனக்குத் தெரியவில்லை. யான் செய்த புண்ணியத்தின் பயன் முழுவதையும் உங்க ளுக்குக் கொடுத்தேன். ஈது உறுதி. பிரமனுக்கும் மேலான தாங்கள் கேட்கும் பொழுது, தங்களுக்கு அதைக் கொடுப்பதில் யான் மிக மகிழ்ச்சி அடைகின் றேன்.

கண்ணன் :—நன்று நன்று. வாய்ச்சொல் அளித்தால் போதுமோ? நீரினல் தாரைவார்த்துக் கொடுக்க வேண்டாமா?

கன்னன்:—ஐய, நீரினால் தாரை வார்த்துத்தானே கொடுக்க வேண்டும். இதோ, செந்நீர் இருக்கிறது. (தன்மார்பில் பதிந்திருந்த ஓர் அம்பினைப் பெயர்த்தெடுக்கிறான். இரத்தம் சொரிகிறது. அந்தச் செந்நீரினால் தாரை வார்க்கின்றான். முனிவர் பெறுகின்றார்)

கண்ணன்:— (மகிழ்ச்சியுடன்) அன்ப, உனது கொடையை நான் வியக்கிறேன். உனது கொடையே கொடை. உனது வீரமே வீரம். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் தருகிறேன்.

கன்னன் :—வரமா? ஆம், ஒரு வரம் எனக்கு வேண்டும். யான் எவ்வளவு பிறப்புக்கள் எடுத்தாலும் எனக்குச் செல்வமும், கொடைப்பண்பும் வேண்டும். இல்லை யென்போர்க்கு இல்லையென்று உரையாத இதயம் எனக்கு வேண்டும். தருவீரோ?

கண்ணன் :—கன்ன, தந்தேன் வரம். யான் திருமால். கண்ணனாக அவதரித்தவன் யானே. என் உண்மை உருவை மறைத்து அந்தணர் உருவுடன் இங்கு வந்தேன். நீ பார். (அந்தணர் திருமால் உருவுடன் காட்சி கொடுக்கிறார். அவரது கைகளில் வில், வாள், கதை, சங்கு, சக்கரம் ஆகிய பஞ்ச ஆயுதங்களும் இருக்கின்றன. கன்னன் பக்தியுடன் பணிந்து எழுகிறான். கண்ணனைப் பார்த்து)

கன்னன்:—யான் பெற்ற பேற்றினை இவ்வுலகில் யார் பெற்றனர்? என் பிறவிப்பயனை இன்றுயான் பெற்றேன். முனிவர்களும், யோகியர்களும் பல நாட்கள் கடுந்தவம் செய்தும் காணப் பெறாத உங்கள் திருமேனியை இன்று யான் கண்டேன். எனது கடமைகளை முடித்து விட்டேன். எனது உயிர் நண்பனாகிய துரியோதனனுக்கு என் உயிரை இன்று கொடுத்து, செஞ்சோற்றுக் கடன் கழிக்கின்றேன். உயிர் போகும் நேரத்தில் உங்கள் தரிசனம் கிடைத்தது. இனி எனக்குக் கவலையில்லை. மகிழ்ச்சியோடு இன்று இறப்பேன்.

(தரையில் வீழ்ந்து வணங்குகின்றான்)

**கண்ணன்:**—அன்ப, யானே இப்போரின் நிகழ்ச்சிகளுக் கெல்லாம் காரணம். பாரதப் போரை முடிக்கவே யான் அவதரித்தேன். நாளையுடன் போர் முடிந்து விடும். நீ வைகுந்தப் பதவியைஅடைவாயாக. (தெய்வ உருவம் கொண்ட கண்ணன் செல்கின்றார். கன்னன் வணங்கியவாறே கிடக்கின்றான். திரை விழுகிறது).

(பதினேழாம் நாள் மாலையில் கன்னன் இறக்கின் றான். பதினெட்டாம் நாள் துரியோதனன் முதலியவர்கள் இறக்கின்றனர். பாண்டவர்கள் வெற்றி பெற்றனர். பாரதப் போரும் முடிந்தது. இவ்வரலாற்றை வில்லிபுத் தூராழ்வார் மிக அழகாகப் பாடியுள்ளார்.)

### பொருள் காண்க

முதிய, போற்றி, கைம்மாறு, குலைந்தன, அவா, இரப்பவர், ஈந்தான், அவச்சொல், எழுமை, இன்னுதது, கடப்பாடு, அகம்.

### சிறுவிடை வினுக்கள்

1. இதிகாசங்கள் யாவை? அவற்றை வடமொழியிற் செய்தவர்கள் யாவர்? தமிழிற் செய்தவர்கள் யாவர்?
2. பாரதப்போர் யார் யாருக்குள் நடந்தது? ஏன்?
3. கண்ணன் சென்றபொழுது, கன்னனின் நிலை எவ்வாறு இருந்தது?
4. கன்னனின் உயிர் நண்பன் யாவன்?
5. கண்ணன் தான் எங்கிருந்து வந்ததாகக் கன்னனிடம் கூறுகின்றார்?
6. கண்ணன் கன்னனிடம் எதனை இரந்தார்?
7. கன்னன் எவ்வாறு தன் புண்ணியப் பயனைக் கண்ணனுக்கு ஈந்தான்?
8. கன்னன் கண்ணனைக் கேட்ட வரம் யாது?
9. திருமாலுக்குரிய ஐந்து ஆயுதங்கள் யாவை?
10. செஞ்சோற்றுக் கடன்: விளக்குக.

### கட்டுரை யாக்கம்

1. பாரதப்போர் மூண்ட வரலாற்றைச் சுருக்கி எழுதுக.
2. 'கன்னனின் கொடைத்திறம்' என்பதுபற்றி எட்டு வரிகள் எழுதுக.

3. உங்களுக்குத் தெரிந்த ஏதேனும் ஒரு சிறு வரலாற்றை நாடக உருவில் எழுதிப் பாருங்கள்.

4. கடையேழு வள்ளல்களுள் ஒருவருடைய கொடைச் சிறப்பை எட்டு வரிகளில் எழுதுக.

## மொழிப் பயிற்சி

1. (அ) அஃது + எங்கே = அஃதெங்கே
அஃது + ஒன்றே = அஃதொன்றே
இஃது + இயற்கை = இஃதியற்கை

(ஆ) அது + கண்டான் = அது கண்டான்
அது + செய்தான் = அது செய்தான்
இது + மரம் = இது மரம்.

மேலே காட்டப்பட்டுள்ள உதாரணங்களை நன்கு ஆராய்ந்து பாருங்கள். உயிரை முதலிலே கொண்ட சொற்கள் வந்த பொழுது அஃது, இஃது என்னும் சொற்கள் வந்தன. மெய்யினை முதலிலே கொண்ட சொற்கள் வந்தபொழுது, ஆய்தவெழுத்து இல்லாமல் அது, இது என்னும் சொற்கள் வந்தன. இவ்விதியைப் பின்பற்றுவதே தமிழ்முறை. இவ்விதியை நீங்கள் பின்பற்ற வேண்டும். ‘அஃதெங்கே’ என்பதற்கும், ‘அதெங்கே’, என்பதற்கும் உள்ள வேறுபாட்டினைப் பாருங்கள். ‘அஃதெங்கே’ என்று கூறும்பொழுது இனிய ஓசை அமைந்துள்ளது காண்க.

2. இப்பாடத்திலிருந்து செய்தி, கட்டளை, வினா, உணர்ச்சி ஆகிய நால்வகை வாக்கியங்களுக்கும் இரண்டிரண்டு எடுத்துக் காட்டுகள் பொறுக்கி எழுதுக.

3. என் + இடம் = என்னிடம்
உன் + உடன் = உன்னுடன்
அவன் + உடைய = அவனுடைய
இராமன் + அது = இராமனது

மேலே காட்டப்பட்டுள்ளவற்றைப் பிரித்து எழுதுதல் கூடாது. அவற்றை என்னிடம், உன்னுடன், அவனுடைய, இராமனது என்று சேர்த்தே எழுதவேண்டும். இவ்விதியையும் நீங்கள் பின்பற்ற வேண்டும்.

# செய்யுட் பகுதி

## I. கடவுள் வாழ்த்து

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி. 1

### திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம மர்ந்தபெரு மாளே. 2

—அருணகிரிநாதர்

### நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

### திருமாலை

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமர ரேறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

—தொண்டரடிப்பொடி ஆழ்வார்

### தேவாரம்

பொன்னார் மேனியனே, புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே, மாமணியே, மழபாடியுள் மாணிக்கமே
அன்னே, உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 4

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

*1.* இப்பாடலைக் கம்பர் பாடினார் என்று சிலர் கூறுகின்றனர்; சிலர் இதனை மறுக்கின்றனர். படிகம் - ஒரு வெண்ணிறக்

கல். கடி - மணம், வாசனை. கமழ் - வீசுதல், துடி - உடுக்கு. அல் - இரவு. அனவரதமும் - எப்பொழுதும். கல்லும் கவி சொல்லும் என்பது கருத்து.

**திருப்புகழ்** :—திருப்புகழைப் பாடியருளிய அருணகிரிநாதர் காலம் கி. பி. 15-ஆம் நூற்றாண்டு என்பர். இவர் முருகக்கடவுளின் மீது மாறாத அன்பு வாய்ந்தவர்; திருவண்ணாமலையில் தங்கியிருந் தவர். இவருக்கும் மகாபாரதத்தைப்பாடிய வில்லிபுத்தூராழ் வாருக்கும் வாது நடை பெற்றது என்று சிலர் கூறுகின்றனர்.

2. ஏறுமயில் - ஆண்மயில், ஈசர் - சிவபிரான், குன்று - கிர வுஞ்சம் என்னும் மலை, மாறுபடு - எதிர்த்த, ஆதி - பழமை வாய்ந்த, அமர்ந்த - எழுந்தருளிய.

**நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்** :—திருமாலினிடத்துப் பக்தி வைத்தவர்கள் ஆழ்வார்கள் என அழைக்கப்படுவர். தமிழ்நாட் டில் பன்னிரண்டு ஆழ்வார்கள் இருந்தனர். அவர்கள் பாடிய பாடல்களின் தொகுதிக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என் பது பெயர். பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் தொண்டரடிப் பொடி ஆழ்வார். இவர் சோழநாட்டைச் சேர்ந்தவர்; வைஷ்ணவ அந்தணகுலத்தவர்; ஸ்ரீரங்கத்தில் தொண்டாற்றி வந்தவர். இவர் திருமாலின்மேல் திருமாலை, திருப்பள்ளி யெழுச்சி முதலிய நூல் களைப்பாடி இருக்கின்றார்.

3. மா-பெரிய, மேனி-உடம்பு, கமலம்-தாமரை, அச்சுதன்-அழிவில்லாதவன், அமரர் - தேவர், ஏறு - ஆண்சிங்கம். கடவுளைத் துதிப்பதால் பெறும் இன்பத்தைக் காட்டிலும் வேறு இன்பம் இல்லை என்பது கருத்து.

**தேவாரம்** .—அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பாடல்களின் தொகுப்பிற்குத் தேவாரம் என்று பெயர். தே + ஆரம்; தே+வாரம் என்று இருவிதமாக இச்சொற்றொடரைப் பிரிக்கலாம். தே - கடவுள், ஆரம் - மாலை. கடவுளின்மேல் பாடப் பட்ட பாமாலை. வாரம் - அன்பு, உரிமை. கடவுளிடம் அன்பு கொண்டு அல்லது உரிமைகொண்டு பாடிய பாடல்கள் என்றும் பொருள் கொள்ளலாம். அப்பரும் சம்பந்தரும் ஏழாம் நூற்றாண் டில் வாழ்ந்திருந்தனர். சுந்தரர் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந் தவர்.

4. அரை - இடை, அசைத்து - கட்டி, மின் - ஒளி, மிளிர் - விளங்குகின்ற, மன் - தலைவன். திருமழபாடி என்பது ஒரு திருத்தலம்.

# II. நீதிப்பகுதி

## 1. நல்வழி

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. 1

ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளைக் கேலென்றால் ஏலாய்—ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது. 2

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க்(கு) என்றும்
தருஞ்சிவந்த தாமரையாள் தான். 3

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின்(பு) ஆரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம். 4

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா(து) அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர். 5

வெட்டனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். 6

—ஔவையார்

சங்க காலத்தில் 'ஔவையார்' என்ற பெயர்பெற்ற பெண் பாற் புலவர் ஒருவர் இருந்தார். அவரது பாடல்கள் சங்க நூல் களில் காணப்படுகின்றன. இடைக்காலத்திலும் 'ஔவையார்' என்ற பெயருடன் ஒரு பெண்பாற் புலவர் இருந்தார். அவரைப் பற்றிப் பல வரலாறுகள் வழங்குகின்றன. சமீப காலத்திலும் 'ஔவையார்' என்ற பெயருடன் ஒரு புலவர் வாழ்ந்திருந்த தாகத் தெரிகிறது. பிற்காலத்து ஔவையாரே நல்வழி, வாக் குண்டாம், ஆத்திசூடி, மூதுரை முதலிய நூல்களைச் செய்தவர்.

1. அற்று - இல்லாமல். ஊட்டும் - உண்பிக்கும். ஏற்றவர் - யாசித்தவர். நல்கூர்ந்தார் - ஏழைகள். உலகு என்ற சொல் உல கத்தில் உள்ள மக்களைக் குறிக்கும்.

2. ஏல் - ஏற்றுக்கொள், ஏலாய் - ஏற்றுக்கொள்ளமாட்டாய், நோவு - துன்பம், இடும்பை - தொல்லை, கூர் - மிகுந்த.

3. பொதியும் - மூடிய, மறைத்த, திரு-செல்வம், என்றும் - எக்காலத்திலும், செந்தாமரைப் பூவில் உள்ள தெய்வம் இலக் குமி. நாமகள் வெண்தாமரைப் பூவில் இருப்பவள்,

4. மானிடரே : விளி, கூடு - உடம்பு, ஆவி - உயிர், உடலை விட்டு உயிர் பிரிந்தபிறகு, அந்தப் பணத்தை யார் அனுபவிப்பார் கள்? புதைத்து வைத்த பணம் எவர்க்கும் பயனின்றிப் போய் விடும் என்பது கருத்து.

5. இரந்து - கெஞ்சி, கன்று+ஆ-கற்றா, கன்றினை உடைய பசு, கரவாது - ஒளியாது, உற்றார் - நம்மை நெருங்கிச் சார்ந்தவர்.

6. வேழம் - யானை, கோல் - அம்பு. நெட்டிருப்புப்பாறை - நீண்ட கடப்பாரை, நெக்குவிடா - நெகிழாத. இன்சொல்லால் யாவரையும் வெல்லலாம் என்பது கருத்து.

## 2. நன்னெறி

உள்ளம் கவர்ந்தெழுந்(து) ஓங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. 1

பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண்(டு) உள்ளம்
எரியின் இழுதாவர் என்க—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 2

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று தாங்கும் கடிது. 3

அறிவுடையார் அன்றி அதுபெறார் தம்பால்
செறிபழியை அஞ்சார் சிறிதும்—பிறைநுதால்!
வண்ணஞ்செய் வாள்விழியே அன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோ இருளைக் கண்டு? 4

தக்கார்க்கே ஈவர் தகார்க்களிப்பார் இல்லென்று
மிக்கார்க்(கு) உதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக்(கு) இறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக்(கு) இறைப்பரோ போய்? 5

நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே—நல்லாய்! கேள்
காய்முற்றின் தின்தீங் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னாகிப் போம்? 6

—சிவப்பிரகாச சுவாமிகள்

நன்னெறியை இயற்றிய சிவப்பிரகாச சுவாமிகள் துறைமங்கலத்தில் வாழ்ந்தவர். கருணையர், வேலையர் என்ற இருசகோதரர்கள் இவருக்கு இருந்தனர். இவர் வீர சைவர்; பிரபந்தங்கள், புராணங்கள் முதலியன பாடியுள்ளார். நன்னெறி - நல்லவழியைக் கூறும் நூல். இவர் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்

1. கவர்ந்து - அடக்கி, தடம் - பெரிய, அகன்ற. கரையைப் பேர்த்துவிடுத்தல் எளிது; வெள்ளத்தைத் தடுப்பதுதான் நல்லது; கோபத்தை அடக்குவதே நல்லது என்பது இப்பாடலின் கருத்து.

2. எரி - நெருப்பு, இழுது - நெய், தெரி - ஆராய்தல், இழை - ஆபரணம், தெரியிழாய் - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்த பெண்ணே! மண்டு - மிகுந்த, கலுழும் - அழும்.

3. நேரிழாய் - நேரான ஆபரணங்களை அணிந்த பெண்ணே! தாக்கும் - மோதுகின்ற, வியன் - பெரிய, கடிது - விரைவாக.

4. செறி - தங்கிய, பிறை - சந்திரப்பிறை, நுதல் - நெற்றி, பிறை நுதால் - பிறைபோன்ற நெற்றியை உடைய பெண்ணே!

வண்ணம் - அழகு, வாள் - ஒளி, 'குருட்டுக்கண் இருட்டுக்கு அஞ்சுமோ' என்பது பழமொழி.

5. ஈவர் - கொடுப்பர், மிக்கார்க்கு - (தீயவழியில்) மிகுந்தவ ராகிய துஷ்டர்க்கு, விழுமியோர் - சிறந்தவர்கள், முளி - காய்ந்த.

6. கேண்மை - நட்பு, அல்லார் - நல்லவர் அல்லாதவர்கள், நல்லாய் - பெண்ணே ! தீங்கனி - இனிய பழம்.

## 3. நீதிவெண்பா

மென்மதுர வாக்கால் விரும்பும் சகங்கடின
வன்மொழியி னாலிகழும் மண்ணுலகம்—நன்மொழியை
ஓதுகுயி லேதங்(கு) உதவியது கர்த்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த(து) இன்று. 1

வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான். 2

செய்யும் ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபம் சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல். 3

ஈக்கு விடம்தலையில் எய்தும் ;இருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக் (கு)
அங்கமுழு தும்விடமே யாம். 4

அவ்விய நெஞ்சத்(து) அறிவில்லாத் துர்ச்சனரைச்
செவ்வியர் ஆக்கும் செயலுண்டோ—திவ்வியநல்
கந்தம் பலவும் கலந்தாலும் உள்ளியது
கந்தம் கெடுமோ கரை. 5

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தின் உண்டோ ஒலி. 6

நீதி வெண்பாவினை இயற்றியவர் ஔவையார் என்று சிலர் கூறுவர். இது பிற்காலத்தில் பாடப்பட்ட நூல். 'நீதி வெண்பா' என்னும் பெயரே, இஃது ஒரு நீதி நூல் என்பதை வெளிப்படுத்தும்.

1. மதுரம் - இனிமை, சகம் - உலகம், கர்த்தபம் - கழுதை, அபராதம் - குற்றம்.

2. வருத்த - தீயினால் வாட்டி வளைக்க, வேய் - மூங்கில், வேழம்பர் - கழைக் கூத்தாடுவோர், மேதினி - உலகம்.

3. கருமம் - காரியம், தேர்ந்து - ஆராய்ந்து, புரிதல் - செய்தல், மனத்தாபம் - வருத்தம், நகுலன் - கீரிப்பிள்ளை, பொற்கொடி - பொற்கொடி போன்ற பெண். பார்ப்பனி ஆராயாமல் கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை ஈண்டுக் குறிப்பிடப்படுகிறது.

4. எய்தும் - தங்கியிருக்கும், இருந்தேள் - கரியதேள், பைங்கண் - பசுமையான கண்களை உடைய, துர்ச்சனர் - வஞ்சகர், அங்கம் - உடம்பு.

5. அவ்விய - பொறாமைகொண்ட, செவ்வியர் - நேரானவர், கந்தம் - வாசனைப் பொருள்கள், உள்ளி - உள்ளிப் பூண்டு, கரை - சொல்.

6. சிலு சிலுப்பர் - 'வளவள' என்று பல பேசுவர், ஆன்று - எல்லாக் கல்விகளும் நிறைந்து, அமைந்த - அடக்கம் கொண்ட.

## 4. நான்மணிக்கடிகை

கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும் மான்வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்கும் குடி. 1

கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத்தி னாற்பிணிப்பர் மாநாகம்—கொந்தி
இரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல். 2

இன்னாமை வேண்டின் இரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். 3

மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்கும்
கூடார்கட் கூடி விடின். 4

திருவின் திறலுடைய(து) இல்லை ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையின் இன்னாத(து) இல்லை இலமென்னும்
வன்மையின் வன்பாட்ட(து) இல். 5

மழையின்றி மாநிலத்தார்க்(கு) இல்லை மழையும்
தவமிலார் இல்வழி இல்லை தவமும்
அரசிலார் இல்வழி இல்லை அரசனும்
இல்வாழ்வார் இல்வழி இல். 6

—விளம்பி நாகனார்

நான்மணிக்கடிகை கடைச்சங்க காலத்து நூல். இது, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் பாடிய ஆசிரியரின் இயற்பெயர் நாகனார் என்று கூறப்படுகிறது. அவரது ஊர் 'விளம்பி' என்று சொல்லப்படுகிறது. அவருடைய இயற்பெயருக்கு முன், ஊர்ப் பெயரை அமைத்து மக்கள் அவரை அழைத்தனர்.

1. ஒளி - ஒளி பொருந்திய, அரிதாரம் - ஒருவகை வாசனைப் பொருள், முத்தம் - முத்து, நல்லாள் - நல்ல அறிவினை உடையவர்.

2. கந்து - யானைகட்டும்தறி. பிணிப்பர் - கட்டுவர். களிறு - ஆண் யானை. கதம் - சினம். கொந்தி - இடித்துக்கூறி. இரும்பு - விலங்கு. கயம் - கீழ் மக்கள்.

3. இன்னாமை - பொல்லாப்பு. இரவு - யாசித்தல். மன்னுதல் - நிலை பெறுதல். இசை - புகழ். வேண்டின் - விரும்பினால் வெகுளி - சினம். விடல் - தவிர்க.

4. மொய் - பெருமை. சிதைக்கும் - அழிக்கும். கலம் - பாத்திரம். கூடார் - தீயோர்.

5. திரு - செல்வம். திறல் - வலிமை. வாய்த்த - பயன்படுகின்ற. எற்றுள்ளும் - எதனுள்ளும். இன்மை - வறுமை. இன்னாதது - கொடியது. இலம் என்னும் - யாசகர் கேட்டபொழுது தன்னிடத்தில் ஒன்றும் இல்லை என்கின்ற. வன்பாட்டது - கொடியது.

6. இன்றி - இல்லாமல். இல்வழி - இல்லாதபொழுது. மாநிலத்தார்-பெரிய உலகத்தில் உள்ளவர்கள். இல்வாழ்வார்- குடிகள்.

## 5. திருக்குறள்

### புதல்வரைப் பெறுதல்

மகன் தந்தைக்(கு) ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லென்னும் சொல். 1

### செய்ந்நன்றியறிதல்

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 2

### அடக்கமுடைமை

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 3

### ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 4

### பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 5

### புறங்கூறாமை

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. 6

### பயனில சொல்லாமை

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 7

### புகழ்

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 8

### அருளுடைமை

அருளில்லார்க் (கு) அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. 9

### வாய்மை

வாய்மை எனப்படுவ(து) யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 10

### கொல்லாமை

நல்லா(று) எனப்படுவ(து) யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. 11

### கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 12

—திருவள்ளுவர்

திருவள்ளுவரைப் பற்றிக் கேள்விப்பட்டிராத தமிழர் இரார். திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்த்தெழுதப்பட்டுள்ளது. திருக்குறளின் கருத்துக்கள் எல்லாவற்றையும் உலகத்து மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். திருவள்ளுவர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவர்.

திருவள்ளுவரால் தமிழ்மொழி பெற்ற பெருமைக்கு அளவில்லை. திருக்குறளில் இல்லாத கருத்துக்களே இல்லை எனலாம். மாணவர்கள் நாள்தோறும் ஒவ்வோர் குறளையேனும் மனப்பாடம் செய்யவேண்டும். திருக்குறளுக்குப் பதின்மர் உரை எழுதியுள்ளனர். அவற்றுள் சிறந்தது பரிமேலழகர் எழுதிய உரையாகும். குறள் - குறுகிய உருவமுள்ள பாடல்.

1. புதல்வர் என்ற சொல் ஈண்டு மக்களைக் குறித்தது. ஆற்றும் - செய்கின்ற. என்னோற்றான் கொல் - என்ன தவத்தைச் செய்தானோ? 'ஒரு மகன் தனது தந்தைக்குச் செய்யும் உதவி, இவனது தந்தை இம்மகனைப் பெற என்ன தவத்தைச் செய்தானோ என்று உலகம் புகழும்படியான சொல்லை உண்டாக்குதலாம்' என்பது இக்குறளின் கருத்து.

2. காலத்தினால் - ஏற்ற காலத்தில். ஞாலத்தின் - உலகத்தைக் காட்டிலும். மாண - மிகவும்.

3. அமரர் - தேவர். உய்க்கும்-செலுத்தும். ஆர் - தங்குதற்கு அரிய. இருள் - நரகம்.

4. விழுப்பம் - உயர்வு. தரலான் - தருவதால். உயிரினும் - உயிரைக்காட்டிலும். ஓம்பப்படும் - பாதுகாக்கப்படும்.

5. பொறை - பொறுமை. அகழ்வார் - தோண்டுகின்றவர்கள். தாங்கும் - வீழாமல் தாங்குகின்ற. இகழ்வார் - அவமதிப்பவர். தலை - சிறந்த அறம்.

6. புறங் கூறாமை - ஒருவரைக் காணாதபொழுது, அவரை இகழ்ந்து கூறாமை. கூறான் - சொல்லாதவனாய். அல்ல - பாவங்கள். என்றல் - என்று உலகோரால் சொல்லப்படுதல்.

7. பயனில - பயனற்ற சொற்கள். முனிய - வெறுக்க. எல்லாரும் - எல்லோராலும். எள்ளப்படும் - இகழப்படுவான்.

8. தோன்றின் - மக்களாய்ப் பிறந்தால். தோன்றலின் - மக்களாய்ப் பிறப்பதைக் காட்டிலும். தோன்றாமை - விலங்காய்ப் பிறத்தல் என்பது கருத்து.

9. அருள்: தொடர்பில்லாத எல்லா உயிர்களிடத்தும் செலுத்தும் கருணை. அருள் இல்லார்க்கு - உயிர்களிடத்து அருள் இல்லாதவர்க்கு. அவ்வுலகம் - மோட்ச இன்பம். இவ்வுலகம் - இவ்வுலக இன்பம். இல்லாகியாங்கு - இல்லையாயினாற் போல.

10. வாய்மை -உண்மை. எனப்படுவது - என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது. யாதொன்றும் - சிறிதும். தீமை இலாத - தீமையைப் பயவாத சொற்கள்.

11. நல்லாறு - நல்லவழி; மோட்சத்தை அடைவதற்கு உரிய நல்லவழி. யாதொன்றும் - எவ்வுயிரையும். சூழும் - கருதும். நெறி-வழி.

12. கசடு - குற்றம். அற - நீங்க. கற்பவை - கற்க வேண்டிய நூல்களை. நிற்க - நடக்கவும். அதற்குத்தக - கற்ற கல்விக்கு ஏற்ப.

## 6. திருவேங்கட சதகம்

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல்வேண்டா
பின்னென்று முன்னென்று பேசியே அவமானப்
பேர்கொண்டு திரிதல்வேண்டா
உற்றவர்கள் போலவுட் பகையான வஞ்சகரை
ஒருநாளும் நம்பல்வேண்டா
ஒருவருக் கிச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்சபையில்
ஊமைபோல் நிற்றல்வேண்டா
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டையில்
தான்போய் விலக்கல்வேண்டா
தைரியந் தனில்விக்ர மாதித்த னென்னினும்
தன்னையே புகழல்வேண்டா
மற்றொன்றும் எண்ணாது செய்யல்வேண் டாவென்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே!
வரதவேங் கடராயனே. 1

மெய்யான புத்திபல சொல்லினுந் தன்புத்தி
மேலாகி னேன்மூர்க்கனும்
மிக்கபெரி யோர்களைத் தாழ்வுசெய் தற்பர்தமை
மேன்மைசெய் வோன்மூடனும்
செய்யாத காரியம தெனினும்பி டித்தபிடி
செய்யுமவ னேதுட்டனும்
திரளான நன்றிபல செய்தவர்க் கேயிடர்கள்
செய்பவன் மாபாதகன்

ஐயா வெனப்பணிந் தாலுமே கோபம
தடங்காத வன்குரூரன்
அனுதினந் தீமைபுரி வோனெந்த நாளிலும்
அடங்காத சண்டாளனும்
மையார் தடஞ்சோலை திகழ்கின்ற களமூரில்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே!
வரதவேங் கடராயனே! 2

—வெண்மணி நாராயண பாரதியார்

சதகம் என்பது நூறு பாடல்களைக்கொண்ட ஒருவகை நீதி நூல். சதகங்கள் பிற்காலத்தில் தோன்றின. புராணக் கதைகள், நிகழ்ச்சிகள் முதலியவற்றை உவமைகாட்டிப் பல நீதிகளை எடுத்துரைப்பது சதகங்களின் நோக்கமாகும்.

1. முனிதல் - வெறுத்தல், கோபித்தல். உற்றவர் - நம்மைச் சேர்ந்தவர். இச்சை - விருப்பம். எண்ணாது - நினையாமல். உறை - தங்குகின்ற. அலர் - தாமரை. மணவாளன் - கணவன்.

2. செய்யாத காரியம் - செய்யத்தகாத காரியம். இடர் - துன்பம். குரூரன் - கொடியவன். அனுதினம் - நாள்தோறும். மை - மேகம். ஆர் - தங்கிய. திகழ்கின்ற - விளங்குகின்ற.

# III. வரலாற்றுப் பகுதி

## 1. தேசிங்குராஜன் கதை

### தேசிங்குராஜன் குதிரை ஏறிச் சவாரிபோதல்

கனைத்துக் கதும்பி வெளியிலே வந்தான் காளை சிங்கம்போல்
குதிரை யிருக்குங் கொட்டடி தேடிக் குதித்து ஓடிவந்தான்
ஓடி வருகிற ராசரைக் கண்டு உதும்பி யெழுந்ததுபார்
அண்ட மிடிந்து விழுந்தாற் போல அலறிக் கனைத்ததுபார்
கோட்டை யிடிந்து விழுந்தாற் போலக் குலுங்கக் கனைத்ததுபார்
நாற்றிசை யுள்ளவர் கலங்கி யங்கே நடுக்கங் கொண்டார்கள்
ஐம்பத் தாறு தேசரா சர்கள் அலறி விழுந்தார்கள்
குழந்தை குழந்தை யென்று சொல்லிக் கூவி யழுதார்கள்
டில்லிப துரையுந் தேரணி ராசனுந் திகைத்து விழுந்தார்கள்
விழுந்தவுடனே குழந்தை யென்று தேடியே வாரார்கள்
கனைத்த குதிரையைக் கண்ணாலேகண்டு கடுக வோடிவந்தான்
குதிரையைத் தட்டிச் சலாம் வாங்கினான் கொல்லுஞ் சிங்கம்போல்

அண்ணு வாடா தம்பி வாடா மோவுத்துக் காராநீ
கால்க யிற்றைக் கழுத்துக் கயிற்றைக் கடுக அவிழுமென்ருன்
அந்தச் சொல்லைக் காதிலே கேட்டான் மோவுத்துக் காரனும்
சொன்ன வுடனே சல்தியாய்ப் பாய்ந்து சுருக்காய் எழுந்தானும்
தங்கத் தாலே சீனி போட்டுத் தடவிக் கொடுத்தானும்
அந்தக் குதிரையைக் கண்ணுலே கண்டு அகமுங் குழைந்தானும்
அரிபரந் தாமா முகுந்தா என்றே அலறி யெழுந்தானும்
கோவிந் தாஸ்ரீ கிருஷ்ண வென்று கும்பிட் டெழுந்தானும்
பாரா சாரியைச் சலாம் வாங்கிப் பாய்ந்து ஏறினனும்
புலிக்குட்டி போலப் பாய்ந்தே அவனும் புரவி யேறினனும்
ஏறின வுடனே பாரா சாரியும் என்ன செய்ததுபார்



தடதட தடவென்று தவிக்குது பார்குதிரை
கிடகிட கிடவென்று கிளம்பிக் குதித்ததுபார்
லகானை யிழுத்துக் கையிலே பிடித்தான் ராஜா தேசிங்கு
ஐயா கேளும் ஐயா கேளும் என்னைப் பெற்றவரே
புரவி யேறிச் சவாரி போகிறேன் பெற்றவ ரேஐயா
தப்பித் தவறி வந்தே ஞைல் தழுவிக் கொள்ளுமையா
இன்றைக்குஞ் சாவு நாளைக்குஞ் சாவு இருக்குது தலைமேலே
ஒன்றுக் கும்நீர் அஞ்ச வேண்டாம் உறுதி கொள்ளுவீரே.

தேசிங்கு ராஜன் கதையைப் பாடியவர் புகழேந்திப் புலவர் என்று சிலர் கூறுகின்றனர். அஃது உண்மையன்று என்று தோன்றுகிறது. இந்நூல் மிக எளிய நடையில், கொச்சைச் சொற்கள் பல கலந்து அமைந்துள்ளது. சமீப காலத்தில் பாடப்பட்ட நூல் போல் இது காணப்படுகின்றது. நம் தமிழ் நாட்டில் உள்ள கிராம மக்கள் இத்தகைய நூல்களைப் பெரிதும் விரும்பிப் படிக்கின்றனர். இந்நூலின் ஓசைநயம் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் பேரின்பம் பயக்கும். பாடலைப் படித்து இன்பம் அடையுங்கள்.

கதும்பி—கோபித்து. காளையும் சிங்கமும் போன்றவன் தேசிங்கு. உதும்பி—எழும்பி. அண்டம்—ஆகாயம். கடுக—விரைவாக. சல்தி—விரைவு. அரி, பரந்தாமன், முகுந்தன் என்பன திருமாலின் வேறுபெயர்கள். பாராசாரி என்பது குதிரையின் பெயர். புரவி—குதிரை.

## 2. பஞ்ச தந்திரம்

### (அ) காகம் நாகத்தைக் கொன்ற கதை

கோடுறு சினையிற் காகம் கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும் பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன் (று) அங் (கு) அதுபெறு முட்டை யெல்
[லாம்
நாடியே குடித்துப் போட நலிந்துள மெலிந்து வாடி. 1

தன்னுயிர்ப் பாங்க னை சம்புகன் அருகு போயிங்(கு)
என்னசெய் குவனுன்என்ன இதைக்கொலல் அரிதோ நீபோய்
மன்னவன் தேவி ஆடும் மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து போடுக பொந்தில் என்ன. 2

காகமப் படியே செய்யக் காவலன் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை ஈர்ந்தனர் ஈரும் போதில்
நாகமங் கிருந்து சிற நறுக்கினர் இருதுண் டாக
ஆகையால் உபாயத் தாகா திலையென அறையும் பின்னும். 3

### (ஆ) முயல் சிங்கத்தைக் கொன்ற கதை

குறுமுயல் சிங்கந் தன்னைக் கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர் சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை யாடியூன் மிகவுந் தின்று
வெறிகொடு திரியும் நாளில் விலங்கெலாம் ஒருங்கு கூடி. 4

ஆணிளஞ் சிங்க மேயுன் அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம் விதத்தினில் தினமொன் ருக
ஊனுனக் களிப்போம் என்ன உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்ருய் அருந்தியங் கிருக்கும் நாளில். 5

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள் தன்முறை வருத லோடும்
இனியது விடாது நம்மை யெனினுமோர் எடுப்பெ டுத்து
வினையையிப் போது செய்து வென்றுநாம் உய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யு நமக்குநற் புகழுண் டென்றே. 6

கருதியச் சிங்கத் தின்தன் கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி மன்னனம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும் பிந்துவ தில்லை பிந்தி
வருவதென் னுரைநீ யென்று மனந்தனிற் சினந்து கூற. 7

ஐயநின் பசித்த வேளைக்(கு) அடியனேன் வந்தே னுங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு வெருவியங் கொளித்தி ருந்தேன்
பையவே சிங்க மாங்கோர் பருமுழை புகுந்த பின்னர்
துய்யநின் பக்கல் வந்தேன் சுவாமியென் றிறைஞ்சி நிற்க. 8

சிங்கநாம் அல்லால் வேருேர் சிங்கநீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டு வாவென் றழைத்தலு மழைத்துப் [போயோர்
பங்கமும் புனலுஞ் சேர்ந்த பாழ்ந்துர வதனைக் காட்ட
அங்கதை எட்டிப் பார்த்த ததனிழல் உருவந் தோன்ற. 9

தன்னுரு நிழலைத் தானே சத்துரு வென்று பாய்ந்து
துன்னுபங் கத்த ழுந்தித் துளங்கியே உயிரி ழந்த
தென்னலால் உபாயத் தாலே யாவையும் வெல்ல லாமென்(று)
இன்னமோர் நண்டு கொக்கை ஈர்ந்ததோர் கதையும் சொல்லும். 10

—(வீரமார்த்தாண்ட தேவர்)

பஞ்ச தந்திரக் கதைகளைப் பாடிய வீரமார்த்தாண்ட தேவர் சமீப காலத்தில் வாழ்ந்தவர். இந்நூலில் நீதிக் கதைகள் பல உள்ளன. விலங்குகள் பேசிக் கொள்வன போலக் கதைகளை அமைத்து, அவற்றின் வாயிலாக மக்களுக்கு நீதிகளைக் கூறுவதே இந்நூலின் நோக்கமாகும்.

1. கோடு - கொம்பு, சினை - கிளை, பேடு - பெண் காகம், நாடி - தேடி, நலிந்து - வருந்தி.

2. பாங்கன் - துணைவன், சம்புகன் - நரி, ஆடும் - குளிக்கும், மஞ்சனச்சாலை - குளிக்கும் இடம், அணி - ஆபரணம்.

3. காவலன் - அரசன். ஏவலாளர் - வேலேக்காரர். ஏகி - சென்று. ஈர்ந்தனர் - வெட்டினர். உபாயம் - தந்திரம். அறையும் - சொல்லும்.

4. செறியும் - நெருங்கிய. உறு - தங்கிய. ஊன் - மாமிசம்.

5. அடவி - காடு. ஊண் - உணவு. ஆணே - கட்டளே. அருந்தி - தின்று.

6. எடுப்பெடுத்து - முயற்சி செய்து. உய்ந்தோமாகில் - பிழைத்தோமானல். நனி - நன்ருக. உய்யும் - பிழைக்கும்.

7. வேழமேனும் - யானேயானுலும். பிந்துவதில்லே - காலந் தாழ்த்தி வருவதில்லே.

8. வெய்ய - கொடிய. வெருவி - நடுங்கி. பைய - மெதுவாக. பரு - பெரிய. முழை - குகை. துய்ய - உயர்ந்த. இறைஞ்சி - வணங்கி.

9. பங்கம் - சேறு. புனல் - நீர். பாழ்ந்துரவு - பாழுங் கிணறு.

10. சத்துரு - பகைவன். துன்னு - தங்கிய. துளங்கி - நடுங்கி. ஈர்ந்தது - பிளந்தது.

## 3. அல்லியரசி மாலே

(ஒருகாலத்தில், மதுரையில் உள்ள வையையாற்றில் பெரு வெள்ளம் வந்தது. நகர்க்குடிகள் யாவரும் ஒவ்வோர் குறிப்பிட்ட பங்கினே அடைத்து, மதுரையில் வெள்ளம் பரவாமல் தடுக்க வேண்டும் என்று பாண்டியன் ஆணேயிட்டான். அந் நகரத்தில் வாழ்ந்திருந்த வந்தி என்னும் முதுமகள் துணேயற்றவளாக இருந்தாள். அவளுக்கு அருள்செய்யக் கருதிய சிவபிரான், கூலியாள் உருவில் வந்து, அவளிடம் பிட்டு வாங்கிக்கொண்டு, வையைக் கரையை அடைந்து, வெள்ளத்தைத் தடுப்பதற்குப் பதிலாக, கரையை உடைத்துவிட்டுப் பல திருவிளேயாடல்கள் செய்தார். அதனே யுணர்ந்த பாண்டியன், கூலியாளாக வந்த சிவபிரானது முதுகில் தன் பிரம்பினுல் அடித்தான். அவ்வடி எல்லோர் முதுகிலும் பட்டது. கூலியாளாக வந்த சிவபிரானும் மறைந்தார். தாம் பிரம்படி பட்ட வரலாற்றை மீனுட்சி அம்மையாரிடம் தெரிவிப்பதாக இப் பகுதி அமைந்துள்ளது.)

அப்போது மீனுட்சி அண்டையிலே ஓடிவந்து
ஏதுதான் சுவாமி இப்படிக்கு வந்ததென்று
அலேயக் குலேயவந்த அக்குறையைச் சொல்லுமென்றுள்
கேளாயென் நாயகியே கிளிமொழியே மீனுட்சி
வாணிச்சி தனக்காக மண்சுமக்கப் போயிருந்தேன்

பிட்டுக்கு மண்சுமக்கப் பிரம்படி பட்டுவந்தேன்
அடித்தான் பிரம்பாலென் அங்கம் தழும்பேற,
கொடுத்தான் முதுகினிலே கொடும்பாவி பாண்டியனும்
சகாயம்செய் யப்போனேன் அபாயம் வந்ததடி
அபாயமே செய்தவனை ஆதரிக்கப் போவதில்லை.
என்றுரைக் கச்சொக்கர் எடுத்துரைப்பாள் மீனாட்சி
அறியாமற் செய்தபிழை பெரியார் மனம்பொறுப்பார்
மாறுரு பங்கொண்டு மண்சுமக்கப் போனதனால்
ஆளடிமை என்று அடித்தான் பிரம்பாலே
ஐயரென்று தானறிந்தால் அடிபணிந்து தொழுதிடுவான்
தெரியா தவன்செய்தால் சித்தத்தில் வையாமல்
ஆதரிக்க வேண்டுமென்றாள் அங்கயற்கண் மீனாட்சி
அவள்வச னங்கேட்டு அழகுசொக்கர் ஏதுசொல்வார்
என்னை அடித்தஅடி எல்லார்க்கும் பட்டதுகாண்
உலகத்துக் கெல்லாம் உறைத்ததே பிரம்படிதான்
சித்தர்கள் முனிவர்கள் தேவருக்கும் பட்டதுவே
வானவ ரொடுரிஷிகள் மாயவற்கும் பட்டதுவே
சப்த ரிஷிகளுடன் தபோதனர்க்கும் பட்டதுவே

* * * *

என்றே இவருரைக்க ஏந்திழையும் பேசாமல்
மவுனமாய்த் தானிருந்தாள் மதுரைமீ னாட்சியரும்.

---

தேசிங்கு ராசன் கதையைப் பாடிய ஆசிரியரே இதனையும் பாடியுள்ளார்.

மீன்போன்ற கண்களை உடைய காரணத்தால் 'மீனாட்சி' என்னும் பெயர் அமைந்தது. குலைய - நடுங்க. நாயகி - மனைவி. அங்கம் - உடம்பு. சகாயம் - உதவி. சொக்கர் - சோமசுந்தரக் கடவுள். பிழை - தவறு. மாறுருபம் - மாறுவேடம். ஐயர் - தலைவர், கடவுள். சித்தம் - மனம். அம் - அழகிய. கயல் - மீன். கயற்கண் - மீன்போன்ற கண். வசனம் - சொல். வானவர் - தேவர். மாயவன் - திருமால். சப்த ரிஷிகள் - ஏழு ரிஷிகள். தபோதனர் - தவம்செய்யும் முனிவர். ஏந்திழை - ஆபரணங்களை அணிந்த பெண். மவுனம் - வாய்திறவாது.

# IV. வருணனைப் பகுதி

## 1. மழையின்மை

மழையுங் கிடையாது மன்னனது சீமையிலே
தூறல் கிடையாது சோழனது சீமையிலே
பயிரும் கிடையாது பறவைகள் நாடாது
குடிக்கஜலம் கிட்டாது குருவிகள் நாடாது
தீய்ந்தன பயிர்களெல்லாஞ் தேசங்கள் அத்தனையும்
காய்ந்தன மரங்களெல்லாங் கனியுங் கிடையாது
ஏரி குளங்களிலே இறைக்கஜலங் கிட்டாது
பூமி தனிற்புல்லு பூண்டுங் கிடையாது
எல்லாரும் பரதேசி ஏழைகளாய்ப் போனார்கள்.

## 2. மழை பெய்து நீர் நிரம்பல்

சோழனது சீமையிலே சொலிக்கிறதே மின்னல்கள்
கடலிரைச்சல் போலே கமறிற்றே மேகங்கள்
குமுறிற்று மேகமெல்லாங் குடங்கொண்டு வார்த்தாற்போல்
இரைகிறதே மேகங்கள் ஏகவெள்ளம் பெருகிடவே
சோனை மழைபோலே சொரிகிறதே மேகமெல்லாம்
நல்லமழை பெய்வதனால் நாடுஞ் செழித்தனவே
பூமி குளிர்ந்தனவே பொய்கை நிரம்பினவே
ஏரிகள் நிரம்பி எதிர்க்கிறதே மேகவெள்ளம்
மடுவுகள் நிரம்பி வழிகிறதே வெள்ளமெங்கும்
ஆறுகள் நிரம்புவதால் அடைபடும் வெகுசனங்கள்
கழனிகள் நிரம்பிக் கால்வாய்கள் தாம்நிரம்பி
ஊற்றுகள் தாம்சுரந்து ஓடிற்றே சலம்விசையாய்
தடாகங்கள் தாம்நிரம்பித் தாமரைகள் பூத்தனவே
வயல்கள் நிரம்பி வாய்க்காலுந் தானோடி
உலர்ந்த மரங்களெல்லாம் உயிருண்டாய்த் தளிர்த்தனவே
அடியற்ற மரங்களெல்லாம் அன்பாய்த் தளிர்த்தனவே
இலையுந் தளிர்களெல்லாம் ஏகமாய்த் தளிர்த்தனவே
செந்நெல் விளைந்தனவே தேசம் செழித்தனவே
பயிர்கள் விளைந்தனவே பலனைக் கொடுத்தனவே.

—அல்லியரசி மாலை

நாடாது - தேடாது. தீய்ந்தன - கருகின. கனி - பழம். பரதேசி - வேறு தேசத்தவர். சொலிக்கிறது - ஒளி வீசுகிறது. கமறிற்றே - முழங்கியது. சோனைமழை - விடாமழை. சொரிகிறது - பெய்கிறது. பொய்கை - குளம். மடுவுகள் - ஆழமான நீர் நிலைகள். **கழனி - வயல்.** தடாகம் - குளம். அடி - வேர்.

## 3. கடல்

கற்களும் பாறைகளும் அடர்ந்த கடற்கரையில், கடல் கொந்தளிப்பாயிருந்த தருணத்தில், மணலிலே விளையாடிக் கொண்டிருந்த குழந்தை கடலை நோக்கிக் கூறியது.

எல்லை அறியாப் பெருங்கடலே—நீதான்
இரவும் உறங்காயோ கடலே
அல்லும் பகலும் அலைகடலே—உனக்கு
அலுப்பும் இலையோ கருங்கடலே 1

உருண்டு திரண்டு வருங்கடலே—உடைந்(து)
ஓடிப் போவதேன் கடலே
வெருண்டு மதிகெட் டாய்கடலே—பாறை
விலகிப் போகுமோ கடலே! 2

பொங்கு திரைகளோ கடலே—அவை
புரவி நிரைதாமோ கடலே
எங்கும் உன தொலியே கடலே—அன்றி
இடியின் முழக்கமோ கடலே! 3

ஓடம் எடுத்தெறியும் கடலே—தயை
உனக்குச் சற்றிலையோ கடலே
ஆடல் வீடிதனைக் கடலே—நீயும்
அழிப்ப தழகாமோ கடலே! 4

மலையை வயிற்றடக்கும் கடலே—எண்ணில்
மகர மீனுலவும் கடலே
விலைகொள் முத்தளிக்கும் கடலே—சிப்பி
விளையா டற்குதவும் கடலே! 5

மழைக்கு மூலமும் நீ கடலே—அதை
வாங்கி வைப்பதும் நீகடலே
வழுத்து மகிமையெலாம் கடலே—எவர்
மதித்து முடிக்கவலார் கடலே! 6

சி. தேசிகவிநாயகம் பிள்ளை

திருவாளர் தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் தற்காலத்து மறுமலர்ச்சிப் புலவர். அவர் நாகர்கோவில் என்ற ஊரில் வாழ்

பவர். அழகிய இனிய எளிய பாடல்கள் பலவற்றைப் பாடியிருக்கிருர். உறங்காயோ - தூங்கமாட்டாயோ. அல் - இரவு. மதி - அறிவு. திரை - அலை. புரவி - குதிரை. நிரை - வரிசை. ஓடம் - படகு. ஆடல் - விளையாட்டு. மகரம் - ஒருவகை மீன். மூலம் - ஆதிகாரணம். வழுத்தும் - துதிக்கும்.

## V. நாட்டுப்பற்று

### செந்தமிழ் நாடு

1. செந்தமிழ் நாடெனும் போதினி லே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே—எங்கள் (செந்)

2. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி—என
மேவிய யாறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு. (செந்)

3. நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தந் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு. (செந்)

4. கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு. (செந்)

5. வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் ருேர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு. (செந்)

6. சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு. (செந்)

7. விண்ணை யிடிக்கும் தலையிமயம்—எனும்
வெற்பை யிடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத் தார்தமிழ்ப்
பார்த்திபர் நின்ற தமிழ்நாடு. (செந்)

8. சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு. (செந்)

—சுப்பிரமணிய பாரதியார்

தேசியக்கவி பாரதியார் இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். பாரதியாரைப்பற்றி அறியாத தமிழர் இரார். அவரது பாடல்கள் படிப்போர்க்குத் தேசிய உணர்ச்சியை அளிக்கும்; தூங்குபவரைத் தட்டி எழுப்பும். அவரது பாடல்களை நாம் நாள்தோறும் கேட்டு இன்பமுறுகின்றோம்.

2. பொருனை - தாமிரபரணி. மேவிய - தங்கிய.

3. குமரி - கன்னியாகுமரி. மால் - திருமால். குன்று - மலை. மாலவன் குன்றம் - திருவேங்கடமலை.

5. வான் - மிகுந்த. அள்ளும் - கவரும். மணியாரம் - மணிமாலை.

6. சிங்களம் - இலங்கை. புலிக்கொடி சேரர்க்குரியது. மீன் கொடி பாண்டியர்க்குரியது. சால்பு - மேன்மை.

7. வெற்பு - மலை. திறன் - வலிமை, தன்மை. சமர்-போர். பார்த்திபர் - அரசர்.

## VI. தனிப் பாடல்கள்

வாலெங்கே நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு
காலெங்கே யுட்குழிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள் நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால். 1

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி. 2

—காளமேகப் புலவர்

நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டில் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய். 3

வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்கம் உரைக்கக்கேள்—அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியி னாலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன். 4

—ஔவையார்

பெற்றாள் ஒருபிள்ளை என்மனை யாட்டியப் பிள்ளைக்குப்பால்
பற்றாது கஞ்சி குடிக்குந் தரமல்ல பாலிரக்கச்
சிற்றாளு மில்லையிவ் வெல்லா வருத்தமுந் தீரவொரு
கற்றா தரவல்லை யோவல்ல மாநகர்க் காளத்தியே. 5

—படிக்காசுத் தம்பிரான்

கல்லாத ஒருவனைநான் கற்றா யென்றேன்
காடெறியு மவனைநா டாள்வா யென்றேன்
பொல்லாத ஒருவனைநா னல்லா யென்றேன்
போர் முகத்தைஅறியானைப் புலியேறென்றேன்
மல்லாரும் புயனென்றேன் சூம்பற் றோளை
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்.
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான்
யானுமென் றன் குற்றத்தால் ஏகின்றேனே. 6

—இராமச்சந்திரக் கவிராயர்

---

1. சால - மிகவும், புவி - பூமி. ராயர் - அரசர், போற்றும் - புகழும், கவிராயர் - கவியாசர்.

2. விகடராமன் ஓர் அரசாங்க அதிகாரி. காதம்: பத்துமைல்.

3. அறிமின் - தெரிந்து கொள்ளுங்கள், ஈசன் - கடவுள், கழல் - திருவடி, வெவ்வினை - தீவினை, 'நால்' என்பது நாலடியாரையும், 'இரண்டு' எனபது திருக்குறளையும் குறிக்கும்.

4. தேர்ந்த - ஆராய்ந்த, வழுதி - பாண்டியன், அண்டி - நெருங்கி, சுருக்குண்டேன் - வருந்தினேன்.

5. மனையாட்டி - மனைவி, பற்றாது - போதாது, சிற்றாள் - வேலையாள், கன்று + ஆ = கற்றா = கன்றினையுடைய பசு.

6. எறிதல் - அழித்தல், வெட்டுதல். புலியேறு - ஆண்புலி, மல் = மற்போர் புரியும் தன்மை. ஆரும் - தங்கிய, சூம்பல் தோள் - இளைத்த தோள், வழங்காத - கொடையளியாத.

# அகராதி

அகம் - வீடு; இடம்.
அகலா - நீங்கா
அச்சுறுத்தி - பயமுறுத்தி
அஞ்சா - பயப்படா
அடிப்படுத்திய - கீழ்ப்படுத்திய
அண்டி - நெருங்கி; சேர்ந்து
அணி - ஆபரணம்; அழகு
அத்தாணி மண்டபம் - அரசனது சபை
அம்பலம் - ஊர்ப் பொது இடம்
அமர்தல் - இருத்தல்
அமர்ந்து - இருந்து
அமரர் - தேவர்
அமைச்சர் - மந்திரி
அரியணை - சிம்மாசனம்
அரிவாள் - கதிர் அறுக்க உதவும் ஒரு வளைந்த கருவி
அவச்சொல் - பழிச் சொல்
அவா - ஆசை
அவை - சபை
அளாவிய - நட்போடு பேசிய
அளித்து - கொடுத்து
அற்ற - இல்லாத
அற்று - இல்லாமல்
அறவுரை - உயிருக்கு உறுதி தரும் சொற்கள்
ஆக்கம் - செல்வம்
ஆதி - முதல்
ஆர்த்தனர் - பேரொலி செய்தனர்
ஆர்வம் - ஆசை
ஆவி - உயிர்
ஆற்றல் - வலிமை
இடையூறு - துன்பம்
இத்துணையது - இவ்வளவு
இயம்பினன் - சொன்னன்
இயலாத - முடியாத
இரங்கி - இரக்கப்பட்டு
இரப்பவர் - யாசிப்பவர்
இருக்கை - இருப்பிடம்
இல்லம் - வீடு
இளவல் - தம்பி
இறுதி - முடிவு
இறை - கடவுள்; அரசன்
இன்றி - இல்லாமல்
இன்றியமையாது - இல்லாமல் முடியாது
இன்னது - தீயது
ஈண்டு - இவ்விடம்
ஈந்தான் - கொடுத்தான்
உணர்தல் - அறிதல்
உரம் - எரு
உரைத்தல் - சொல்லுதல்
உவகை - மகிழ்ச்சி
உவந்து - மகிழ்ந்து
உற்ற - தகுந்த
உறுது - அடையாமல்
எஞ்சிய - மிச்சமான
எத்துணை - எவ்வளவு
எழுமை - ஏழு பிறப்பு
ஏந்தல் - ஆடவரில் சிறந்தவன்
ஏளனம் - இகழ்ச்சி
ஒப்பு - சமானம்
ஓவியர் - சித்திரக்காரர்
கடப்பாடு - கடமை
கடிஞை - பாத்திரம்
கடுக - விரைவாக
கண்கூடு - நேரில் பார்த்தல்
கதிர் - ஒளி
கவின் - அழகு
குலைந்தன - நடுங்கின
குழு - கூட்டம்
குன்றி - குறைந்து
கூற்றுவன் - இயமன்
கேள்வி - கேட்கும் அறிவு
கைம்மாறு - பதில் உதவி
கோ - அரசன்
கோமகன் - அரசகுமாரன்
சந்தி - சந்துகள் கூடும் இடம்
சான்று - சாட்சி
சினம் - கோபம்
சீற்றம் - கோபம்

8760

செப்பு - சொல்வாயாக
செய் - நிலம்
செருக்கு - கர்வம்
சோர்வு - தளர்வு
தலைசிறந்தவர் - மிகச்சிறந்தவர்
தனயன் - பிள்ளை
தாளாண்மை - முயற்சி
திகழ்கின்றது - விளங்குகின்றது.
திண்ணம் - நிச்சயம்
தியாகி - தியாகம் செய்தவர்
திளைத்த - அனுபவித்த
தீட்டிய - எழுதிய
துணுக்குற்றான் - நடுங்கினான்
தூய்மை - சுத்தம்
தொடர்பு - சம்பந்தம்
தொல்லை - துன்பம்
நன்னெறி - நல்ல வழி
நனவு - நேரில் காணுதல்
நாணம் - வெட்கம்
நாளடைவில் - சில நாட்களில்
நிர்ணயித்தல்-நிச்சயப்படுத்தல்
நிலவியது - தங்கியது
நிலவும் - தங்கும்
நினைவு - கருத்து : ஞாபகம்
நீர் நிலை - தண்ணீர் நிற்குமிடம்
நீராட்டி - குளிப்பாட்டி
நீராடுதல் - நீரில் முழுகுதல்
நெறி - வழி
நோக்குங்கள் - பாருங்கள்
நோயுறும் - வியாதியை அடையும்
பண்டமாற்று - பொருள்களை மாற்றிக் கொள்ளுதல்
பண்பு - குணம்
பராமரிப்பு - பாதுகாப்பு
பார் - பூமி
பாவித்தல் - நினைத்துக் கொள்ளுதல்
பிணக்கு - மாறுபாடு
பிணி - நோய்
பிழை - தவறு
பீடித்தது - வருத்தியது
புத்துயிர் - புதிய உயிர்
புரிதல் - செய்தல்
புலமை - அறிவு
புவி - பூமி
புறம் - பக்கம்
புறம்பு - வெளிப்புறம்
புறம்போக்கு நிலம் - ஊர்க்குப் பொது நிலம்
பூரித்தது - மகிழ்ந்தது
பேரரசர் - பெரிய அரசர்
பேறு - பாக்கியம் ; செல்வம்
பொருதல் - போர் செய்தல்
பொறித்து - நாட்டி
போற்றி - புகழ்ந்து
போற்றுதல் - புகழ்தல்
மகவு - குழந்தை
மடமை - அறியாமை
மடிந்து - இறந்து
மணவணி - திருமணக்கோலம்
மருத்துவன் - வைத்தியன்
மறையவன் - அந்தணன்
மன்றம் - ஊர்ப்பொது சபை
மீண்டனர் - திரும்பினர்
முதிய - வயது சென்ற
முன்னோன் - அண்ணன்
மேனாடு - மேற்கு நாடுகள்
யாங்கணும் - எவ்விடத்திலும்
வண்மை - கொடை
வருவாய் - வரும்படி
வறுமை - தரித்திரம்
வாய்ப்பு - சந்தர்ப்பம்
வாய்மை - உண்மை
வாளா - சும்மா
வான் - ஆகாயம்
விடுதி - தங்குமிடம்
விடையிறுத்தார் - பதில் கூறினார்
விண் - ஆகாயம்
வெகுண்டார் - கோபித்தார்
வென்று - வெற்றியடைந்து
வேட்கை - விருப்பம்

RTR
1136

NEW METHOD

# NAMAGAL VACHAKAM

Book I for Form I

By

**Vidwan K. C. VANMEEKANATHAN, B.O.L., L.T.,**
*Assistant Lecturer, Teacher's College, Saidapet*
*and*
**Vidwan E. M. ARUMUGA CHETTIAR,**
*Senior Tamil Pandit,*
*Sir P. T. Chettiar's High School, Madras*

**THE ORIENTAL PUBLISHING HOUSE**
286, ESPLANADE, (APPAH BUILDINGS), MADRAS

Copyright] [Price As. 0-14-0